www.padippakam.com

# எம்.ஜி.ஆரும் ஈழத்தமிழரும்



வே. தங்கநேயன்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



1971 ஆம் ஆண்டு தமிழகம் வருகை புரிந்த ஈழத்தந்தை செல்வா அவர்களை மக்கள் திலகம் அவர்கள் தனது இல்லத்துக்கு அழைத்து அன்பும் ஆர்வமும் பொங்க அளவளாகின்றார்.




M. T. SINGAM
WUHRSTR. 28
CH. 8003 ZÜRICH
SWITZERLAND

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# எம்.ஜி.ஆரும் ஈழத்தமிழரும்

M. T. SINGAM
WUHRSTR. 28
CH- 8003 ZÜRICH
SWITZERLAND

வே. தங்கநேயன்

மணிபல்லவம் பதிப்பகம்
விற்பனை முகவரி
எண் 280, அண்ணாசாலை
புதுச்சேரி 1

படிப்பகம்

www.padippakam.com

எம்.ஜி.ஆரும் ஈழத்தமிழரும்

பதிப்பு : சுறவம் 1, 2030 திருவள்ளுவர் ஆண்டு (சனவரி 1999)

© : ஆசிரியருக்கு

முகப்பு ஓவியம் : என். ஜமால்

அச்சகம் :

புத்தக அளவு : கிரவுண் 1/8

பக்கங்கள் : 144

விலை : ரூபா 25-00

வெளியீடு : மணிபல்லவம் பதிப்பகம்

விற்பனை முகவரி : 280, அண்ணாசாலை
புதுச்சேரி 1

www.padippakam.com



இந்தப் புத்தகம் எழுதுவதற்கு துணையாக இருந்த நூல்கள், செய்திஏடுகள், நூலகம்-ஆய்வகம் ஆகியவற்றை நன்றியறிதலுடன் இங்கே குறிப்பிடுகின்றேன்.

சர்வதேச இனப்படுகொலைக்குற்றம்: திரு. லுட்ஸ் ஒயிட்
சிறீலங்காவில் தமிழ் மக்களின் நிலை) (Lutz Octte)

இலங்கையின் இன, வர்க்க முரண்பாடுகள்:
குமாரி செயவர்த்தனா

யாழ்ப்பாண நூல்நிலையம் ஓர் ஆவணம்:
மூதறிஞர் க.சி.குலரத்தினம்

தமிழ் இனப்படுகொலை:
திரு. எஸ்.டி.சோமசுந்தரம்

இந்தியப் பிரதமருக்கு பத்து கோரிக்கைகள்:
திரு.எஸ்.டி.எஸ்

**TAMIL TRAGEDY IN SRI LANKA:**
(A crusude at the United Nations)
திரு.பண்ருட்டி இராமச்சந்திரன்

**INDIANS IN SRILANKA:**
Dr.H.P.Chattopadhyaya

**INDIAN INTERVENTION IN SRILANKA:**
திரு.ரோகன் குணரத்தன

**ANCIENT CEYLON:**
MR. M.G. MENDIS

**BUDHISM NAGADIPA:**
Dr. PAUL PEIRIS

மகாவம்சம்:

படிப்பகம்

www.padippakam.com



**திராவிடர் கழக தலைமை நிலையத்தில் அமைந்துள்ள தந்தை பெரியார் நூலகம்-ஆய்வகம்**

வரலாற்றின் குரல்

போர்வாள்

விடுதலை

ஈழமுரசு

தமிழரசு

தராசு

**விழிகள் தேசிய ஆவண கோப்பு நிறுவனம்**

தினமணி

இந்து

ப்ரண்ட்லைன்

தந்தை செல்வா - எம்.ஜி.ஆர் படம்

சிறீலங்கா அரசு வெளியிட்ட சிங்களவர் வருகை அஞ்சல்தலை.

**சுபா நியூஸ் சர்வீஸ், சென்னை-14**

முகப்பு படம். 1983ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர் அவர்கள் நடத்திய ஊர்வலப் படங்கள்.

எம்.ஜி.ஆர்-- இந்திராகாந்தி படம்.

**கன்னிமாரா நூல்நிலையம்**

சட்டசபை நிகழ்ச்சி செய்திகள்

படிப்பகம்

www.padippakam.com



# முகவுரை

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள் ஈழத்தமிழர்கள் மீது கொண்டிருந்த அன்பும் நட்பும் ஆழமானது, உறுதியானது. இதுகுறித்த செய்திகளை ஆர்வத்துடன் சேகரித்து கட்டுரையாகத் தயாரித்தேன். இதை வரலாற்றில் பதிவு செய்யும் முகமாக புத்தகமாகக் கொண்டுவரச் சொன்னார்கள் நண்பர்கள்.

கட்டுரையை மட்டும் வைத்துக்கொண்டு புத்தகம் வடித்துவிட முடியாது. எனவே அதைக் கருவாகக் கொண்டு மேலும் செய்திகளைத் திரட்டினேன். அதோடு எம்.ஜி.ஆர் அவர்களின் சமகாலத் தலைவர்களுள் முக்கியமானவர்களையும் சந்திப்பதென்று முடிவுசெய்தேன்.

திரட்டிய செய்திகளோடு எம்.ஜி.ஆர்.அவர்களின் வலதுகரமாக விளங்கியவரும் அவரது அமைச்சரவையில் தமிழீழப் பிரச்சனையைக் கவனித்துக் கொண்டிருந்தவருமான திரு.பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களை அணுகினேன். “இப்படிப்பட்ட புத்தகம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும்” என்று கூறிய பண்ருட்டியார் அவர்கள், 17.9.98 அன்று விரிவாகப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தந்தார்கள்.

அன்றைய தினம், பண்ருட்டியார் அவர்கள் ஈழப் பிரச்சனையின் நிகழ்வுகளை ஒளிவு மறைவின்றி எடுத்துரைத்தார்கள். பண்ருட்டியாரின் கருத்துக்கள், எம்.ஜி.ஆர் அவர்களைப் பற்றிய இந்தப் புத்தகப் பணியைச் செய்ய என்னை மேலும் ஊக்கப்படுத்தின.

எம்.ஜி.ஆர் அவர்கள் ஈழத்தமிழர்களுக்கு செய்த உதவிகளை மட்டும் எழுதினால் ‘எதிர்கால சந்ததியினர் மனதில் எம்.ஜி.ஆர் அவர்கள் ஏன் இந்த உதவிகளைச் செய்தார்’ என்ற கேள்வி எழக்கூடும். ஆதலால் ஈழத்தமிழர்களின் தாயக வரலாற்றையும் சிங்கள இனவெறி அரசு அவர்களுக்குச் செய்த கொடுமைகளையும் விளக்கியபிறகு, மனித நேயத்தோடு எம்.ஜி.ஆர்

www.padippakam.com



அவர்களின் பங்களிப்பையும் எழுதினால்தான் வரலாறு முழுமையாக அமையும் என்று முடிவு செய்து "எம்.ஜி.ஆரும் ஈழத்தமிழரும்" என்ற இந்தப் புத்தகத்தை எழுதினேன்.

கணிப்பொறியில் அச்சாகியபிறகு திரு.பண்ருட்டியார் அவர்களிடம் படிப்பதற்காகக் கொடுத்தேன். அவர்கள் வரிவிடாமல் படித்து எழுத்துப்பிழைகளைத் திருத்தியதோடு நிற்காமல், "உலக அரங்கில் தமிழீழத்தின் குரல்" பகுதியில் விடுபட்டுப்போன செய்திகளையும் எழுதியிருந்தார்கள். அவர்களின் இந்தக் கடமை உணர்வைக் கண்டு வியந்து போனேன்.

புத்தக வெளியீடு பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். அதையும் பண்ருட்டியார் அவர்கள் தானே முன்னின்று நடத்தித் தருகிறேன் என்று சொன்னார்கள். அதுவும் தமது "மக்கள் நல உரிமைக் கழகம்" சார்பாகவே இதைச் செய்ய முன்வந்தார்கள் என்றால் அவரின் அரசியல் நேர்மையையும் ஈழத்தமிழர்கள் மீது அவர் கொண்டிருக்கும் அன்பையும் விவரிக்க வார்த்தைகள் ஏது!

பண்ருட்டியார் அவர்கட்கு ஒரே வார்த்தையில் "நன்றி" என்ற சொல்லை மட்டும் கூறிவிட்டு என்னால் இருந்துவிட முடியாது. என் உயிர் இருக்கும்வரை அவரின் நினைவுகள் என் நெஞ்சை விட்டு அகலாது.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ஐயா திரு.பழ.நெடுமாறன் அவர்கள் எம்.ஜி.ஆர் அவர்கள் காலத்தில் எதிர்வரிசையில் இருந்து செயல்பட்டவர். இவரது கருத்தையும் தெரிந்து கொண்டால் பயனுள்ளதாக இருக்கும் என்று அவர்களையும் சந்தித்தேன்.

தனது உடல்நிலையையும் பொருட்படுத்தாமல் கட்சிப்பணிகளுக்கு மத்தியிலும், ஈழத்தமிழர் பிரச்சனையில் எம்.ஜி.ஆர் அவர்களின் அரசைப் பற்றி தெளிவாகக் குறிப்பிட்டார்கள். அவர்கட்கு எனது உளமார்ந்த நன்றி.

படிப்பகம்

www.padippakam.com



அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலக்கிய அணிச் செயலாளர் திரு.புலமைப்பித்தன் அவர்களை சந்தித்தபோது, அந்த நாள் நினைவுகளை விவரித்தார்கள். அவர்கட்கும் என் நெஞ்சார்ந்த நன்றி.

வைக்கம் முதல் மதுரை வரை மூலை முடுக்கெல்லாம் சென்று சாதி, மத வெறியாட்டங்களுக்குப் பின்னால் இருக்கும் தமிழின விரோதிகளை இனங்காட்டி, "நாம் எல்லோரும் தமிழர்கள்; நமக்குப் பின்னால் சூழ்ச்சிக்காரர்கள் இருப்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்" என்று தீவிர பிரச்சாரப் பணி முடித்துத் திரும்பியதோடு டெல்லிக்கும் சென்று, மீண்டும் வெளியூர் செல்லப் புறப்படும் தறுவாயில்தான் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் ஆசிரியர் ஐயா கி.வீரமணி அவர்களிடம் புத்தகத்தின் நகலைக் கொடுத்தேன்.

இரவில் எப்போது தூங்கினார்கள்; எப்போது படித்தார்கள் என்றே தெரியவில்லை. மறுநாள் காலை நான் செல்லுவதற்கு முன்பே "எனது கருத்து" என்ற தலைப்பில் தனது கருத்தை எழுதிக் கொடுத்து விட்டு சென்றிருந்தார்கள்.

இப்புத்தகம் வெளிவந்தாக வேண்டுமென்ற அவசியத்தையும் அவசரத்தையும் உணர்ந்துதான் தந்தை பெரியாரின் உண்மை மாணவராகத் திகழும் ஆசிரியர் அவர்கள் உடனடியாக இதற்கு மதிப்பளித்திருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது.

தமிழர் தலைவர் ஆசிரியர் அவர்கட்கு எனது நன்றியை செலுத்துகிறேன்.

ஆய்வுரை வழங்கிய திரு எஸ்.ஏ.டேவிட் ஐயா அவர்கள் தமிழீழத்தைச் சேர்ந்தவர். கென்யா நாட்டின் இரண்டாவது தலைநகர் மாம்பச (Mombasa) நகர அமைப்புக்கு வரைபடம் வரைந்து கொடுத்துப் புகழ்பெற்ற பொறியாளர்.

மேற்கத்திய நாடுகளில் பெரிய பதவிகள் தேடி வந்தும் அவற்றையெல்லாம் உதறித்தள்ளிவிட்டு தாயகம் திரும்பி, திருமணமே செய்து கொள்ளாமல் "காந்தியம்" என்ற அமைப்பின் தலைவராக இருந்து மறுவாழ்வுக் குடியேற்ற இல்லங்களை ஏற்படுத்தி நலிவுற்ற தமிழர்களுக்கு உதவிகள் புரிந்தவர்.

www.padippakam.com



இவரையும் சிங்கள இனவெறி அரசு சிறைப்படுத்திச் சித்திரவதை செய்தது.

மட்டக்களப்பு சிறையுடைப்பின்போது தப்பி தமிழகம் வந்து, எழுத்துப் பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, வறுமையில் வாழ்ந்து வருகிறார். இந்தப் புத்தகத்திற்கு ஆய்வுரை வழங்கி பெருமை சேர்த்தமைக்காக ஐயா அவர்கட்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

அணிந்துரை வழங்கிய திரு கா.ஜெகவீரபாண்டியன் அவர்கள், ஈடு இணையற்ற மனிதாபிமானியும் சமூகநீதிக் காவலரும் ஆன திரு.வி.பி.சிங் அவர்களின் வழிகாட்டுதலை ஏற்று செயல்படுபவர் ராஷ்ட்ரீய ஜனதா தளத்தின் தமிழக தலைவர். இனமான உணர்வுமிக்க திரு.ஜெகவீரபாண்டியன் அவர்கள் இந்தப் புத்தகத்திற்கு அணிந்துரை அளித்திருப்பதை சிறப்பாகக் கருதுகிறேன். அண்ணன் அவர்கட்கு என் இதயம் கனிந்த நன்றி.

இப்புத்தகத்திலும் பின் அட்டையிலும் எம்.ஜி.ஆர் அவர்களோடு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் படம் உள்ளது. இது 'ப்ரண்ட்லைன்' ஏட்டில் வெளியாகியது. அவர்கட்கும் என் நன்றி.

எனது பணிகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்த திராவிடர் கழகத்தைச் சேர்ந்த தந்தை பெரியாரின் பெருந்தொண்டர் ஐயா ரேடியம் பகீரதன் அவர்களுக்கும் நண்பர் இரமணிகாந்தன் அவர்கட்கும் நன்றி.

சென்னை
12.1.1999. வே.தங்கநேயன்

www.padippakam.com



பொதுச் செயலாளர்
**கி.வீரமணி** எம்.ஏ.,பிஎல்.
திராவிடர் கழகம்
50, ஈ.வெ.கி.சம்பத் சாலை
வேப்பேரி, சென்னை-600 007

## எனது கருத்து

ஈழத்தமிழர்கள், அண்டை நாடான இலங்கையில் குடியேறிய தமிழர்கள் அல்ல; அவர்கள் அந்த மண்ணின் மைந்தர்கள், மண்ணுக்குரியவர்கள். இந்த வரலாற்றை முறையாக அறியாத பல படித்த தற்குறிப் பெருமக்கள், அவர்களது நியாயமான சட்டபூர்வமான விடுதலை வேட்கையைப் புரிந்துகொள்ள மறுக்கின்றனர்!

ஆனால் தமிழ் ஈழத்தில் ஏன் இப்படி இனப்படுகொலை நடைபெறுகிறது? அதனைத் தடுத்து நிறத்திட தம்மால் ஆன அனைத்தையும் செய்திடவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் வெறும் பேச்சாக மட்டுமல்ல, செயலில் உதவிகளைச் செய்து காட்டிய பெருமகன் மறைந்தும் மறையாமல் மக்கள் நெஞ்சங்களில் நிறைந்து வாழுகின்ற மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் ஆவார்!

நண்பர் தங்கநேயன் அவர்கள் சிறப்பாக எழுதியுள்ள இந்த பொத்தகம் ஒரு தகவல் சுரங்கம் ஆகும். எம்.ஜி.ஆரும் ஈழத்தமிழரும் என்ற தலைப்பில் ஈழ மக்களை மிகவும் நேசித்த தமிழ்நாட்டுத் தலைவர்களில் மதிப்புமிகு எம்.ஜி.ஆர் அவர்கள் மிகவும் முக்கியமானவர் என்பதை நன்கு விளக்கியுள்ளார்.

அவர் ஆட்சியில் இருந்துகொண்டே, ஈழத் தமிழர்களுக்கு அவர்கள் மகிழும் வண்ணம் உதவினார். போராளிகளில் யாரை, எப்படி, எப்பொழுது சரியாக அடையாளம் காணமுடியுமோ அப்படிக் கண்டு உதவினார். அதில் அவர் தன்னை முன்னிலைப் படுத்திக்கொள்ளாது, பிரச்சினையின் அவசர, அவசியத்தை மட்டும் பார்த்து உதவினார். இதை பற்பல நேரங்களில் உதவி

www.padippakam.com



பெற்றவர்கள் நேரில் நன்றி உணர்வு பொங்க குறிப்பிட்டதைக் கேட்கும் வாய்ப்புப் பெற்றவன் யான்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள் ஈழத்தமிழர்களுக்கு செய்த உதவியின் உண்மையான ஆழத்தையும், அகலத்தையும் கனபரிமாணத்தையும் ஒருவர் சரியாக அறிந்துகொள்ள வேண்டுமானால், ஈழத் தமிழர்களின் தாயக வரலாற்றையும், அவர்களை இல்லாதவர்களாக அழித்து ஒழிக்க அன்றாடம் அலையும் சிங்களப் பேரினவாதத்தின் கொடுமையையும் உணரவேண்டும் என்ற அணுகுமுறையை மய்யப்படுத்தி இந்தப் பொத்தகத்தை உருவாக்கியுள்ளார் நண்பர் தங்கநேயன் அவர்கள்.

பல்வேறு பயனுறு தகவல்களை அவர் "தேனீ" போல பறந்து திரிந்து திரட்டி தேனடையாக வாசகர்களுக்கு தந்துள்ளார். நான் படித்தேன். எனக்கு அது 'படித்தேனாகவே' இனித்தது. நீங்களும் படியுங்கள்!

இவ்வளவு அருமையான தகவல்களைத் திரட்டியுள்ள நூலாசிரியர் நண்பர் தங்கநேயன் அவர்களுக்கு நமது பாராட்டுதல்கள்.

சென்னை
08.01.1999

**கி.வீரமணி**
பொதுச் செயலாளர்
திராவிடர் கழகம்.

www.padippakam.com



# ஆய்வுரை

எம்.ஜி.ஆர் ஓர் அபூர்வ பிறவி. தம் வாழ்நாளில் தமிழ் சினிமாவிலும் தமிழ்நாட்டு அரசியலிலும் கொடி கட்டிப் பறந்தவர். இதைத் தமிழர்களும் உலகமும் நன்கு அறியும். இவை யாவற்றுக்கும் மேலாக எம்.ஜி.ஆர் தமிழீழச் சுதந்தி போராட்டத்துக்கு அடித்தளம் அமைத்தவர். இதை ஒரு சிலரே அறிவர். இந்நூலில் ஆசிரியர் தங்கநேயன் திரைமறைவில் இருந்த பல செய்திகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து, எம்.ஜி.ஆரின் மனித நேயத்தையும் செயல் வீரத்தையும் நிலைநாட்டுகிறார்.

ஆரம்பத்தில் எம்.ஜி.ஆரின் மனித நேயத்தை விளக்குகிறார். அதோடு, மனித உரிமை மீறல் கொடுமைகளையும் பட்டியலிட்டுக் கூறுகிறார். சிங்கள இனவெறிக்கு பலியாகின எமக்கு நூல் ஆசிரியருடைய விளக்கங்கள் முழுமையும் உண்மை என்பது தெளிவாகிறது. இந்த விளக்கம் எதிர்கால சந்ததியினருக்கு வரலாற்றை அறிய உதவியாக இருக்கும். தமிழீழ சரித்திரத்தின் பின் பிற்பகுதியில் ஈழத்தமிழர்களைச் சிங்கள பேரின வாதப் பிடியிலிருந்து மீட்க எம்.ஜி.ஆர் மேற்கொண்ட முயற்சிகளை விளக்குகிறார்.

1982ல் சிங்கள அரசு பிரபாகரனையும் முகுந்தனையும் தம்மிடம் ஒப்படைக்கக் கேட்கிறார்கள். எம்.ஜி.ஆர் உறுதியாய் மறுக்கிறார். இந்நிலையில் மத்திய அரசையும் இதை ஏற்கச் செய்கிறார். எம்.ஜி.ஆர் இந்நிலையில் தவறியிருந்தால் தமிழீழப் போராட்டம் தொடங்கியிருக்கவே முடியாது.

சிங்களவர்கள் கொடுமையை எம்.ஜி.ஆர் முழுமையாய் அறிந்திருந்தார். இந்திரா காந்தியையும் இதை ஏற்கச் செய்கிறார். இந்திரா காந்தி உதவியுடன் பண்ருட்டி இராமச்சந்திரனை ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பி சிங்கள பேரினவாதக் கொடுமைகளை உலக அரங்கில் அம்பலப்படுத்தினார். இந்திரா காந்தி உதவியுடன் தமிழீழப் போராளிகளுக்குப் பயிற்சி கொடுக்க வழி வகுத்தார்.

படிப்பகம்

www.padippakam.com



மேலும் தம்மிடம் இருந்த பணத்தை அள்ளி வாரி இறைத்து தமிழீழ விடுதலைப் புலிகளை கண்ணும் கருத்துமாக வளர்த்தெடுத்தார்.

எம்.ஜி.ஆருக்கும் பிரபாகரனுக்கும் இடையில் ஏற்பட்ட நட்புறவு தமிழீழ சுதந்திரப் போர் வளர்ச்சிக்கு பேருதவியாக இருந்தது.

நூலாசிரியர் தங்கநேயன் சரியான முறையில் விளக்கியிருக்கிறார்.

எம்.ஜி.ஆர், செயவர்த்தனாவின் அக்கிரமங்களைக் கண்டிக்கிறார். விளைவுகளை தூசு என மதித்தார். பணத்தை வெளிப்படையாகக் கொடுக்கிறார். பதவி போனால் பரவாயில்லை என்கிறார்.உடல் நலம் குன்றி படுக்கையிலிருந்தபோதும் "புலிகளை விழவிடாதீர்கள், புலிகளைக் காப்பாற்றுங்கள்" என்று கதறி அழுததையும் நூல் குறிக்கிறது.

எம்.ஜி.ஆர் முழுமையாகவே தமிழீழ மக்களின் சுதந்திரத்திற்காக தன்னை அர்ப்பணித்தவர் என்பதை ஆசிரியர் தங்கநேயன் தெள்ளத் தெளிவாக விளக்குகிறார்.

மேலும் பண்ருட்டி இராமச்சந்திரன், நெடுமாறன், புலமைப்பித்தன் பேட்டிகளால் நிகழ்ச்சிகளை உறுதிப்படுத்துகிறார்.

எம்.ஜி.ஆர் இல்லாதிருந்தால், தமிழீழச் சுதந்திரப் போராட்டம் இன்றைய நிலைக்கு வளர்ந்திருக்க முடியாது. பிரபாகரன் தம் இறுதி அஞ்சலியில் எம்.ஜி.ஆர்செய்த உதவிகளை உறுதிப்படுத்துகிறார்.

எம்.ஜி.ஆரை எதிர்த்த சக்திகள் சூழ்ச்சி வலை வீசின. தமக்கே உரிய பாணியில் எம்.ஜி.ஆர் யாவையும் முறியடித்தார். ஆசிரியர் மிகவும் நுணுக்கமாய் ஆய்வுசெய்து இப்பகுதியை எழுதியிருக்கிறார்.

எம்.ஜி.ஆருக்கு ராஜீவ் காந்தியின் செயல்களில் நம்பிக்கை இல்லை. இந்திய இலங்கை ஒப்பந்தத்தை வெறுத்தார். மெரீனா

www.padippakam.com



கூட்டத்தில் ராஜீவ் காந்தி எம்.ஜி.ஆர் கையை உயர்த்திப் பிடிக்கிறார். இதை புலமைப்பித்தன் சுட்டிக் காட்டுகிறார். அப்போது பத்திரிகைகளில் பலர் பார்த்திருக்கக்கூடும்.

எம்.ஜி.ஆர் செய்ததில் பத்தில் ஒரு பங்கையானும் அவருக்குப் பின்வந்த தமிழ்நாட்டுத் தலைவர்கள் மேற்கொண்டிருந்தால் தமிழீழச் சுதந்திரப் போராட்டம் இன்று பல படிகள் முன்னேறியிருக்கும்.

நூல் ஆசிரியர் தங்கநேயன் முயற்சிகளை தமிழர்கள், விசேடமாய் ஈழத்தமிழர் போற்றிப் பாராட்ட வேண்டும். இந்நூல் ஒவ்வொரு தமிழர் வீட்டிலும் இருக்க வேண்டும்.

ச.அ.டேவிட்
தலைவர், காந்தீயம்,
இலங்கை.

சென்னை
11.1.1999

www.padippakam.com



# அணிந்துரை

புதிய நூற்றாண்டை நோக்கிய புதுயுகத்தில் மானுடம் காலடி எடுத்துவைக்கிறது. முடியப்போகும் இந்த இருபதாம் நூற்றாண்டு மனித வரலாற்றில் பெரும் திருப்பங்களை ஏற்படுத்தியது. போர், புரட்சி, போராட்டம் என்று இப்பூமியில் பூகம்பமாக வெடித்த நிகழ்வுகள், சர்வதேச நிலைமைகளில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின. நெருக்கடிகள் தணிந்து மனித சமூகங்கள் சுதந்திரமாக அமைதியுடன் வாழ வழிபிறந்தது.

தேசிய விடுதலைப் போராட்டங்கள் வெற்றிபெற்று சுதந்திரமான தனியரசுகள் தோன்றின.

முழு உலகமும் அமைதிப் பாதையில் முன்னேறிச் சென்று பிறக்கப்போகும் புதுயுகத்திற்குத் தன்னை தயார் செய்யும் இன்றைய சூழலில், இலங்கைத் தீவில் மட்டும் மிகவும் கொந்தளிப்பான நிலைமை நிலவிவருகிறது. இங்கு தமிழர்களின் தேசியப் பிரச்சனை இன்னும் தணியாத நெருப்பாக எரிந்து கொண்டிருக்கிறது என்று இலங்கையில் இன்று நிலவிவரும் துயரமான நிலைகுறித்து மாவீரர் நாள் குறித்த தனது செய்தியில் தமிழீழ மக்களின் தலைவர் திரு.பிரபாகரன் கூறியுள்ளார்.

இலங்கை அரசின் பயங்கரவாத, ராணுவ அடக்குமுறைகளை நேர்கொண்டு அதனை முறியடிக்க கால் நூற்றாண்டுக்கும் மேலாக இடையறாத ஓர் மாபெரும் விடுதலைப் போராட்டத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் நடத்தி வருகிறது. ஈழத்தமிழர்கள் மீது தொடர்ந்து ஏவப்பட்டு வந்த அரச பயங்கரவாதத்தை எதிர்த்து கால் நூற்றாண்டிற்கும் மேலாக தமிழர் தலைவர்கள் நடத்திவந்த சாத்வீக போராட்டத்தின் தொடர்ச்சியே இன்றைய தினம்வரை தொடரும் ஈழத்தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப்போர் என்பதை இலங்கை குறித்த வரலாறு, விவரம் அறிந்த அனைவரும் ஒப்புக்கொள்வர். இதை இந்தநூலும் உறுதிப்படுத்துகிறது.

www.padippakam.com



இலங்கை அரசின் இன ஒடுக்கலை எதிர்த்து ஆயுதம் தாங்கிய விடுதலைப் போரை தொடங்கிய பின்பு, தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு தமிழ்நாட்டு மக்கள் அளித்த ஏகோபித்த ஆதரவும், அன்றைய தினம் தமிழகத்தின் முதல்வராய் திகழ்ந்த அமரர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அளித்த நேரடியான ஆதரவுமே அவர்களின் மன உறுதியைக் குலையாமல் காப்பாற்றி வருகின்றன என்று சொன்னால் அது மிகையல்ல. உண்மை.

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் வழங்கிய ஆதரவு எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது ஈழவிடுதலைப் போரை உற்று நோக்கிக் கொண்டிருந்த அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும். அவர் செய்த உதவி அரசியற்பாற்பட்டதல்ல. அது அவரிடம் வேரூன்றிவிட்ட தமிழ், தமிழர் எனும் உணர்வின் பாற்பட்டது. மனமுவந்து செய்தார். அன்புடன் செய்தார். எல்லாவற்றிற்கும் மேலாக அவையனைத்தையுமே காலத்தே செய்தார். டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஆற்றிய பேருதவியே இன்றளவும் தமிழீழ விடுதலைப் போராட்டம் நிலைத்து, வேரூன்றி நீடித்து நிற்க காரணியாகவும், காரணமாகவும் இருந்துள்ளதை இந்நூலாசிரியர் நன்கு ஆராய்ந்து எழுதியுள்ளார்.

ஈழத்தமிழர்களை வேட்டையாடிவந்த இலங்கை இராணுவத்தையும், காவல்துறையையும் எதிர்த்து சமாளிக்கத் தேவையான ஆயுத பலத்தையும், அதற்குரிய பயிற்சியையும் இந்திய அரசும், அன்றைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையாரும் அளித்து உதவியது மறக்கமுடியாதது.

இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் தனது இறுதி மூச்சுவரை செயவர்த்தனாவை நம்பவே இல்லை. அதன்பிறகு பிரதமராக பொறுப்பேற்ற இராசீவ்காந்தி அவர்கள்தான் செயவர்த்தனாவை நம்பி, இந்திய இராணுவத்தை அனுப்பினார். தமிழர்களை பாதுகாப்பதற்கு பதிலாக இந்திய இராணுவம் தமிழர்களை கொன்று குவித்தது.

www.padippakam.com



இந்தியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, பிரதமராகப் பொறுப்பேற்ற ஈடுஇணையற்ற மாபெரும் மனிதாபிமானி திரு.வி.பி.சிங் அவர்கள்தான், இந்திய இராணுவம் முழுவதையும் திரும்ப அழைத்தார். இது ஈழ விடுதலை வரலாற்றில் முக்கிய இடம் பெற்றது.

ஒரு மாநிலத்தின் முதல்வராய் இருந்து கொண்டு டாக்டர் எம்.ஜி.ஆர் அளித்த உதவிகள் ஈடிணையற்றவையாகும்.

இன்றைக்கும் ஈழ விடுதலைப் போர் தொடர்கிறது என்றால் அதற்கான டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் பங்களிப்பை எவராலும் மறக்கவும் முடியாது. மறுக்கவும் இயலாது. அப்படிப்பட்ட உன்னத தலைவர், ஈழமக்களுக்கு ஆற்றிய உதவிகள் குறித்து இயற்றப்பட்ட இந்நூலின் மூலம் ஓர் மிகப்பெரிய மகத்தான வரலாற்றுப் பணியினை இதன் ஆசிரியர் திரு வே. தங்கநேயன் செய்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் போராட்டமும் விடுதலைப்புலிகளின் தியாகமும் புதிய வரலாறு படைத்துவரும் இக்காலகட்டத்தில் இப்படிப்பட்ட புத்தகத்தை வெளியிட முன்வந்தமைக்காக திரு.வே. தங்கநேயன் மிகுந்த பாராட்டுதலுக்கு உரியவராகிறார்.

சென்னை
2.1.1999

கா. ஜெகவீரபாண்டியன்
மாநிலத் தலைவர்
(ராஷ்ட்ரீய ஜனதா தளம்)

www.padippakam.com



# மக்கள் திலகம்

**எம்.ஜி.ஆர்** அவர்களின் தந்தையார் இலங்கையிலுள்ள கண்டியில் ஆசிரியராக பணியாற்றினார். எம்.ஜி.ஆர் அவர்கள் 17-1-1917 ஆம் நாள் பிறந்தார். பிறகு இவரது குடும்பத்தினர் சூழ்நிலை காரண்மாக தமிழகம் வந்து கும்பகோணத்தில் குடியமர்ந்தார்கள்.

எம்.ஜி.ஆர் அவர்கள் சிறுவயதில் இருந்தே பசியோடும் பட்டினியோடும் போராடி வாழ்க்கைக் கடலில் எதிர் நீச்சல் போட்டவர். இதுவே அவரது இறுதி நாள்வரைக்கும் அவர் மனதில் பசுமரத்து ஆணிபோல் பதிந்திருந்தது.

ஒரு சாதாரண தொழிலாளியாக அடிமட்டத்திலிருந்து தொடங்கி, தமிழக அரசியலின் உச்சக்கட்டம்வரை சென்று சாதனை புரிந்தார். இந்தப் பாதையில் அவருக்கு அவரே வழிகாட்டியாகவும் இருந்தார்.

மக்கள் திலகம் அவர்கள் தனக்கு ஏற்படுகின்ற அனுபவத்தைக் கொண்டே அடுத்தவர்களின் துன்பத்தை புரிந்து கொண்டார்கள். 1967-ல் நடிகர் எம்.ஆர்.ராதா, எம்.ஜி.ஆர் அவர்களை துப்பாக்கியால் சுட்டார். அவரின் தொண்டைப் பகுதியில் குண்டு பாய்ந்தது. அறுவை சிகிச்சை செய்தும் குண்டை அகற்றமுடியவில்லை. இதனால் வாழ்நாள் முழுவதும் வேதனையை அனுபவித்தார்கள்.

www.padippakam.com



அன்று முதல் நிராயுத பாணியாக இருந்தால் எதிரிகளின் தாக்குதலுக்கு இரையாக வேண்டி வரும் என்பதை உணர்ந்து கொண்டார்.

சிங்கள இனவெறி அரசு ஈழத்தமிழ் மக்கள் மீது குண்டுமாரி பொழிந்ததாலும் துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுட்டதாலும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் இறந்து போனதையும் கை, கால் இழந்து சொல்லொணாத் துயரம் அனுபவிப்பதையும் பார்த்து துடித்துப் போனார் எம்.ஜி.ஆர்.

தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு பார்க்கும்போது ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமை பன்மடங்கு அதிகம் என்பதை உணர்ந்த எம்.ஜி.ஆர் அவர்கள் ஈழத் தமிழர்களின் நியாயமான ஆயுதப் போராட்டத்தை வெளிப்படையாக ஆதரிக்க முன்வந்தார்.

பின்னர் ஈழத்தமிழ் மக்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் மனிதநேயத்தோடு எண்ணற்ற உதவிகளை மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள் செய்ய முன்வந்தார்.

இதையெல்லாம் தெரிந்து கொள்ளும் முன், ஈழத் தமிழரின் தாயக வரலாற்றையும் சிங்கள இனவாத அரசு தமிழினத்தைப் பூண்டோடு அழிக்கும் கொடூர முயற்சியில் ஈடுபட்டிருப்பதையும் முழுமையாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆதரவும் உதவியும் எவ்வளவு மகத்தானது என்பதையும் அவசியமானது என்பதையும் உணர முடியும்.

www.padippakam.com



# தமிழீழ வரலாறு

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில், இலங்கை தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக, அதன் தொடர்ச்சியாக அமைந்திருந்தது. இலக்கியச் சான்றுகளும், புவியியல் ஆய்வுச் சான்றுகளும் இதனை உறுதி செய்கின்றன.

தமிழகமும் இலங்கையும் சேர்ந்த நிலப்பகுதிக்கு ‘குமரிக் கண்டம்’ என்ற பெயர் வழங்கிற்று. குமரிக்கண்டத்தை கடல் கொண்ட பின்னர் இலங்கை தனித்தீவாக துண்டிக்கப்பட்டது. திரு.மெண்டிஸ் என்ற இலங்கை வரலாற்றாசிரியரே இதனை உறுதிப்படுத்துகிறார்.

இதே கருத்தை இலங்கையின் பிரபல வரலாற்று ஆசிரியரான முனைவர் திரு. போல் பீரிசும் ஏற்கிறார். அவர் “சிங்கள விஜயன் இலங்கைக்கு வருமுன் தமிழர்களே இலங்கை முழுவதும் பரவி இருந்தனர்” என்றும் “கிழக்கில் திருக்கோணேசுவரம், மேற்கில் திருக்கேதீசுவரம், வடக்கில் நகுலேசுவரம், தெற்கில் முன்னேசுவரம் என்ற சைவக்கோவில்கள் அமைக்கப்பட்டு வழிபட்டதையும்” குறிப்பிடுவதன் மூலம் இது தெளிவாகிறது.

www.padippakam.com



அன்றைய தமிழ் கூறும் நல்லுலகம், குமரிக் கண்டம் என்பதை சிலப்பதிகாரமும் தெளிவுபடுத்துகிறது:

**"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்**
**குமரிக் கோடும் கொடுங் கடல் கொள்ள**
**வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு**
**தென்திசை யாண்ட தென்னவன் வாழி!''**

'ஞாலம்-ஞாயிறு குமரிக்கண்டம்' என்ற தலைப்பில் ஆய்வு செய்த உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க தலைவர் பேராசிரியர் இர.ந.வீரப்பனார் எழுதுகிறார்: ஏழ்தெங்க நாடான, வட இலங்கையான தமிழீழம் பழங்குமரிக் கண்டத்தின் வடபகுதி நாடு. பழைய ஈழ நாட்டின் கால்வாசி மண்ணே இப்போது உள்ளது."

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, எல்லாளன் என்ற தமிழ் மன்னர் இலங்கையில் நல்லாட்சி நடத்தியுள்ளார். ஈழத்தை ஆண்ட கடைசித் தமிழ் மன்னர் சங்கிலியன். இவர் போச்சுக்கீசியருக்கு அடிபணிய மறுத்து போராடினார். போர்ச்சுகீசியர் சங்கிலியனை சிறைப்பிடித்தனர். பிறகு கோவாவில் தூக்கில் போட்டு சாகடித்தனர்.

## வந்தேறிகள்

ஈழத்தமிழர்களின் சொந்த மண்ணில்தான் சிங்களவர்கள் தஞ்சம் புகுந்தனர். இதை சிங்களவர் வரலாற்று நூலான "மகாவம்ச"வும் கூறுகிறது. விஜயன் என்பவனும் அவனுடைய 700 நண்பர்களும் கி.மு.500 ஆம் ஆண்டு, கலிங்கநாட்டிலிருந்து (இப்போதைய வட இந்தியப்பகுதி) இலங்கைக்கு வந்தார்கள் என்பதிலிருந்தே சிங்களவர்கள் வரலாறு தொடங்குகிறது.

சிங்கள விஜயன் பெற்றோர்களை மீறி கொடுஞ்செயல்கள் புரிந்து குடிமக்களின் பலத்த கோபத்திற்கு ஆளானவன். இதனால்

www.padippakam.com



தன் தந்தையால் வெளியேற்றப்பட்ட இவனுக்கு ஒருவரும் ஆதரவு தரவில்லை. நாடோடிபோல் அலைந்து கொண்டிருந்தவன், கடைசியாக காசி நகருக்குப் போய் தங்கினான். அதன்பிறகுதான் இவன் கடல் வழியாகப் பயணம் செய்து 'தம்பாபணி' என்ற தமிழ் ஊரில் வந்து கரையேறினான்.

விஜயன் இலங்கை வந்தடைந்து 2,500 ஆண்டுகள் நிறைவடைந்ததை நினைவூட்டும் வகையில் சிறீலங்கா அரசு ஒரு அஞ்சல் தலையை வெளியிட்டது. அதில் விஜயன் தோணியில் வந்து சேர்ந்து இலங்கைக் கரையில் ஏறிவருகிறான். அப்போது பூர்வீக தமிழ்க்குடிப் பெண்ணான குவேனி, ஒரு மரத்தின் கீழ் அமர்ந்திருக்கிறாள். இந்த அஞ்சல் தலை சொல்லும் வரலாறு என்ன? தமிழர்களே ஈழத்தின் பூர்வீகக் குடிமக்கள்; "கள்ளத்தோணி" களில் வந்து குடியேறியோரின் வம்சாவளியினரே சிங்களர்கள். இந்த வரலாற்று உண்மை நெஞ்சைச் சுட்டதும் சிங்கள அரசு அவசர அவசரமாக இந்த அஞ்சல் தலையைத் திரும்பப் பெற்றுக்கொண்டது.




**சிங்களவர்கள் இலங்கையில் குடியேறி 2,500 ஆண்டுகள் நிறைவடைந்ததை நினைவூட்டும் அஞ்சல்தலைப் படம்.**

www.padippakam.com



எனவே, இடத்தைக் கொடுத்தான் தமிழன்; மடத்தைப் பிடுங்கினான் சிங்களவன். நிழலுக்கு ஒதுங்கியவன் மரத்தை வெட்டியது போல் சிங்களவர்கள் தமிழர் நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டனர்.

விஜயன் இலங்கைக்கு வந்த நாள் தொடக்கம் அமைதியாக வாழ்ந்த தமிழர்களுக்கு தொல்லை கொடுக்க ஆரம்பித்தான். அதோடு தனக்கென்று ஒரு படையும் நிறுவிக் கொண்டான்.

இந்தப் படையினர் தமிழர்களுக்கு செய்த கொடுமைகள் ஏராளம். இதைப் பார்த்த தமிழ்நாட்டுப் போர்வீரர்கள் கி.மு.170ல் சோழநாட்டு அரசன் தலைமையில் இலங்கை மேல் போர் தொடுத்து கி.பி.1600ல் அதாவது ஐரோப்பியர் இலங்கைக்கு வரும்வரை சிங்களரின் ஆணவத்தை கட்டுப்படுத்தினார்கள்.

சிங்களவர்கள் பின்னர் தென்னிலங்கையில் தமது ஆட்சியை நிறுவி ஆதிக்கம் செலுத்தினர். இருந்தபோதும் இலங்கையில் ஆட்சிசெய்த போச்சுக்கீசியர்களும், டச்சுக்காரர்களும் வடகிழக்கு தமிழர் பகுதிகளில் தமிழர் ஆட்சியை ஏற்று நடத்தினர்.

ஆனால் ஆங்கிலேயர் 1883ல் தமிழ் ஆட்சியைக் கலைத்து சிங்களவர்களுடன் தமிழர்களைச் சேர்த்து இலங்கையில் ஒற்றை ஆட்சியை அமைத்தனர். நாளடைவில் சட்டசபை நிர்வாகத்தை சிங்களரிடம் ஒருதலைப்பட்சமாக ஒப்படைத்தார்கள். இதுவே சிங்களவர் ஆதிக்கம் நிலைகொள்ளக் காரணமாக அமைந்தது.

படிப்பகம்

www.padippakam.com



# மனித உரிமை மீறல் கொடுமைகள்

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பௌத்தம் "மறுமலர்ச்சி மதம்" என்ற பெயரில், சிங்களக் கும்பல் 1883 ஏப்ரலில் தமிழ் கிறித்துவர்களை கொழும்பு நகரில் தாக்கினார்கள். ஒருவர் இறந்தார். 30 பேர் காயம் அடைந்தார்கள்.

1915 ஆம் ஆண்டில் தமிழ் முசுலிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே மிகப்பெரிய கலவரம் நடந்தேறியது. இதில் நூற்றுக்கணக்கானோர் இறந்தார்கள். இதைப் பற்றி குறிப்பாக பிரபல சிங்கள முற்போக்கு எழுத்தாளர் குமாரி செயவர்த்தனா, "தமிழர் எதிர்ப்பியக்கப் பிரச்சாரம் கிறித்துவர் களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் எதிராக முந்தைய கால கட்டத்தில் காணப்பட்ட உணர்விலிருந்து தோன்றியனவாகும்" என்றார்.

இப்படியாகத்தான் இலங்கையில் புத்தமதத்தை தழுவிக் கொண்ட சிங்களவர்களும் சிங்கள புத்தபிக்குகளும் ஈழத் தமிழர்களை ஆதிக்கம் செய்வது தொடர்கதையாகிவிட்டது.

உடல் உழைப்பை விரும்பாத சிங்கள இளைஞர்களும் காடையர்களும்தான் புத்த பிக்குகளாய் சேர்க்கப்பட்டார்கள்.

www.padippakam.com



இவர்களின் செல்வாக்கும் ஆதிக்கமும் அரசியலில் அதிகரித்தது. நாளடைவில் புத்தபிக்குகளின் சீடர்களாகவே அரசியல்வாதிகள் தங்களை அடையாளம் காட்டிக்கொள்ளத் தொடங்கினார்கள்.

ஆங்கிலேயரிடமிருந்து சிங்களவர் வசம் நாடு வந்தவுடன் புத்தபிக்குகளின் ஆதிக்கம் அரசு நிர்வாகத்தில் முழுவீச்சில் பரவத் தொடங்கியது.

தமிழர்களை பூண்டோடு அழிப்பதற்கு புத்தசாமியார்கள்-அரசியல்வாதிகள் கூட்டு சதித்திட்டம், அரசியல் கட்சிகளின் பொது மேடைகளில் வெளிப்படத்தொடங்கியது.

## தமிழர் குடியுரிமைப் பறிப்பு

இலங்கையின் முதல் பிரதமர் டி.எசு.செனநாயக்கா ஈழத்தமிழர்களின் செழிப்பான விளைநிலங்களைக் கைப்பற்றி சிங்களவர்களுக்கு கொடுத்து மகிழ்ந்தார். காடுகளை அழித்து செல்வம் செழிக்கும் நாடாக மாற்றிய மலையகத் தமிழர்களை இலங்கையை விட்டே விரட்டுவதற்காகவே 1948 டிசம்பரில் குடியுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதனால் 6 இலட்சம் தமிழர்கள் 1949ஆம் ஆண்டு வாக்குரிமை பறிக்கப்பட்டு அனாதைகளாக்கப்பட்டனர். இதற்கு டிஎசு.செனநாயக்காவின் சிங்களப் பேரினவாத கொள்கையே காரணமாக இருந்தது.

மலையகத் தமிழர்களின் உரிமைக்கு குரல் கொடுத்த தந்தை செல்வநாயகம் சட்ட விரோத குடியுரிமைச் சட்டத்தை வன்மையாக எதிர்த்தார்.

1951 ஆம் ஆண்டு எசு.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்கா சிறீலங்கா சுதந்திர கட்சியை நிறுவினார். இவரது கட்சியினரும் புத்தபிக்குகளும் இணைந்து கொண்டு, தமிழர்களுக்கு எதிராக தனி சிங்கள ஆட்சிமொழி சட்டம் அவசியம் தேவை என்று நாடெங்கும் பிரச்சாரம் செய்தார்கள். இதைக் கண்டு மிரண்டு

www.padippakam.com



போன அப்போதைய பிரதமர் சர்.ஜான் கொத்தலாவல இருமொழிக் கொள்கையை காற்றில் பறக்க விட்டார்.

## இனவெறி சட்டம்

புத்தபிக்குகளின் பெரும் ஆதரவும், சிங்கள வெறியர்களின் அரவணைப்பும் இருந்ததால் 1956ஆம் ஆண்டு தேர்தலில் பண்டாரநாயக்காவின் கூட்டணி வெற்றி பெற்றது.

சிங்கள வெறிக் கொள்கையை பின்பற்றும் பண்டாரநாயக்கா அரசு, சிங்கள ஆட்சிமொழி சட்டத்தை 1956ஆம் ஆண்டு அமுல்படுத்தியது. இதன்மூலம் இனவாத அரசு என்பது நிரூபணமாயிற்று.

1956க்கு பிறகு தமிழர்களின் வேலை வாய்ப்பு பறிபோகத்தொடங்கியது. இதன் பிறகுதான் தமிழ்மொழிக்கும் தமிழர் பண்பாட்டுக்கும் ஆபத்துகள் வந்தன.

இனவாத பண்டாரநாயக்கா அரசு, 'புதிய நீர்ப்பாசனத் திட்டம்' என்ற ஒன்றை கொண்டு வந்து, அதை தமிழர் தாயகமான ஈழத்தில் நிறைவேற்றுவதாகச் சொல்லிக்கொண்டு சிங்கள காடையர்களை (ரவுடிகளை) அங்கு குடியமர்த்தியது.

தமிழர் பகுதியில் ஆயிரக்கணக்கான வேலையில்லாத இளைஞர்கள் இருந்தும் சிங்களவர்களைக் கொண்டுவந்து குடியமர்த்தியதன் உள் நோக்கம், தமிழ் நிலத்தை கையகப்படுத்துவதுதான் என்பது இதன் மூலம் அம்பலமாகியது.

## அடக்குமுறை

தொலைநோக்குடன் சிந்திக்கும் ஈழத்தமிழர்கள், சிங்களவர்களின் குடியேற்றத்தையும் சிங்கள தனி ஆட்சி மொழிச் சட்டத்தையும் எதிர்த்து காந்திய வழியைப் பின்பற்றி அறப்போர் நடத்தினார்கள்.

www.padippakam.com



“ஏக்சாத் பிக்கு பெரெமுன” என்ற பௌத்த அமைப்பும், சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்கிற கொள்கையுடைய சிங்களரும் இணைந்து கொண்டு, அறப்போராட்டம் நடத்திய தமிழர்களை மூர்க்கத்தனமாகத் தாக்கினார்கள். இதில் 150க்கும் மேற்பட்ட தமிழர்கள் இறந்தார்கள். பலர் படுகாயம் அடைந்தார்கள்.

இந்த வன்செயல் கொழும்பிலும், கிழக்கு மாகாணத்திலும் காட்டுத் தீ போல் பரவியது.

தமிழர்களின் பொருளாதாரத்தை வீழ்த்துவதன் மூலமாகத்தான் அவர்களை அடிபணியச் செய்யலாம் என்று முடிவு செய்த இனவாத ஆர்.டி.பண்டாரநாயக்கா, தமிழர்களைத் தாக்கி அவர்களின் சொத்துக்களை கொள்ளையடிக்கும் சிங்களக் காடையர்களைத் தடுக்க வேண்டாம் என்று காவல் துறையினருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இனவாத அரசின் அரவணைப்போடும் காவல்துறையினரின் பாதுகாப்போடும் 23-5-58ல் தமிழர்களை வேட்டையாட வெறிவுணர்வுடன் புறப்பட்டது சிங்களக் காடையர் படை.

கொழும்பு, மட்டக்களப்பு, பொலனருவா, பாணந்துறை, பதுளை, குருனாகல, மாத்தறை முதலான இடங்களில் தமிழர்களை வீட்டோடு வைத்து கொளுத்தியது. கண்ணில் தென்பட்ட தமிழர்களை எல்லாம் வெட்டி சாய்த்தது. ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்களைக் கொன்று குவித்தது. இருந்தும் இரத்த வெறி அடங்காமல் பேருந்துகளையும் தொடர்வண்டிகளையும் நிறுத்தி அவற்றில் பயணம் செய்து கொண்டிருந்த தமிழர்களை கடுமையாகத் தாக்கியும் படுகொலை செய்தும் அப்போதைக்கு தனது இரத்தப் பசியைத் தீர்த்துக் கொண்டது சிங்கள வெறிக்கும்பல்.

www.padippakam.com



கொலையும் கொள்ளையும் தொடர்ந்து கொண்டிருக்கையில், ஒரு புறம் உலகை ஏமாற்ற சமாதான முயற்சிகளை சிங்கள அரசு மேற்கொண்டிருந்தது. 1957ல் பண்டாரநாயக்கா-தந்தை செல்வ நாயகம் ஒப்பந்தம் உறுதிசெய்யப்பட்டு கையெழுத்திடப்பட்டது. இதை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்தது. தான் ஏற்படுத்திய ஒப்பந்தத்தை சிங்கள எதிர்க்கட்சிகளின் மிரட்டலைக் காரணமாகக் காட்டி, 1958ல் பண்டார நாயக்காவே கிழித்தெறிந்தார்.

தந்தை செல்வா-பண்டா ஒப்பந்தம் கைவிடப்பட்டதை எதிர்த்து தமிழரசுக் கட்சி பட்டினிப்போர் நடத்த திட்டமிட்டிருந்தபோது, அக்கட்சியைச் சார்ந்தவர்கள் மீது, சிங்களக் காடையர்கள் வெறித்தாக்குதல் நடத்தினார்கள்.

## வெறியாட்டம்

தமிழர்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்து கொழுத்துப் போய் இருந்த சிங்களக் காட்டேரிக் கும்பல், தமிழ்ப் பெண்கள் மீது பாலியல் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டது. இதைச் சிங்கள அரசு கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

சிங்களக் கொடுங்கோல் ஆட்சியில் தமிழர்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு இல்லை. இதைக் குறிப்பிடும் விதமாக Tarzi Vittachi-Emergency'58: The story of the Ceylon Race Riots, London 1958 என்ற நூல் 25-5-58ல் இலங்கை வரலாற்றிலேயே நடந்திராத அந்த கொடூரத்தை படம்பிடித்துக் காட்டுகிறது:

"பொலனருவா கரும்பு தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த தமிழ் தொழிலாளர்கள் சிங்களவர்கள் வருவதைக் கண்டதுமே கரும்புத் தோட்த்துக்குள் ஓடி ஒளிந்து கொண்டனர். ஆனால் அந்தச் சிங்கள குண்டர்களோ தங்கள் நேரத்தை வீணடிக்கவில்லை.

www.padippakam.com



"கரும்புத் தோட்டத்திற்கு நெருப்பு வைத்து அங்கு ஒளிந்து கொண்டிருந்த தமிழர்களை வெளியே ஓடிவரும்படி செய்தனர். அலறி அடித்துக்கொண்டு வெளியே வந்த ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் குரூர ஆயுதங்களால் வெட்டி வீழ்த்தப்பட்டனர். தமிழர்களின் உடல்கள் சின்னா பின்னமாக சிதறிக் கிடந்தன. "ஹிங்குரக்கொடவிலுள்ள அரசாங்கப் பண்ணையிலும் அன்றிரவு தமிழர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். பயத்தாலும் பீதியாலும் ஆட்கொள்ளப்பட்ட ஒரு பெண் தன் குழந்தைகளை அரவணைத்தபடியே ஒரு கிணற்றுக்குள் விழுந்து தற்கொலை செய்து கொண்டாள். அந்தக் காடையர்களுக்கோ ஒரே கொண்டாட்டம். கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றைக் கிழித்த சிங்களக் கும்பல், அந்த தமிழ்ப் பெண் துடிதுடித்து இரத்தப் பெருக்கில் சாவதைக் கண்டு மகிழ்ந்தது.

"இந்துக் கோவிலுக்குள் சிங்களக் குண்டர் படையொன்று நுழைந்தது நெருப்பு வைத்தது. நெருப்பு முழுமையாக எரியாததால் அங்கு பூசை செய்து கொண்டிருந்த குருக்களை இழுத்து வந்து எரித்துச் சாம்பலாக்கியது".

## அவசர நிலைக்கெடுபிடி

தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இக்கோரத் தாக்குதல் குறித்து விசாரிக்க எவ்வித விசாரணை ஆணைக்குழுவும் அமைப்பதற்கு அப்போதைய பிரதமர் ஆர்.டிபண்டாரநாயக்கா முன்வரவில்லை. இது இலங்கை வரலாற்றிலேயே நடந்திராத மனித உரிமை மீறலாகும்.

இதனையடுத்து அவசரகால நிலை அறிவிக்கப்பட்டது. கலவரச் செய்திகள் முழுமையாக வெளிவராமல் இருப்பதற்காக பத்திரிகைகள் தணிக்கை செய்யப்பட்டன. இச்சட்டத்தால்

www.padippakam.com



தமிழர்களை கைது செய்தும் சித்திரவதை-சிறைகொலைகள் புரிந்தும் அரசு ஆடிய கோரத் தாண்டவம் வெளியுலகத்திற்கு தெரியாமல் போய்விட்டது.

1960ல் சிறீலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தது. திருமதி சிரிமாவோ பண்டாரநாயக்கா பிரதமர் பொறுப்பை ஏற்றார். இவரும் தனது கணவரைப் போலவே தமிழ்மொழியை ஒழித்துக் கட்டுவதில்தான் குறியாக இருந்தார். ‘1956க்கு பிறகு அரசுப் பணிகளில் சேர்ந்தவர்கள் சிங்களம் கற்றுக் கொண்டால்தான் வேலைகளில் தொடரமுடியும்’ என்று உத்தரவு போட்டார்.

சிங்கள அரசின் தொடர்ந்த தமிழர் விரோத நடவடிக்கைகளைக் கண்டித்து தந்தை செல்வா அவர்கள் 1961, ஏப்பரலில் அறப்போரில் ஈடுபட்டார். அப்போது காவல் விதிமுறைகளை எல்லாம் மீறி துப்பாக்கி சூடு நடத்தியது திருமதி பண்டாரநாயக்கா அரசு. இதில் ஒரு தமிழர் கொல்லப்பட்டார். பலர் காயமுற்றனர். சிங்கள அரசின் அடக்குமுறைகளைக் கண்டு மனம் தளராத ஈழத் தமிழர்கள் தங்களது தாயகப் பகுதியிலுள்ள யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு முதலான இடங்களிலுள்ள மாவட்டத் தலைமை அலுவலகங்களை முற்றுகையிட்டு அரசாங்கப் பணிகளில் உள்ள தமிழர்களும், ஏனைய தமிழர்களும் சிங்கள மொழியைப் புறக்கணிக்க வேண்டுமென்று காந்திய வழியை பின்பற்றி அமைதியாக அறப் போராட்டம் நடத்தினார்கள்.

## இராணுவம் நுழைவு

தமிழர்களின் எழுச்சியைக் கண்ட திருமதி பண்டாரநாயக்கா அரசு தன் கணவரின் வழியில் நெருக்கடி நிலையை அமல்படுத்தியது.

www.padippakam.com



அத்தோடு, யாழ்ப்பாணத்துடனான தகவல் போக்குவரத்து தொடர்புகளை பிற பகுதிகளிடம் இருந்து முற்றிலுமாக துண்டித்தது. 18-4-1961ல் வடக்கு மாகாணத்தில் 48 மணிநேர ஊரடங்குச் சட்டத்தை அமல்படுத்தியது.

முதன் முதலாக சிங்கள இராணுவமும் தமிழீழத்தில் நுழைந்தது. காந்திய வழியில் அமைதியான முறையில் அறப்போராட்டம் நடத்திய தமிழர்களை ஒடுக்குவதற்கு இராணுவமா? கலக்கம் அடைந்தார்கள், காந்திய அறப்போராட்டத்தைப் பின்பற்றிய தமிழர்கள்.

சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கவே, இனி சிங்களவர்களுடன் சேர்ந்து வாழ முடியாது என்று முடிவு செய்தார்கள் தமிழர்கள்.

இதை பிரதிபலிக்கும் விதமாக, தந்தை செல்வா அவர்களின் தமிழரசுக்கட்சி "இனி சிங்களவர்களுடன் இணக்கமாக வாழமுடியாது. எமது மக்களின் உரிமைகளை மீட்க, தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை தேவை" என்று கோரிக்கை விடுத்தது.

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 68 தமிழர்களை இராணுவம் கைது செய்தது.

நிராயுதபாணியான 68 தமிழர்களை கைது செய்வதற்கே இராணுவத்தைப் பயன்படுத்திய திருமதி பண்டாரநாயக்காவின் அரசை சனநாயகம் பேசும் உலக நாடுகள் எவையும் 'கொடுங்கோல் அரசு' என்று கண்டித்து நடவடிக்கை எடுக்காதது சிங்கள ஆட்சியாளர்க்கு ஊக்கத்தை கொடுத்தது.

1965ல் ஐக்கிய தேசிய கட்சி தேர்தலில் வெற்றியடைந்தது. திரு.டட்லி சேனநாயக்கா பிரதமர் பதவியை ஏற்றார். தமிழர்களுக்கு சில சலுகைகள் காட்டத் தொடங்கினார். உடனே

www.padippakam.com



சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், பொதுவுடைமைக் கட்சியும் எதிர்த்தன. எதிர்ப்பைக் கண்டு அஞ்சிய சேனநாயக்கா மாவட்டக் கவுன்சில்கள் அமைப்பதற்காக வகுத்த திட்டத்தை கைவிட்டார்.

## தொடரும் கொடுமைகள்

1970ல் சிரிமாவோ பண்டாரநாயக்காவின் கட்சி மறுபடியும் ஆட்சிக்கு வந்து தமிழர்கள் மீதும் மாணவர்கள் மீதும் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டது.

தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து சித்திரவதைக்கும், சிறைக் கொலைகளுக்கும் ஆளாக்கப்பட்டார்கள். இதற்கெல்லாம் முடிவுகட்டியாக வேண்டும் என்று அவர்கள் 1972ல் 'தமிழ்ப் புதிய புலிகள்' அமைப்பை உருவாக்கினார்கள்.

10-1-1974ல் உலகத் தமிழராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடத்தபட்டது. மாநாட்டின் எழுச்சியைக் கண்ட சிங்கள காவல்துறை திடீரென்று மாநாட்டு அரங்குக்குள் புகுந்து ஈவு இரக்கமில்லாமல் தமிழர்களைத் தாக்கியது. இதில் ஒன்பது தமிழர்கள் உயிரிழந்தார்கள்.

திட்டமிட்டு நடத்தப்பட்ட இக்கொலைகள் குறித்து அதிகாரபூர்வமான விசாரணை எதுவும் நடத்த திருமதி பண்டார நாயக்கா அரசு மறுத்துவிட்டது. இது ஹிட்லரின் பாரம்பரியத்தில் வந்த ஆரிய இனத்தவரே சிங்களவர் என்ற இறுமாப்பை பறைசாற்றுவதாக அமைந்தது.

## தந்தை செல்வாவின் குரல்

காந்திய அறவழிப் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் சிங்கள அரசுகளிடம் நியாயத்தை எதிர்பார்க்க முடியாது என்பதை உணர்ந்து கொண்ட தந்தை செல்வா அவர்கள், இலங்கை நாடாளுமன்றத்தில் 20-11-75ல் ஆற்றிய உரைமூலம் தமிழர்கள் மேற்கொள்ளவிருக்கும் நிலையைத் தெளிவுபடுத்தினார்கள்:

www.padippakam.com



"அடிமைத்தனத்தை எதிர்த்துத் தமிழர்கள் புரட்சியில் இறங்குவார்கள். இழந்த தனியாட்சித் தமிழீழ நாட்டை மறுபடியும் மீட்டே தீருவோம். தமிழ் மக்களின் குரலாக நின்று, இந்த நாடாளுமன்றத்திலே கூறுகிறேன்: எத்தனை இடர்கள் வந்தாலும் தனித் தமிழீழத்தை அமைக்க இயக்கங்களை நடாத்தியே தீருவோம்."

1976 ஆம் ஆண்டு தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் மாநாட்டில் தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமைக்கு முக்கியத்துவம் கொடுத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் தமிழர்களை ஒடுக்குவதிலேயே குறியாய் இருந்த சிங்கள கும்பல், மாநாட்டின் தீர்மானத்தை வாய்ப்பாக பயன்படுத்தியது.

தமிழர் வீடுகளை நெருப்பு வைத்துக் கொளுத்தி அவர்களை சொந்த நாட்டிலேயே அகதிகளாக ஆக்கியதல்லாமல் பெண்கள், சிறுவர்கள், முதியவர்களையும் கூட ஈவு இரக்கமின்றித் தாக்கிக் கொலை செய்தது. அடுத்த இலக்காக மலையகத் தமிழர்களையும் சிங்கள வெறிக் கும்பல் தாக்கியது.

பொறுத்தது போதும் பொங்கி எழுவோம் என்று தமிழ் புதிய புலிகள் அமைப்பு 5-5-1976ல் வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமயில் தமிழீழ விடுதல்லைப் புலிகள் இயக்கமாக மலர்ந்தது. முள்ளை முள்ளால்தான் எடுக்க முடியும் என்பது போல் சிங்கள இராணுவத்தையும் மிருகவெறிகொண்ட ஆட்சியாளர்களையும் ஆயுதப்பலத்தினால் எதிர்கொள்வதின் மூலமே தமிழர்களையும் தமிழ்நிலத்தையும் பாதுக்காக்க முடியும் என்று முடிவு செய்தது இந்த இயக்கம்.

**பாசிச செயவர்த்தனா**

இனி அடுத்த சுற்று. 1977ல் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு

www.padippakam.com



வந்து தலைமைப் பொறுப்பை ஏற்றவர் செயவர்த்தனா. செயவர்த்தனா யார்? எப்படிப்பட்டவர்? 1944ஆம் ஆண்டு ஆங்கிலேயரிடம் இலங்கை இருந்தபோது, சட்டசபை நிர்வாகம் சிங்களவர்களிடம் இருந்தது. அந்த அரசில் செயவர்த்தனா இடம்பெற்றிருந்தார். அப்போதே சிங்களம்தான் இலங்கையின் ஆட்சிமொழி என்று தீர்மானம் கொண்டு வந்தவர்தான் செயவர்த்தனா.

இப்படிப்பட்டவரின் ஆட்சி வேறு எப்படி இருக்க முடியும்? 1977ல் பதவி ஏற்ற ஒருமாத காலத்திலேயே நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொலைசெய்யப்பட்டனர். இதன் மூலம் சுதந்திரக் கட்சிக்கும் தனது ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எவ்வித வேறுபாடுமில்லை என்பதை செயவர்த்தனா நிருபித்தார்.

9-11-77ல் சன்சோனி ஆணையம் (Sonsoni Commission) அமைக்கப்பட்டது. விசாரணையின் முடிவு அறிக்கை "அநேக இடங்களில் காவல்துறையினரே தமிழர்களைத் தாக்கினார்கள். சிங்களக் காடையர்கள் தமிழர்களைத் தாக்கும்போது காவலில் இருந்த அரசு படையினர் இதைத் தடுத்திட எந்தவித முயற்சியும் மேற்கொள்ளவில்லை" என்று தெளிவாக கூறிய பிறகும் சிங்களக் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை. இது சிங்கள இனவெறி அரசின் சுயரூபத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியது.

தமிழீழத்தில் தொடர்ந்து நெருக்கடி நிலை அறிவிப்பதை ஒரு கொள்கையாகவே கொண்டிருந்தது சிங்கள அரசு. இதனால் தமிழர்கள் கொடுமைக்குள்ளாவது தொடர்கதையாக இருந்தது. "சிறைப்படுத்தி சித்திரவதைகள் செய்வதில் பலபேர் இறந்து விட்டனர் என்று கூறப்படும் குற்றச்சாட்டுகள் பெரும் கவலைக் குரியவைகளாக இருக்கின்றன" என்று இலங்கை குடியுரிமை இயக்கத்தினர் (Civil Rights Movement of Srilanka) கூறினர்.

www.padippakam.com



இதை உறுதி செய்யும் விதமாகவே சர்வதேச பொதுமன்னிப்பு அமைப்பு (அம்னெஸ்டி இன்டர் நேஷனல்) தனது அறிக்கையில் “தமிழ் இளைஞர்களை கைது செய்தும் உண்மையை வரவழைக்க வேண்டும் என்று கொடூரமான முறையில் கொடுமைப்படுத்தியும், சிங்கள அரசின் உத்தரவுப்படி ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்கான முயற்சி 1980-82 ஆம் ஆண்டுகளில் இராணுவத்தின் சித்திரவதைகளுக்கு அளவே இல்லை" என்று உறுதி செய்தது.

## ஆவணங்கள் அழித்தொழிப்பு

தமிழர்களின் கல்விக்கு உந்தலாக இருந்த நூலகம், பள்ளிக்கூடம், கல்லூரிகளை அழிப்பதால் எதிர்கால தமிழ் சந்ததியினரின் வாழ்வியலை முற்றாக அழித்து விடலாம் என்று முடிவு செய்தது சிங்கள அரசு.

காமினி திசநாயக்க, சிறில்மத்யூ ஆகிய சிங்கள இனவெறி கொண்ட அமைச்சர்கள் 1981 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு காவல்துறை, இராணுவம் ஆகியவற்றை தூண்டிவிட்டு பொதுநூலகம், தமிழ் நாளேடான ‘ஈழநாடு’ அலுவலகம், தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் அலுவலகம் ஆகியவற்றை தாக்கி அழித்தார்கள்.

இதில் பழமையான யாழ் நூலகம் புகழ்பெற்ற வரலாற்றைக் கொண்டதாகும். 1842ஆம் ஆண்டு திரு.எஃப்.ஸி. கிறினியர் அவர்களால் பொதுமக்கள் நூல்நிலையம் என்ற பெயரில் தொடங்கப்பட்ட நூலகம் ‘யாழ் நூல் நிலையம்’ என்ற பெயரில் புதுப் பொலிவு பெற்றது. இது 11-11-1933ல் நகரசபையின் ஆதரவின் கீழ் வந்தது.

நூலகத்தை விரிவாக்கும் பொருட்டு முதல் மாநகர தந்தை திரு.சாம்.ஏ.சபாபதி அவர்கள் ஏனைய தமிழர்களின்

www.padippakam.com



ஒத்துழைப்போடு அழகிய மாடிக்கட்டிடத்திற்கு 29-3-1954 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டினார்.

கட்டிட நிதிக்காக அமெரிக்க அரசு 22,000 டாலர் (அக்கால இலங்கை நாணய மதிப்பில் ஒரு லட்சத்து நான்காயிரம்) வழங்கியது. இந்தியாவும் நன்கொடையாக பத்தாயிரம் ரூபாய் வழங்கியது.

ஈழத்தமிழர்களின் கடின உழைப்பால் பண்டையத் தமிழர்களின் கட்டிடக்கலைத் திறனை நினைவுபடுத்தும் வகையில் 11-10-59ல் யாழ் நகரத் தந்தை அ.த.துரையப்பா அவர்களால் திறக்கப்பட்டது.

தமிழர்களின் அறிவுக் களஞ்சியமாக விளங்கிய நூலகத்தை சிங்கள இனவெறி அரசு திட்டமிட்டு நெருப்பு வைத்து கொளுத்தியது. ஏராளமான தமிழ்நூல்கள், உலகளாவிய நூல்கள் என 97 ஆயிரம் புத்தகங்கள் கருகி சாம்பலாகியது.

**சிங்கள படுகொலைக் குழு**

1981 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக ஒன்று திரட்டப்பட்ட சிங்களக் குழுக்கள்தான் (Organised Gangs) பெரும்பாலான இனப்படுகொலைகளைச் செய்தன.

செயவர்த்தனாவிற்கு நெருக்கமான நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.வி.புத்தினிலமெ இத்தகைய திட்டமிட்ட செயலுக்கு தலைமை தாங்கினார். இரத்தினபுரியில் வன்முறையை ஊக்குவித்துத் தமிழர் மீது ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் தாக்குதல் நடத்தப்பட்டதில் 25 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

செயவர்த்தனா 14-8-81 அன்று பேசுகையில் இரத்தினபுரி பகுதியில் நடந்த கலவரங்கள் திட்டமிட்டு நடத்தப்பட்டவை என்பதை ஒப்புக்கொண்டார். ஆனால் அவர் எந்த

www.padippakam.com



நடவடிக்கையும் எடுக்காமல் சிங்களக் காடையர்களுக்கு ஆதரவாகவே செயல்பட்டார் என்பதுதான் உண்மை.

1982ல் செயவர்த்தனா ஆட்சியின்போது குற்றவாளிகளுக்கு முழுப் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டது. அமைச்சர்கள், மற்றும் அரசுப்படையினர், சிவில் நிர்வாக அதிகாரிகள் மீதான எந்த புகாரானாலும் அவர்கள் முன் பாதுகாப்பு சட்டம் எண்: 20-ன் மூலம் தப்பிக்கொள்ள முடிந்தது. இச் சட்டத்தின் வழியாக சிங்கள இனவெறிக் கும்பல் முழு பாதுகாப்புடன் உலாவியது.

இவைகளை எல்லாம் மறைத்துவிட்டு, விடுதலைப் புலி களால்தான் கலவரம் வெடித்தது என்று உண்மைக்கு மாறான செய்திகளை எழுதி, உலகை ஏமாற்றின, சிங்கள பத்திரிகைகள்.

**சிங்களவர் குடியேற்றம்**

ஈழத் தமிழர் வரலாற்றை கூர்ந்து ஆராய்ந்த பிரிட்டன் 1873ல் இரண்டு தமிழ் மாகாணங்களை ஒருங்கிணைத்து அதை தமிழர் தாயகம் என்று ஒப்புக்கொண்டு நடைமுறைப்படுத்தியது. ஆனால் கொள்ளை, கொலைகள் புரிந்து சிறையில் இருந்த சிங்களக் குண்டர்களுக்கு ஆயுதங்கள் கொடுத்து அவர்களை தமிழர் தாயகத்தில் குடியேற்றம் செய்தார் செயவர்த்தனா.

சிங்களக் குண்டர்களுக்கு வீடு, உணவு, பணம் ஆகியவற்றை தாராளமாக கொடுத்து ஊக்கப் படுத்தியது செயவர்த்தனா அரசு.

கொழுத்த சிங்களக் கொலைக் கும்பல் தமிழர்களைத் தொடர்ந்து கொள்ளையடித்து வந்ததை சிங்கள அரசு கண்டு கொள்ளவே இல்லை.

தினம், தினம் சித்தரவதைகளை அனுபவித்துவந்த தமிழர்கள் ஒன்று திரண்டு, சிங்களக் குடியேறிகளுக்கு எதிராக 10-8-81ல் ஆர்ப்பாட்டம் செய்து அவர்களை விரட்டி அடித்தார்கள். தப்பி

படிப்பகம்

www.padippakam.com



ஓடிய சிங்களக் கும்பல் நீர்கொழும்பு, இரத்தினபுரி, மலையகம் ஆகிய பகுதிகளில் உள்ள தமிழர்களை ஆயுதங்களால் தாக்கினார்கள். வீடுகளையும் கொளுத்தினார்கள்.

**பாலியல் பலாத்காரம்**

காவல்துறையினர் துணையுடன் சிங்கள வெறிக் கும்பல், தமிழ் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்வதும், கொள்ளையடிப்பதும் தொடர்ந்து கொண்டிருப்பதைக் கண்டு, சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான இயக்கம் (Mirje) "இப்பொது நடைபெற்று வரும் வன்முறைகளை அதிகாரம் வாய்ந்த பொறுப்புகளில் இருப்பவர்கள் பின்னணியில் இருந்து தூண்டுகிறார்கள்" என மிகத் தெளிவாகக் கூறியது.

சிங்கள இனவெறி அரசால் பாதிப்புக்குள்ளான தமிழ் இளைஞர்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பெருமளவில் சேர்ந்து உயிரைப் பாதுக்காத்துக் கொண்டார்கள்.

3-6-83, அன்று திருகோணமலைப் பகுதிகளில் இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் போர் ஏற்படப் போகிறது என்ற பதற்றமான சூழ்நிலை இருந்த போது, சிங்கள வெறிக்கும்பல்கள் திரண்டு வந்து தமிழர்களை மிருகத்தனமாக தாக்கியதில் சிறுவர்கள் பெரியவர்கள் என்று பத்தொன்பது பேர் இறந்து போனர்கள்.

23-7-83 அன்று சிங்கள இராணுவம் தனது பங்கிற்கு யாழ்ப்பாணத்திலும் மானிப்பாயிலும் கண்மூடித்தனமாக சுட்டதில் முப்பது தமிழர்கள் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையானார்கள். வெறிகொண்ட இராணுவம் அப்போது மூன்று தமிழ் பெண்கள்மீது பாலியல் வன்செயல் புரிந்தது. இதனால் அநேக தமிழ் பெண்கள் தற்கொலை செய்து கொண்டார்கள்.

தமிழ் பெண்களின் மானம் பறிபோகும் நிலையிலுமா

www.padippakam.com



பொறுமை என்று கொதித்தெழுத்தார்கள் தமிழர்கள். தமிழ் பெண்களைக் கற்பழித்த சிங்கள இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் உலாவி வருவதை தடுக்கும் வண்ணம் கண்ணிவெடிகளை வைத்து வெடிக்கச் செய்ததில் பதிமூன்று இராணுவத்தினர் இறந்து போனார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நடத்திய இத்தாக்குதலால் இராணுவத்தினருக்கு அச்சம் ஏற்பட்டது.

தமிழ் பெண்களும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து, வெறிபிடித்த சிங்கள இராணுவத்திடம் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளவும் எதிர்கால தமிழ் சந்ததியினரின் உரிமைக்காகவும் போராடத் தொடங்கினர்.

**அரச பயங்கரவாதம்**

24, 25-7-83ல் கொழும்பிலும் அதன் புறநகர் பகுதிகளிலும் தமிழர்களை படுகொலை செய்வதற்கென்றே செயவர்த்தனா அரசின் தூண்டுதலின் பேரில் பிரதமர் பிரேமதாசா தலைமையில் பச்சைப் படை என்ற பயங்கரவாத அமைப்பு இயங்கியது.

நுவரெலியா நகரத்திலும் அதைச் சுற்றியுள்ள மலையகப் பகுதிகளிலும் காமினி திசநாயகாவின் தலைமையில் சிங்கள குண்டர் படையினர் தமிழர்களைத் தாக்கி தமிழர் நிறுவனங்களில் கோடிக்கணக்கான சொத்துகளை கொள்ளையடித்தனர்.

கண்டி, மாத்தளை, காலி பகுதிகளில் ஐக்கிய தேசிய கட்சிக்கு போட்டியாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் தனது குண்டர்களை ஏவிவிட்டு தமிழர்களைத் தாக்கி கொலை செய்தது.

24 ஆம் தேதி ஞாயிறு காலை யாழ்ப்பாணத்தில் உள்ள திருநெல்வேலியில் வீடுகளுக்குள் இருந்த தமிழர்களை வீதிக்கு இழுத்து வந்து நாயைச் சுடுவது போல் சுட்டது சிங்கள இராணுவம். அன்றைய தினம் மானிப்பாய் பகுதியில்

படிப்பகம்

www.padippakam.com



பேருந்துக்காக காத்திருந்த தமிழர்களையும் கண் மூடித்தனமாக சுட்டது. இதில் ஆண்கள், பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள், குழந்தைகள் என அனைவரும் சுருண்டனர். 24-7-83இல் மட்டும் இராணுவம், காவல்துறையினரால் யாழ் குடா நாட்டில் 41 தமிழர்கள் கொலை செய்யப்பட்டனர்.

கொழும்பு பகுதிகளில் தமிழர்களின் முகவரிகளைத் தெரிந்து கொள்ள அவர்களின் வாக்களர் பட்டியலையும் வணிக நிறுவன முகவரிகளையும் சிங்கள அதிகாரிகளே இராணுவத்திடமும் சிங்களக் கடையர்களிடமும் கொடுத்து கொலை வெறியைத் தூண்டிவிட்டார்கள்.

தமிழர்களை ஒட்டுமொத்தமாக அழித்து விடும் நோக்கமாக தமிழர்கள் வீடுகள், தொழில் நிறுவனங்கள், கடைகள் என அனைத்தையும் கொள்ளையடித்ததோடு, நெருப்பு வைத்துக் கொளுத்தியும் சாம்பலாக்கியது சிங்களக் கும்பல்.

## குழந்தைகளை குறிவைத்து கொலை

நுவரெலியா பேருந்து நிலையத்தில், ஒரு பேருந்தில் வந்த சிங்களக் காடையர்கள், தமிழர்கள் மட்டும் பேருந்தில் ஏறுங்கள், சிங்கள பயணிகள் எல்லாம் போங்கள் என்று சொல்லிவிட்டு, பொட்டு வைத்திருந்த தமிழ் பெண்களைப் பிடித்து இழுத்தார்கள். ஒரு பெண்ணின் கணவர் தடுத்தபோது அவருக்கு சரமாரியாக கத்தி வெட்டு விழுந்தது.

ஒரு சிங்கள வெறியன் அந்த பெண்ணின் வயிற்றைக் கத்தியால் கிழித்து குடலை வெளியே வீழ்த்தினான். அந்த பெண்ணின் இரண்டு குழந்தைகளும் அலறியபோது பிஞ்சு குழந்தைகளின் தலையில் கட்டையால் அடித்துக் கொன்றது சிங்கள கும்பல். அதோடு நில்லாமல் மூன்று தமிழ்ப் பெண்களையும் அந்த காடையர்கள் குதறினார்கள். அதோடு

www.padippakam.com



அவர்களை உயிருடன் எரித்தும் வேடிக்கை பார்த்தது அந்தக் கும்பல்.

பேருந்தில் வலம்வந்த சிங்களக் கொலைக் கும்பல் "தமிழர்களைக் கொல்லுங்கள், தமிழர்களைக் கொல்லுங்கள்" என்று போட்ட ஆவேசக் கூச்சலால் அந்த பகுதிகளில் இருந்த சிங்களவர்கள் உற்சாகமடைந்து தமிழர்களையெல்லாம் தாக்கினார்கள்.

**உயிருடன் தமிழர்கள் எரிப்பு**

இலங்கை நாட்டுக்காக உழைத்து உடல் மெலிந்திருந்த மலையகத் தமிழர்களைத் தாக்குவதற்காக தீப்பந்தங்களுடன் மண்ணெண்ணெய் கேன்களுடன் புறப்பட்ட சிங்களக் குண்டர்கள் கண்ணில் பட்ட தமிழர்களை எல்லாம் உயிரோடு கொளுத்தினார்கள். புத்தபிக்குகளும் மண்ணெண்ணைக் கேன்களுடன் அலைந்தார்கள்.

உயிரையாவது காப்பாற்றிக் கொள்ளுவோம் என்று தமிழர்கள் காடுகளுக்குப் போய் பதுங்கி பசியோடும் கண்ணீரோடும் நாட்களைக் க்ழித்தார்கள்.

கொழும்பு நகரிலும் பல இடங்களில் சிறிய பேருந்துகளுக்குள் (மினிபஸ்) தமிழர்கள் அடைக்கப்பட்டு உயிருடன் எரிக்கப்பட்டனர். பதுளை, பண்டாரவளை, நுவரெலியா போன்ற நகரங்கள் சுடுகாடுகள் போல் காட்சியளித்தன. அங்கிருந்த தமிழர்களுடைய வர்த்தக நிறுவனங்கள், அலுவலங்கள், வீடுகள் எல்லாம் தீக்கிரையாக்கப்பட்டன. வாழ்நாள் எல்லாம் சேர்த்து வைத்த சொத்துகளையும் இழந்து விட்டு பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் உடுத்திய ஆடைகளுடன் கண்கலங்கிய நிலையில் அகதி முகாம்களில் தஞ்சமடைந்தார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



### தமிழர் மாமிசம்

கொழும்பு நகரில் தமிழர்களைப் பிடித்து கூறு கூறாக வெட்டிக் கொலை செய்து "தமிழன் மாமிசம் கிடைக்கும்" என்று தட்டியில் எழுதி வைத்து மகிழ்ந்தது சிங்களக் வெறிக் கும்பல். நகர் முழுவதும் எங்கு நோக்கினாலும் மரண ஓலங்கள்.

சிங்களக் காடையர்களாலும் இராணுவ வெறியர்களாலும் தமிழ்ப்பெண்கள் பாலியல் பலாத்காரத்துக்குள்ளாகி, மார்பகம் அறுக்கப்பட்டு கண்டதுண்டமாக வெட்டப்படுவதைக் கண்ட அவர்களின் பெற்றோர்கள் சூழ்நிலைக் கைதிகளாக இருந்தார்கள். தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலையை சிங்கள இனவாத அரசு கை கட்டி வேடிக்கை பார்த்து மகிழ்ந்தது.

### கோவில்களும் சிறைகளும் கொலைக் களங்கள் ஆகின

ஆலயம் என்றுகூடப் பார்க்காமல் அங்கு தஞ்சமடைந்த தமிழர்களையும் கொன்றுகுவித்ததோடு முருகர், விநாயகர் சிலைகளைத் தூக்கிக் கடலில் போட்டு, கடவுள்கள் இந்தியா சென்று விட்டார்கள் என்று ஆனந்தக் கூத்தாடியது சிங்கள கும்பல். இதைப் பார்த்த தமிழர்கள் கடவுள் என்று உண்டா என்று சிந்திக்க தொடங்கினார்கள்.

விடுதலைப் போராளிகள் குட்டிமணி, செகன், தங்கத்துரை உள்பட 35 தமிழர்கள் அரசியல் காரணங்களுக்காக கைது செய்யப்பட்டு தண்டனை பெற்று, கொழும்பில் பாதுகாப்பு நிறைந்த வெலிக்கடை சிறையில் இருந்தார்கள் 25-7-83 அன்று இவர்களை சிறைக்காவலர்களும் சிங்களக் கைதிகளும் கோரமான முறையில் இரும்புத் தடிகளால் அடித்தும் வெட்டியும் துடிக்க, துடிக்கத் கொலை செய்தார்கள்.

மரண தண்டனை பெற்றிருந்த குட்டிமணி தனக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்ட பின் தனது கண்களை எடுத்து கண் தெரியாத தமிழருக்கு கொடுக்க வேண்டும்; அதன் மூலமாக தமிழீழம்

www.padippakam.com



மலர்வதை நான் பார்க்க வேண்டும் என்று தனது இறுதி வாக்கு மூலத்தில் கொடுத்திருந்தார்.

இதை கருத்தில் கொண்டு திரு. குட்டிமணி உயிருடன் இருக்கும் போதே அவரது இரண்டு கண்களும் தோண்டி எடுக்கப்பட்டு, பூட்ஸ் காலில் போட்டு அவற்றை மிதித்து 'இப்போது எப்படி உன் கண்களால் தமிழீழத்தை பார்ப்பாய்' என்று வெறிக் கூச்சல் போட்டு தங்களின் காட்டு மிராண்டித்தனத்தை அரங்கேற்றம் செய்தது சிங்களக் கும்பல்.

27-7-83ல் அதே வெலிக்கடை சிறைச்சாலையில் மீண்டும் அரசியல் தமிழ் கைதிகளை, சிங்களக் கைதிகள் பயங்கர ஆயுதங்களோடு தாக்கினார்கள். இதில் 18 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மருத்துவர் திரு. இராசசுந்தரம் கொல்லப்பட்டவர்களில் முக்கியமானவர்.

முகாம்கள், தேவாலயங்கள், பாடசாலைகள், மருத்துவ மனைகள், விளை நிலங்கள் என எந்த ஒரு பகுதியும் சிங்கள விமானக் குண்டு வீச்சுக்கும், எரிகணை தாக்குதலுக்கும் தப்பவில்லை.

## மனித உரிமை அமைப்புகள் கண்டனம்

குற்றவியல் நீதிபதியைக் கொண்டு "சிறைக் கொலைகள்" குறித்து விசாரணை நடத்தப்பட்டது. "மனிதப் படுகொலைகள் நடந்தது உண்மையே" என்று இந்த விசாரணை கூறியது. ஆனால், இப்படுகொலைகளைச் செய்தவர் யார் என்று ஒருவரையும் அடையாளம் காட்டவில்லை. காவல்துறையினரின் அரைகுறையான விசாரணைக்குப் பின் எவர் மீதும் குற்றம் சாட்டப்படாமலேயே இந்த விசாரணை முடிக்கப்பட்டு விட்டது.

சர்வதேச மனித உரிமை அமைப்புகள் வெலிக்கடை சிறைப்

www.padippakam.com



படுகொலைகள் குறித்து வெளிப்படையான நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று முன்வைத்த கோரிக்கைகளை இலங்கை அரசாங்கம் ஏற்கவில்லை.

"அரசு அதிகாரிகளின் தூண்டுதலும் துணையும் இல்லாமல் இப்படுகொலைகள் நடத்திருக்க முடியாது" என்று வரலாற்று ஆய்வாளர் திரு.லுட்சு ஒயிட் கூறியது குறிப்பிடத்தக்கது.

இத்தனைக்குப் பிறகும், எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோல் செயவர்த்தனா "யாழ்ப்பாண மக்களது கருத்துகளைப் பற்றியோ, அவர்கள் எம்மைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றியோ கவலை இல்லை" என்று ஆணவமாக லண்டன் தினசரியான "டெலிகிராப்" பத்திரிகைக்கு பேட்டியளித்தார்.

செயவர்த்தனாவின் ஆட்சியின் போது, 1983ஆம் ஆண்டு மட்டும் சொந்த நாட்டிலேயே தமிழர்கள் அகதிகளாக ஆக்கப்பட்டு, முகாம்களில் 2,50,000க்கு மேல் தஞ்சம் புகுந்தார்கள்.

10,600 தமிழர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக் குள்ளானார்கள். 1000 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட சொத்துக்களை இழந்து உணவுக்கே வழியில்லாமல் தவித்தார்கள். பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் சிங்கள இனவாத அரசாலும் காடையர்களாலும் கொல்லப்பட்டார்கள்.

## எந்த நிலையிலும் பாதுகாப்பு இல்லை

அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்த தமிழர்கள் பாதுகாப்பு இல்லாமல் சிதறி ஓடி காட்டைக் குடைந்து, மரங்களின் கீழ் தங்கினார்கள். குடிநீர், மருத்துவசதிகள் இன்மையால் வயிற்றோட்டம், கண் வருத்தம், மலேரியா, காய்ச்சல் போன்ற நோய்களால் அநேக சிசுக்கள், சிறுவர்கள் இறந்து போனார்கள்.

www.padippakam.com



எங்கும் செல்ல முடியாதபடி போக்குவரத்து வசதிகள் தடை செய்யப்பட்டன. விலைவாசியும் விண்ணைத் தொட்டது. மாணவர்கள் படிப்பு கேள்விக்குறியாகி விட்டது. மருத்துவமனை, கோவில்கள் போன்ற பொது இடங்களிலும் பாதுகாப்பு இல்லை. ஈழத்தமிழர்களுக்கு எந்த வடிவத்திலும் மரணம் வரும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இந்த நிலையில்தான் கடல்தாண்டி தமிழகம் புறப்பட்டார்கள்.

தமிழகம் வருவதென்பது சாதாரணமானதல்ல. இலங்கை நேவிக் கப்பல்களும் ஆங்காங்கே உலாவிக் கொண்டிருக்கும். திடீரென்று நாலாபக்கமும் ஒளி அடித்துப் பார்ப்பார்கள். நேவிக் காரர்களின் கண்ணில் பட்டுவிட்டால் போதும் மின்னல் வேகத்தில் வந்து கண்மூடித்தனமாக சுட்டு தமிழர்கள் பயணம் செய்யும் படகை மூழ்கடிப்பார்கள். உயிரைப்பற்றி கவலைப் படாமல், தப்பித்தால் போதுமென்று பயணம் செய்தார்கள் தமிழர்கள்.

இரவு நேரங்களில் கடல் கொந்தளிப்பு அதிகமாக இருக்கும். கடலில் பயணம் செய்து பழக்கம் இல்லாதவர்கள் மயங்கிய நிலையில் குழந்தைகளைக் கட்டிப்பிடித்துக் கொண்டும் குளறி அழுது கொண்டும் வருவார்கள்.

சாதாரணமாக யாழ்குடா நாட்டில் இருந்து படகில் தமிழகம் வருவதற்கு ஒரு மணி நேரம்தான் ஆகும். சிங்கள இராணுவத்திற்குப் பயந்து பல பகுதிகள் கடலில் சுற்றி வருவதால் எட்டு மணிநேரம் பயணம் செய்ய வேண்டும்.

கடல் பயணம் என்பது சிங்கள இராணுவத்தின் சித்திரவதைகள், துப்பாக்கி குண்டுகளை விடக் கொடியது. இதையெல்லாம் பொருட்படுத்தாமல்தான் தமிழர்கள் சாரை சாரையாக தமிழகம் வந்து கொண்டே இருந்தார்கள்.

www.padippakam.com





வீடுகளையும் பூர்வீக தமிழ் மண்ணையும் இழந்து கண்ணீரோடு தமிழகத்திற்குவரும் ஈழத்தமிழர்கள்.

படிப்பகம்

www.padippakam.com



# மனிதநேயப் பண்பாளர்

குழந்தைகள், முதியவர்கள் கூட பாதிப்புக்குள்ளாகியதை கண்ட எம்.ஜி.ஆர் அவர்கள் மனம் கலங்கினார். அவர்களை தாயன்போடு வரவேற்று, அவர்களுக்கு முதலில் மருத்துவ உதவிகள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்தார்.

தமிழகத்தின் அனைத்து மாவட்ட ஆட்சியாளர்களையும் தொடர்பு கொண்டு அவசரகால அடிப்படையில் ஈழத் தமிழர்களுக்கு உதவி புரிய உத்தரவிட்டார்.

ஈழத்தமிழர்களுக்கு முகாம் அமைத்து அவர்கள் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ததோடு தேவையான உணவுப் பொருட்கள் முதல் உடைகள் வரை தட்டுப்பாடு இல்லாமல் கொடுத்து உதவினார் எம்.ஜி.ஆர்.

சிங்கள பேரினவாத அரசால் ஈழத்தமிழினம் அழிந்து கொண்டிருப்பதைக் கண்டு, ஒரு மாநில முதலமைச்சர் என்ற வரம்பினுள் நின்று கொண்டே மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள் மிகத் துணிச்சலாக நடவடிக்கைகள் மேற்கொண்டதன் மூலம் தமிழீழ மக்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் பேருதவிகள் புரிந்தார்.

தமிழீழ மக்களின் பாதுகாப்பு, எதிர்கால வாழ்க்கை இவற்றைக் கருத்திற் கொண்டே எம்.ஜி.ஆர் அவர்களின் செயல்பாடுகள் அமைந்திருந்தன.

தகுதி நிர்ணய விதிமுறைகளை எல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு, ஈழத்தமிழர்களுக்கு என்று தனி ஒதுக்கீடு செய்து மாணவர்கள் கல்வி கற்கவும், பொறியியல், மருத்துவம், தொழில் நுட்பம் போன்ற உயர் கல்வி வசதிகள் பெறுதற்கும் ஆணை பிறப்பித்தார்.

www.padippakam.com



27-7-83ல் தமிழக அமைச்சரவைக் கூட்டத்தை எம்.ஜி.ஆர் அவர்கள் கூட்டினார். ஈழத்தமிழரின் பாதுகாப்பு குறித்தும் தமிழகம் வந்துள்ள அகதிகள் குறித்தும் விவாதித்து சில முடிவுகளை வெளியிட்டார். அவைகளில் சில வருமாறு:

* ஈழத்தமிழர்கள் மேல் ஏவப்படும் கொடுமைகளுக்கு முடிவுகட்ட, ஐக்கிய நாடுகள் சபை தலையிடுவதற்கு ஆவன செய்யுமாறு இந்திய பிரதமர் திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்து தொலைநகல் செய்தி அனுப்பினார்.

* சிங்கள இனவாத அரசால் பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்களும் மலையகத் தமிழர்களும் இனப்படு கொலைக்குள்ளாவதால், கண்ணீரோடு வாழும் தமிழர்களின் துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளும் வகையில், தமிழக அரசு சார்பாக அமைச்சர்கள், அதிகாரிகள், பொதுமக்கள் அனைவரும் கறுப்பு சின்னம் அணியும்படி செய்தார்.

28-7-83 அன்று ஈழத்தமிழர் பிரச்சனைக்கு நல்ல முடிவெடுப்பதற்காக, தமிழகத்திலுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டி ஈழத்தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமையை உருக்கத்தோடு விளக்கினார். அதோடு 2-8-83ல் பொது வேலை நிறுத்தத்தை அறிவித்து அதற்கு அனைத்து கட்சிகளும் ஒத்துழைப்பு தரும்படி வேண்டிக் கேட்டுக்கொண்டார்.

தமிழகம் ஒருங்கிணைந்து போராட்டம் நடத்தினால்தான் சிங்கள இனவெறி அரசின் அடக்குமுறைகளைத் தடுத்து நிறுத்தி ஈழத்தமிழர்களையும் மலையகத் தமிழர்களையும் பாதுகாக்க முடியும் என்று மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள் நம்பினார்.

www.padippakam.com



முதலில் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையாரிடம் தமிழக அரசின் நிலையையும் தமிழக மக்களின் உணர்வுகளையும் விளக்குவதற்காக முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்கள் தலைமையில் தமிழகத்திலுள்ள, அனைத்துக் கட்சித் தலைவர்கள் குழு டெல்லி சென்றது. ஈழத்தமிழர்களைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கக் கோரி இந்திய பிரதமரிடம் மனுகொடுத்தார்கள்.

உரிமைக்குக் குரல் கொடுப்பது திரைப்படங்களில் மட்டும் அல்ல; எம்.ஜி.ஆர் அவர்களின் வாழ்க்கை நெறியே அதுதான். பாதிக்கப்பட்ட அனைத்து மக்களும் உரிமையோடு வாழ வேண்டும் என்பதுதான் மக்கள் திலகத்தின் உறுதியான கொள்கையாகும்.

**செயலில் இறங்கினார்**

போராட்டங்கள் நடத்துவதும், பட்டினிப் போர் கடைப்பிடிப்பதும் உரிமைகளைப் பெறுவதற்கான ஒருசில வழிமுறைகளாக இருக்கலாம். ஆனால் எம்.ஜி.ஆரின் அணுகுமுறை அதையும் தாண்டிச் சென்று ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அனைவருக்கும் முன்மாதிரியாகவும் வழிகாட்டுதலாகவும் அமைந்தது. அவ்விதம் செயல்பட்டதன் காரணமாகவே தமிழகத்தில் அவர் முதன்மையாக விளங்கினார்.

இலங்கைத் தமிழர்கள் சொல்லொணாத் துயருக்கு இலக்காகித் தவிப்பதைப் பார்த்த கருணையுள்ளம் கொண்ட மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் முதல் தவணையாக உடனடி உதவியாக இருபது இலட்சம் ரூபாயை நன்கொடையாக கொடுத்தார்கள். முதல்வர் நிவாரண நிதியிலிருந்து பதினைந்து இலட்சமும், அ.தி.மு.கழகத்தின் சார்பில் மூன்று இலட்சமும், தனது சொந்த பணத்திலிருந்து இரண்டு இலட்சமும் கொடுத்தார்.

www.padippakam.com



தமிழகத்தைப் பொறுத்தவரை, பொதுவாழ்வில் ஈடுபட்டோரில் எம்.ஜி.ஆர் அவர்கள் போல் கொடையுள்ளம் படைத்தவர்கள் யாரும் இல்லை என்பதுதான் உண்மை. அதனால்தான் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள், தமிழக மக்கள் மற்றும் தமிழீழ மக்கள் நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பிடித்து என்றும் அவர் நினைவில் வாழும் தலைவராகவே இருக்கிறார்.

அனைத்து கட்சி கூட்டத்தில் எம்.ஜி.ஆர் அவர்கள் அறிவித்தபடி 2-8-83 அன்று தமிழகம் முழுவதும் பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது.

செயவர்த்தனாவை கண்டித்தும், ஈழத்தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களை டெல்லி அரசு புரிந்து கொள்வதற்கும், ஈழத்தமிழரின் மொழி வழி உறவுடையவர்கள் தமிழ்நாட்டில் ஐந்து கோடி பேர் இருப்பதை உலகநாடுகள் அறிந்து கொள்வதற்கும் எம்.ஜி.ஆர் அவர்களால் நடத்தப்பட்ட அந்த பொது வேலை நிறுத்தம் இந்தியாவையே வியப்பில் ஆழ்த்தியது, அதோடு, உலக நாடுகளின் கவனத்தையும் ஈர்த்தது.

இந்த பொது வேலை நிறுத்தம் தமிழர்களை ஒன்று சேர்த்தது. செயவர்த்தனாவின் கொடுஞ் செயல்களை எதிர்த்து தமிழ்நாடே கொதித்து எழுந்தது. எம்.ஜி.ஆர் அவர்களின் உத்தரவால் தமிழகம் எங்கும் முழுக் கடையடைப்பு கடைப்பிடிக்கப்பட்டது. விமானங்கள், தொடர்வண்டிகள், பேருந்துகள், வாடகை வாகனங்கள் அனைத்தும் நகர மறுத்து விட்டன.

தொழில் நிறுவனங்கள், மத்திய - மாநில அரசு அலுவலகங்கள் திறக்கப்படவில்லை. நகரத்தின் வீதிகள் நடமாட்டமின்றிக் காட்சியளித்தன. கிராமத்தில் உள்ளவர்களும் வேலை நிறுத்தத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

எப்பக்கம் திரும்பினும், கருப்புக் கொடிகள், எந்த திசையை

www.padippakam.com



நோக்கினும் இரத்த வெறியன் செயவர்த்தனாவின் கொடும்பாவி எரிப்புக்கள். தமிழகமே துக்கத்தில் ஆழ்ந்து காணப்பட்டது.

ஈழத்தமிழர் பிரச்சனையில் தமிழகத்தின் நிலையையும் தனது உள்ளக் குமுறல்களையும் பொது வேலை நிறுத்தத்தின் மூலம் தெளிவுபட டெல்லிக்கு எம்.ஜி.ஆர் அவர்கள் எடுத்துரைத்தார். ஈழத்தமிழர் பிரச்சனையில் டெல்லி அரசின் கவனம் திரும்புவதற்கு இது வழிகோலிற்று.

ஈழத்தமிழர் பிரச்சனைக்கு அடையாளமாக ஒரு போராட்டத்தை நடத்தி விட்டால் போதும், அத்துடன் கடமை முடிந்து விட்டது என்று நினைப்பவர்களும் உண்டு. ஆனால் எம்.ஜி.ஆர் அவர்களின் நிலையே வேறு, முற்றிலும் மாறுபட்டவர். பிரச்சனையின் தன்மையைக் சரிவரப் புரிந்து செயல்படக் கூடியவர். பிரச்சனையின் தோற்றுவாய், உள்ளடக்கம், அதற்கான தீர்வு எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்து இறுதி வரை உறுதியாக நின்று போராடி அதற்கு முடிவு காணும் வரை ஓய்ந்து விடமாட்டார்.

முதல் நாள் பொது வேலை நிறுத்தத்தை நடத்தினார் என்றால் மறுநாள் (3-8-83) மீண்டும் அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி அடுத்தகட்ட வேலை குறித்து விவாதித்தார். அன்று எல்லாக் கட்சித் தலைவர்களும் பேசினார்கள். நேரமின்மையால் சிலர் பேச முடியாமல் போய்விட்டது. இதை அறிந்த மக்கள் திலகம் உடனே 6-8-83 அன்று மறுபடியும் இந்தக் கூட்டம் கூட்டப்படும் என்று அறிவித்தார்கள். சமதர்மக் கொள்கையைப் போற்றுபவர் என்பதால்தான் எல்லோருக்கும் சமவாய்ப்பு அளிக்க முன்வந்தார் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர் அவர்கள் கூறியபடி 6-8-83 அன்று மறுபடியும் அனைத்துக் கட்சி கூட்டம் நடந்தது. தலைவர்கள் எல்லோரும்

www.padippakam.com



வந்திருந்தார்கள். ஒவ்வொருவருடைய கருத்தையும் எம்.ஜி.ஆர் அவர்கள் கவனமாகக் கேட்டு அறிந்தார்கள். தேவைப்பட்ட போதெல்லாம் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி கருத்து வேறுபாடுகளைக் களைந்து ஒருமித்த கருத்தை உருவாக்கினார். ஈழத்தமிழ் மக்களுக்காக தமிழகமே ஒன்று திரண்டதற்கு எம்.ஜி.ஆரின் இந்த அணுகுமுறைதான் காரணம்.

7-8-83 அன்று மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்களை சந்திப்பதற்காக அவரது இல்லத்திற்கு ஈழத்தமிழர்கள் திரு. சிறீதரன், மருத்துவர் பஞ்சாட்சரம், திரு.ஞானசேகரன், திரு நெல்லைலிங்கம், மருத்துவர் சண்முகசுந்தரம், திரு. ஆறுமுகம் ஆகியோர் வந்திருந்தனர். எம்.ஜி.ஆர் அவர்கள் அவர்களை இனிய முகத்துடன் வரவேற்றார். அவர்களோடு மதிய உணவு அருந்தினார்.

சிங்கள இராணுவத்தின் கொடுஞ் செயல் பற்றி ஈழத்தமிழர்கள் விளக்கிக் கூறியதைப் பொறுமையோடு கேட்டார்கள். இந்த சந்திப்பு இரண்டு மணி நேரம் நடந்தது. முதல்வராக இருந்து பல்வேறு பணிச்சுமைகளுக்கு மத்தியிலும் ஈழத்தமிழர்களின் பிரச்சனை குறித்து யார் பேசவந்தாலும் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நேரம் ஒதுக்கி ஈழத்தமிழர் நலனுக்காக வாழ்நாள் முழுவதும் அயராது பாடுப்பட்டார் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.

**தீர்வுகாண வற்புறுத்தல்**

இலங்கைத் தமிழரின் கண்ணீரைத் துடைக்கும் கருணையுள்ளம் படைத்த எம்.ஜி.ஆர் அவர்கள் தனது கட்சியின் செயற்குழு, பொதுக்குழுவை 13-8-83, 14-8-83, ஆகிய இரு நாள்களிலும் சென்னையில் கூட்டி முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றினார். அந்த தீர்மானங்கள் வருமாறு:

www.padippakam.com



1. இலங்கையில் மனித உரிமைகளுக்காகப் போராடும் அனைத்து தமிழர்கள் மீது சிங்கள வெறியர்களும் வெறிபிடித்த இராணுவத்தினரும் நடத்திய இனவெறிப் படுகொலைக்கு காரணமான செயவர்த்தனாவின் இலங்கை அரசுக்கு செயற்குழு கண்டனத்தைத் தெரிவிப்பதோடு, தமிழர்களின் இரத்தத்தை உறிஞ்சும், உரிமைகளைச் சூறையாடும் சிங்கள வெறியர்களுக்கு உறுதுணையாக இருந்த செயவர்த்தனா அரசின் காட்டுமிராண்டித்தனமான செயலை இச்செயற்குழு வன்மையாகக் கண்டனம் செய்கிறது.

2. இலங்கை இராணுவத்தினராலும் சிங்கள இனவெறியராலும் தமிழர்கள் படுகொலைக்கு ஆளானதையும், தமிழினத்தின் பாதுகாப்பிற்காகப் போராடி பல கொடுமைகளை அனுபவித்துச் சிறைப்பட்டிருந்த குட்டிமணி, செகன், தங்கதுரை போன்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட விடுதலை வீரர்களை, சிங்களக் கைதிகள் மிகக் கொடூரமான முறையில் படுகொலை செய்ததையும் செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதோடு உயிர் துறந்த அம் மாவீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்துகிறது.

3. இலங்கைத் தமிழர்களுக்காக இராசபாளைத்தில்– திருச்செங் கோட்டில் தீயிட்டுக் கொண்டு உயிர் நீத்த திரு. சுப்பிரமணியன், திரு. கணேசன் ஆகியோர் குடும்பங்களுக்கு செயற்குழு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறது.

4. இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சரை அனுப்பி இலங்கை அதிபருடன் நேரடித் தொடர்பு கொள்ளவும். தமிழ் அகதிகளை பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்ல கப்பல்களை அனுப்பவும் அவதியுறும் தமிழ் அகதிகளுக்குத் தேவையான உணவு, உடை, மருந்துப் பொருள்களை அனுப்பவும் மத்திய அரசை அ.தி.மு.கழக செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



5. ஈழத்தமிழர்களின் நலன் காக்கும் வகையில் அவர்களது பிரச்சனைகளுக்கும், அவர்களது உயிர் உடமைகளுக்கும் பாதுகாப்பு தரும் வண்ணம் நிரந்தரத் தீர்வு காணவேண்டும் என்பதை வற்புறுத்துவதற்காக அ.தி.மு.கழகத் தோழர்கள் அனைவரும் 16-8-83 முதல் செப்டம்பர் 14ஆம் தேதி வரை கருப்புச் சட்டை அணிய வேண்டும் என்றும் அறிஞர் அண்ணாவின் உருவம் உள்ள சின்னம் அணிய வேண்டும் என்றும் அதற்குள் ஈழத்தமிழர்கள் பிரச்சனைகளுக்கு நல்ல முடிவு எடுக்காவிட்டால் மீண்டும் செப்டம்பர் மாதம் 19ஆம் தேதியன்று பொதுக்குழுவைக் கூட்டி, மேல் நடவடிக்கைகள் பற்றி முடிவு எடுக்கப்படும். என்றும் எம்.ஜி.ஆர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேறியது.

எம்.ஜி.ஆர் அவர்களும், அவரது அமைச்சர்களும் கட்சிக்காரர்களும் அநேக அரசு அதிகாரிகளும் கருஞ்சட்டை அணிந்தார்கள். தமிழினம் ஈழத்தில் நசுக்கப்படுவதை இதன் மூலம் வெளிப்படுத்தினார் எம்.ஜி.ஆர்.

## இனப்படுகொலைக்கு கண்டனம்

அடுத்த நடவடிக்கையாக, தமிழீழ மக்களுக்கும், மலையகத் தமிழ் மக்களுக்கும் செயவர்த்தனா அரசு செய்த கொடுமைகளை விளக்கி 10-8-83ல் தமிழகம் முழுவதும் கண்டனக் கூட்டங்கள் எம்.ஜி.ஆர் அவர்களால் நடத்தப்பட்டன.

தமிழக அமைச்சர்கள் எல்லாம் தமிழகத்தின் மூலைமுடுக்கெல்லாம் சென்று பொதுக்கூட்டங்கள் வாயிலாக ஈழத்தமிழர்களின் நிலமையை சாதாரண மக்களும் புரியும்படி செய்தார்கள். மூத்த அமைச்சர் திரு.எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் "தமிழ் இனப் படுகொலை" என்ற தலைப்பில் ஈழத்தமிழர் பிரச்சனை பற்றி 'போர்வாள்' என்ற இதழில் எழுதி

www.padippakam.com



வந்த கட்டுரைகள் சிங்கள இனவெறிக் கும்பலின் கோரமுகத்தை அடையாளம் காட்டின. இது சிங்கள இனவெறி அரசுக்கு எதிராக தமிழர்களை ஒன்று திரட்டும் எம்.ஜி.ஆர் அவர்கள் முயற்சிக்கு உறுதுணையாக அமைந்தது.

திரு.எஸ்.டி. எஸ்சின் இந்தக் கட்டுரைகள், பிறகு நூல் வடிவிலும் வெளிவந்தது. இது சிங்கள இனவாத அரசை உலகிற்குத் தோலுரித்துக் காட்டும் வரலாற்று ஆவணமாகவே விளங்குவதாயிற்று.

எம்.ஜி.ஆர் அறிவித்த கண்டனக் கூட்டங்களில் கலந்து கொண்ட எஸ்.டி.எஸ். விடுதலைப் புலிகளை ஈழத்தின் இராணுவமாக ஏற்று ஈழத்தை தனிநாடாக அறிவிப்பீர் என்று டில்லி அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

அமைச்சர் திரு காளிமுத்து, இலங்கை அரசின் கறுப்புச் சட்டத்தை மேடையிலேயே கிழித்து காலில் போட்டு மிதித்தார். அதோடு இராணுவ விசாரணை நடத்தி இலங்கை அதிபர் செயவர்த்தனாவை உலகறிய தூக்கிலிட வேண்டும் என்று மேடைதோறும் முழங்கினார்.

10-8-83 அன்று, அருப்புக்கோட்டையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எல்லா வகையிலும் துணையாக நிற்பது ஒன்றுதான் இலங்கை தமிழர் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு சாலச் சிறந்த வழியாகும் என்றார் திரு.காளிமுத்து.

'சிங்கள வெறியர்களைப் பழிக்கு பழி வாங்கத் துடிக்கிறோம் டெல்லி அரசே ஆயுதம் தா, நாங்கள் புறப்படத்தாயார்' என்று தமிழகத்தின் உணர்ச்சிக் கொந்தளிப்பை திரு. காளிமுத்து டெல்லிக்கு எடுத்துரைத்தார்.

www.padippakam.com



இப்படியாக அமைச்சர்களும் அ.தி.மு.கழகத்தின் பேச்சாளர்களும் தமிழகம் முழுவதும் இலங்கை அரசு மீதான கண்டனக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றினார்கள்.

அமைச்சர்களின் இந்த உணர்ச்சிகரமான பேச்சுக்கள் குறித்து 27-10-83 அன்று சட்டமன்றத்தில் வினா எழுப்பப்பட்டது. இதற்கு தனது கருத்தையே அமைச்சர்கள் பிரதிபலித்தார்கள் என்று எம்.ஜி.ஆர் அவர்கள் விளக்கமளித்தார்.

"சோமசுந்தரமோ, காளிமுத்துவோ என்னை மீறி பேசமாட்டார்கள். அவர்கள் பேசுவதற்கு முன்பு என்ன கருத்துக்களைச் சொல்லப்போகிறோம் என்று சொல்லிவிட்டுத்தான் பேசுவார்கள். எங்களுக்குள் கருத்து ஒற்றுமை உண்டு. பேசுகிற வார்த்தையில் வேகம் இருக்கலாம். அப்படி கருத்து ஒற்றுமை இல்லை என்றால் இந்த அமைச்சரவையைக் கலைத்துவிட்டு வெளியேறுவோம்"

***தினமணி 28-10-83***

இலங்கை இராணுவத்தினர், காவல்துறையினர், காடையர்கள் ஆகியோருக்கு ஆதரவு அளித்துவரும் செயவர்த்தனா அரசைக் கண்டித்து 25-10--83 அன்று சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினார். அதோடு ஈழத்தமிழர்களுக்காக பதினைந்து தீர்மானங்கள் இயற்றினார்.

**பாதுகாப்புக்கான நடவடிக்கை**

ஈழத்தமிழர்களுக்கு நேர்ந்த கொடுமைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு எம்.ஜி.ஆர் அவர்கள் திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்களுடன் தொடர்பு கொண்டு ஈழத்தமிழர் பாதுகாப்பு குறித்து நாம் ஏதாவது வகையில் உதவி செய்ய வேண்டும் என வற்புறுத்தினார்.

www.padippakam.com



ஹிட்லரை மிஞ்சும் அளவுக்கு கொடுங்கோல் ஆட்சி நடத்தும் செயவர்த்தனா, இந்திராகாந்தி அம்மையார் அவர்களின் சமாதானப் பேச்சை எல்லாம் தட்டிக் கழித்து விட்டு தமிழர்களை நாட்டை விட்டு வெளியேற்றுவதிலேயே குறியாக இருந்தார்.

செயவர்த்தனாவை இனி நம்ப முடியாது என முடிவு செய்த இந்திராகாந்தி அம்மையார், எம்.ஜி.ஆர் அவர்களின் கோரிக்கைகளை ஏற்று ஈழப்போராளிகள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள தமிழகத்திலும், இந்தியாவில் ஏனைய பகுதிகளிலும், முகாம் அமைத்து பயிற்சி எடுப்பதற்கு அனுமதி கொடுத்தார்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்களின் அரிய முயற்சியால்தான் ஈழத்தமிழர்கள் தங்களையும் தங்கள் மண்ணையும் பாதுகாத்துக் கொள்வதற்கான பலத்தைப் பெற்றார்கள்.

இதை உறுதிப்படுத்தும் விதமாகத்தான் எம்.ஜி.ஆர் அவர்கள் இயற்கை எய்திய போது 'தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர் இல்லையென்றால், நாங்கள் ஒரு கட்டத்தில் அனாதைகள் ஆகியிருப்போம்' என்று ஈழ விடுதலை அமைப்புகள் அனைத்தும் அறிவித்தன.

உண்மைதான். ஈடிணையில்லா மனிதாபிமானப் பண்பு கொண்ட எம்.ஜி.ஆர் அவர்கள் ஈழத்தமிழர்களின் பாதுகாவலனாகவே இருந்தார்கள்.

## செயவர்த்தனாவிற்கு எச்சரிக்கை

30-8-83 அன்று வழக்கம் போல் எம்.ஜி.ஆர் அவர்கள் காலை பத்திரிகை படிக்கும்போது, இலங்கை அதிபர் செயவர்த்தனா ஆணவத்தோடு நிபந்தனையின்றிப் பேச மறுக்கிறார் என்ற செய்தியைப் பார்த்து இனி செயவர்த்தனாவிடம்

www.padippakam.com



நீதியை எதிர்பார்க்க முடியாது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டு இலங்கை அதிபருக்கு தமிழகத்தின் சார்பாக எச்சரிக்கை கொடுத்தார்.

இந்திய நாட்டின் அதிகார வரம்புப்படி ஒரு மாநில முதலமைச்சர் வேறொரு வெளிநாட்டின் அரசுத் தலைவரை எச்சரிக்கை செய்ய இடமில்லை. ஆனால் எம்.ஜி.ஆர் அவர்கள் செயவர்த்தனாவுக்கு கடுமையான முறையில் எச்சரிக்கை செய்து அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கை மூலம் "தமிழர்கள் கட்டுப்பட்டிருக்கிறார்கள், கட்டுண்டிருக்கிறார்கள். செயவர்த்தனா தயவு செய்து தமிழகத்தை ஆத்திரத்திற்கு உள்ளாக்கிட வேண்டாம் என்று மட்டும் இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு, 'இருப்பது ஓர் உயிர்தான், போவதும் ஒருமுறைதான்' என்று அறிஞர் அண்ணா கூறியதை தெரிவித்துக் கொள்கிறேன். ஈழத்தில் நடைபெறுகின்ற இனப் படுகொலை காரணமாகத் தமிழகத்தில் உள்ள ஐந்து கோடி தமிழர்களும் சீறிப் பாயக் கூடிய நிலைமையை செயவர்த்தனா நிச்சயமாக ஏற்படுத்தக் கூடாது என்று தமிழக முதல்வர் என்ற முறையிலும் அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகத்தை நிறுவியவன் என்ற முறையிலும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று செயவர்த்தனாவிற்கு பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்தார்.

இதில் முக்கியமான ஒன்றை கவனிக்க வேண்டும். 'தமிழக முதல்வர் என்ற முறையிலும்' என்ற சொல்லாக்கத்தையும் எம்.ஜி.ஆர் அவர்கள் பயன்படுத்தியிருப்பது, தமிழக முதல்வர் பதவி என்பது ஏதோ பெட்டிப் பாம்பாக முடங்கி கிடக்கும் பதவியல்ல என்பதை பொட்டில் அறைந்து உணர்த்துகிறது. எங்கெல்லாம் தமிழர்கள் பாதிப்புக்கு உள்ளாகிறார்களோ அவர்களை பாதுகாக்கும் பதவிதான் தமிழ்நாட்டின் முதல்வர் பதவி என்பதையும் கடமையுணர்வோடு இலங்கை அதிபருக்கு எம்.ஜி.ஆர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

www.padippakam.com



எடுத்ததற்கெல்லாம் சிலர் எகிறிக் குதிப்பார்கள்; புரட்சிகரமாக பேசுவார்கள். மாபெரும் போராட்டம் என்று சொல்லி அகன்ற திரை அளவுக்கு விளம்பரம் செய்வார்கள். சிறையைக் கண்டு அஞ்சமாட்டோம் என்று வீரமுழக்கமிடுவார்கள். மதியம் கைதாகி மாலையில் விடுதலை ஆகிவிடுவார்கள். பதவி என்று வந்து விட்டாலோ தலைகீழாகவே மாறிவிடுவார்கள். ஆனால் எம்.ஜி.ஆர். அவர்களின் வரலாறு இவர்களிடமிருந்து நேர்மாறானது. எந்தவித சந்தர்ப்பவாத போக்குக்கும் அதில் இடமில்லை.

எந்த நிலையிலும் எம்.ஜி.ஆர் அவர்கள் தனது போர்க்குணத்தை அடகு வைத்து விடவில்லை. அநீதிக்கு எதிராகப் போராடும் முதல்வராவே இருந்தார். அதனால்தான் இலங்கை அதிபர் செயவர்த்தனாவை துணிச்சலுடன் கண்டனம் செய்தார்.

## அமெரிக்காவின் நிலையை அம்பலப்படுத்தினார்

இலங்கை அரசை கண்டிக்கும் அதே வேளை, இலங்கை அரசின் தமிழர் விரோத நடவடிக்கைகளுக்கு மறைமுகமாகவும் நேரடியாகவும் துணை போகும் சக்திகளையும் அவர் கண்டிக்கத் தவறவில்லை.

சிங்கள கொடுங்கோல் அரசுக்கு அமெரிக்க அரசு ஆயுத உதவி செய்வதைக் கண்டித்து 12-10-83ல் சென்னையில் பேரணி நடத்துவதற்கு எம்.ஜி.ஆர் அவர்கள் அழைப்பு விடுத்திருந்தார்.

12ஆம் தேதி காலையிலிருந்து கருஞ்சட்டை அணிந்த அ.தி.மு.க.வினர் பேருந்துகளிலும், லாரிகளிலும், கார்களிலும் தமிழகம் எங்கும் இருந்து சென்னைக்கு வந்து குவிந்தார்கள். எங்கு பார்த்தாலும் இனமானத் தமிழர்கள், கருஞ்சட்டை வீரர்கள்.

"பார் சிறுத்ததோ படை பெருத்ததோ" என்று பரணி பாடிய

www.padippakam.com



செயங்கொண்டாரின் வரிகளால் வருணிப்பதா? இப்படை தோற்கின் "எப்படை வெல்லும்" என்ற பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் வீரவரிகளால் விளக்குவதா? அந்த அளவுக்கு உலகமே வியக்கும் வண்ணம் அமைந்திருந்தது. மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் நடத்திய அந்தப் பேரணி.



சிங்கள கொடுங்கோல் அரசுக்கு அமெரிக்க அரசு ஆயுத உதவிகள் செய்வதைக் கண்டித்து எம்.ஜி.ஆர் அவர்களால் நடத்தப்பட்ட பேரணி.

www.padippakam.com



அண்ணா சாலையில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் இருந்து எம்.ஜி.ஆர். அவர்கள் பேரணியை பார்வையிட்டார். பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் முக்கியத் தலைவர்கள், கை குழந்தைகளுடன் பெண்கள் என இலட்சோப லட்சம் தமிழர்கள் முழக்கம் எழுப்பியபடி வந்தது மெய்சிலிர்க்க வைத்தது.

செயவர்த்தனாவுக்கு மட்டுமல்ல அமெரிக்க ஏகாதியபத்தியத்திற்கும் எதிராக தமிழகமே ஆர்த்தெழுந்து நிற்பதை பேரணி உணர்த்தியது.

அ.தி.மு.கழகத்தின் அப்போதைய பொதுச்செயலர் ப.வு. சண்முகம், கொள்கைப் பரப்புச் செயலர் செல்வி ஜெயலலிதா (தற்போதைய பொதுச் செயலர்) ஆகியோர் தலைமையிலான குழு, அமெரிக்க தூதராக துணை கான்சல்ராய் விக்டேக்கரிடம் மனு கொடுத்தார்கள். மனுவில் குறிப்பிட்டிருந்ததாவது:-

"மனித உரிமைகள் குறித்து நாள்தோறும் பேசி வருகின்ற அமெரிக்க அரசு இலங்கைத் தமிழர் படுகொலைகள் குறித்து கண்டனம் எதுவும் தெரிவிக்காமல், தனது பாதுகாப்பு அமைச்சரை இரகசியமாக இலங்கைக்கு அனுப்பி வைத்தது தமிழக மக்களின் உள்ளதைப் புண்படுத்தி உள்ளது."இதனால் இலங்கையில் நடந்த படுகொலைகளுக்கு அமெரிக்க அரசு ஆதரவாக உள்ளது என்றே கருத வேண்டிய சூழ்நிலை உருவாகி உள்ளது.

"இந்த இரகசிய பயணத்தால் இலங்கையிலுள்ள சிங்கள வெறியர்கள் ஊக்கம் பெற்றுள்ளனர். அமெரிக்க இராணுவ அமைச்சர் இலங்கை அரசுக்கு ஆயுத உதவி தர உறுதி அளித்துள்ளார் என்று கருதவும் இடம் உண்டு. இச் சூழ்நிலையில் அ.அ.தி.மு. கழகம் இப்பேரணி மூலம் இலங்கை அரசுக்கு அமெரிக்க ஆயுத உதவி அளிக்கக் கூடாது என்று வலியுறுத்துகிறது.

www.padippakam.com



"அமெரிக்க அரசு தமது அரசியலுக்கு இலங்கைத் தமிழர் பிரச்சனையை ஒரு பகடைக் காயாக பயன்படுத்த முயல்வதைக் கைவிட்டு விடுவதுடன், திருகோணமலையில் அமெரிக்க இராணுவதளம் அமைக்கும் முயற்சியையும் கைவிட வேண்டும்."

*(தினமணி 13-10-83)*



**ஈழத்தமிழர்களுக்கு துணை நிற்போம் என்று இலட்சக் கணக்கில் திரண்ட இனமானத் தமிழர்களை மக்கள் திலகம் கையெடுத்து வணங்குகிறார்.**

படிப்பகம்

www.padippakam.com



எதற்கெடுத்தாலும் அமெரிக்காவைக் குறை கூறும் வழக்கம் இங்கு உண்டு. அப்படியிருக்கும்போது தமிழர்களைக் கொன்று குவித்து, மனித உரிமைகளை மீறும் இலங்கை அரசுக்கு அமெரிக்கா ஆயுத உதவி செய்வதைக் கண்டிக்க இங்கு யாருமே முன்வரவில்லை அதை எம்.ஜி.ஆர் அவர்கள்தான் செய்தார்கள். ஒருபுறம் உலகிற்கே சனநாயகம் பேசிக்கொண்டு மறுபுறம் ஆயுதமும் வழங்கும் அமெரிக்காவின் இரட்டை நிலையை அம்பலப்படுத்தினார்.

## தொலைநோக்கு சிந்தனை

இப்படிப்பட்ட சூழ்நிலைக்கு இடையே சிங்கள இனவாத அரசுக்கு எதிராக தமிழகமக்களின் உள்ளக்குமுறுல்களை வெளிப்படுத்தும் விதமாக திரு.பழ. நெடுமாறன் அவர்கள் படகு மூலமாக இளைஞர்களுடன் இலங்கைக்குப் புறப்பட தயார் ஆனார். இதையறிந்த தமிழக அரசு இராமேசுவரத்திலுள்ள படகுகளை எல்லாம் அப்புறப்படுத்தி விட்டது. இதன் காரணமாக எம்.ஜி.ஆர் அவர்களை சிலர் குறை கூறினார்கள். இதற்கு பதில் அளிக்கும் விதமாக எம்.ஜி.ஆர் அவர்கள் 15-11-83 அன்று தமிழக சட்டசபையில் அனைவரும் சிந்திக்கும் வகையில் உரையாற்றினார். அதுவருமாறு:

“ஒரு நெடுமாறனை நாம் இழந்து விட்டால் இன்னொரு நெடுமாறனை நாம் உற்பத்தி செய்ய முடியுமா? இதை சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? இந்திராகாந்தி அம்மையாருக்கு வந்த ஆபத்தை தான் தாங்கிக் கொள்கிற ஆற்றல் பெற்றிருக்கிற நெடுமாறன் அவர்கள், அங்கே போய், இடையில் யாராவது சுட்டால் அவரிடம் துப்பாக்கி இருக்கிறதா அல்லது தடுப்பு கருவி இருக்கிறதா, ஒன்றும் இல்லை. மனம்தான் துணிவோடு இருக்கிறது. அங்கே போய் ஆபத்து ஏற்பட்டு விட்டால் என்ன செய்வது? ஆகவே படகுகள் இல்லாமல் செய்தோம்.

www.padippakam.com



... உணர்ச்சி அவ்வப்போது வந்து போய் விடும். உணர்வுதான், நினைவு இருக்கும் வரை இருக்கும். அந்த உணர்வு இருக்க வேண்டும். நாம் செய்வது என்ன காரியம், சரியா தவறா, என்ன விளைவு, எண்ணினேன், நான் போய் பிரச்சாரம் செய்ய முடியாது. நெடுமாறன் செய்கிறார். ஆட்கள் வருகிறார்கள். தினமும் பத்திரிகையில் வருகிறது அது வெளிவரட்டும். அது அந்த நாட்டுக்கு நல்லதாக அமையட்டும். அந்த உணர்வுகள் பெருகுமானால் பெருகட்டும் என்பதற்காக அவரை (நெடுமாறனை) கைது செய்யாமல் விட்டுவிட்டேன்."

*தமிழக சட்டமன்ற உரையில் Nov.1983*

திரு. நெடுமாற்ன் அவர்களுக்கு எதுவும் ஆகிவிடக் கூடாது. அவர்தான் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்று தொலை நோக்கத்துடன் எம்.ஜி.ஆர் அவர்கள் அன்று குறிப்பிட்டதை திரு. நெடுமாறன் அவர்களின் செயல்பாடுகள் மெய்பிக்கின்றன. அதோடு நெடுமாறன் அவர்களின் துணிவை மதிக்கும் எம்.ஜி.ஆர் அவர்கள் அவரின் பயணத்தை தடுக்க விரும்புவாரா? அவரிடம் துப்பாக்கியோ தடுப்பு கருவியோ இல்லை என்றுதான் எம்.ஜி.ஆர் அவர்கள் வருத்தப்பட்டார்கள். சிங்கள இனவாத அரசை எதிர்கொள்ள வேண்டுமென்றால் போர்க் கருவிகள் தேவை என்பதைதான் சட்டசபையில் எம்.ஜி.ஆர் அவர்கள் ஆற்றிய உரை உணர்த்தியது.

சட்டமேலவையில் தமிழக அரசின் சார்பாக 28-10-83 அன்று சிங்கள இனவாத அரசின் போக்கை கண்டித்து தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றினார் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.

## தீர்க்கமான முடிவு

ஈழப்பிரச்சனையில் எம்.ஜி.ஆர் அவர்கள் எடுத்துவரும் நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் விதமாகத்தான் உலக நாடுகளின் பத்திரிகைகளும் இலங்கை நிலவரத்தை ஆய்ந்து செய்திகள் வெளியிட்டன.

www.padippakam.com



அவை, இனப்படுகொலையை கண்டித்து "கொலைவெறியன் செயவர்த்தனா ஒரு சர்வாதிகாரி" என்று சாடின. ஒரு சில நாடுகள் தவிர ஏனைய நாடுகள் இலங்கை அரசுக்கு கடுமையான முறையில் கண்டனம் தெரிவித்தன. ஆனால் செவிடன் காதில் சங்கூதிய கதை போல் செயவர்த்தனா எதையும் கண்டு கொள்ளாமல் ஈழத்தமிழர்களைக் கூண்டோடு அழித் தொழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தான்.

செயவர்த்தனாவின் கொடுஞ் செயல்களுக்கு உடனடியாக முடிவு கட்டியாக வேண்டும் என்ற நிலைக்கு வந்தார் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். ஆகவே ஈழத்தில் போராடுகின்ற போராளிகளுக்கு உதவி செய்து அவர்களின் துணையோடுதான் தமிழீழ மக்களை பாதுகாக்க முடியும் என்று செயலில் இறங்கினார்.

போராளிகளைப் பற்றி முழு அளவில் அறிந்து கொண்டபின்தான் இப்படிப்பட்ட ஓர் முடிவை எடுத்தார் எம்.ஜி.ஆர். இதிலும் மிகவும் கவனமாக அவர் தேர்ந்தெடுத்தது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம். இந்த இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் செயல்பாடுகள் மீது எம்.ஜி.ஆர் அவர்களுக்கு முழு நம்பிக்கை ஏற்பட்டது.

**இது பற்றிய விவரங்களை அப்போதைய மின்துறை அமைச்சர் திரு.பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்.**

திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் எம்.ஜி.ஆர் அவர்களின் வலதுகரமாக இருந்து செயல்பட்டவர். இதனால்தான் அகதிகள் மறுவாழ்வுத் துறையை எம்.ஜி.ஆர் அவர்கள் இவரிடமே ஒப்படைத்திருந்தார். அப்போது ஈழத்தமிழர் பிரச்சனையில் எம்.ஜி.ஆர் அவர்களின் செயல்பாடுகள் எவ்வாறு இருந்தன என்று திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் கூறியதாவது-

"புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய ஆட்சி

www.padippakam.com



தமிழ்நாட்டில் அப்போது இருந்தது. அந்த ஆட்சியின் மூலம் எந்தளவுக்கு ஈழத் தமிழ் மக்களுக்கு உதவி செய்ய முடியுமோ அந்தளவுக்கு உதவி செய்தார். அங்கிருந்து அகதிகளாக வந்தவர்களுக்கு முகாம்கள் அமைத்து, அவர்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, செலவுகள் இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டார்.

"இது ஒருபுறம் இருக்க, இலங்கை இராணுவம் தமிழர் பகுதிகளிலுள்ள பள்ளிக் கூட்டங்கள், கல்லூரி என அனைத்து இடங்களிலும் குண்டு போட்டு முற்றிலுமாக அழித்து விட்டதால் பாதியிலேயே படிப்பை நிறுத்தி விட்டு வந்த மாணவர்கள்.... அவர்களுக்கு தனி ஒதுக்கீடு செய்து பள்ளிகளில், கல்லூரி, பொறியியல் கல்லூரி, மருத்துவப் படிப்பு போன்றவற்றிலும் அவர்களை சேர்ப்பதற்கு வழி வகை செய்தார்.

"தமிழகம் முழுவதும் இலங்கைத் தமிழர்களுக்காக தனியாக ஒரு நிதி திரட்டினார். அந்த நிதியின் மூலம் அங்கிருந்து வந்த மக்களுக்கு உதவி செய்தார். அப்பொழுது எல்.டி.டி.ஈ, ஈ.ரோஸ், ஈ.பி.ஆர். எல்.எஃப், புளொட், டெலோ முதலான இயக்கங்கள் இருந்தன. ஒவ்வொரு இயக்கத்தினரையும் வரச் சொல்லி அவர்களோடு பேசி, அவர்களுக்கு என்ன என்ன உதவிகள் செய்ய வேண்டுமோ செய்தார். குறிப்பாக எல்.டி.டி. இயக்கத்தினர் மீது அவர்களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. எல்லா இயக்கங்களையும் வரவழைத்து பேசியதில் உண்மையாக தமிழ் மக்களுக்கு பாடுபடக்கூடிய இயக்கம் எல்.டி.டி.ஈ. கணித்தார்.

"ஆகவே எல்.டி.டி தலைவர் பிரபாகரன், அன்டன் பாலசிங்கம் போன்றவர்களுக்கு தனி சிறப்பு கவனம் செலுத்தி அவர்களை நல்ல முறையில் பாராமரித்தார்.

"பிரபாகரன் இயகத்தினருக்கு வேண்டிய செலவுகள்,

www.padippakam.com



மற்றவைகளுக்கு அவர் தன்னுடைய சொந்த பணத்தில் இருந்து நிதி உதவிகள் செய்தார். சுருக்கமாக சொல்லப் போனால் தாய் வீட்டுக்கு வந்தால் எவ்வாறு கவனித்துக் கொள்வார்களோ அதைப் போல், அக்கறை எடுத்துக் கொண்டு தன்னுடைய அரசு, கட்சி, தன்னுடைய சொந்த செல்வாக்கு, பணம் அவ்வளவையும் எம்.ஜி.ஆர் ஈழத்தமிழ் மக்களுக்குப் பயன்படுத்தினார்.

"பிரபாகரனும் அல்லது அன்டன் பாலசிங்கமும் எம்.ஜி.ஆரை பார்க்கணும்னு நினைச்சா, உடனே வரச் சொல்லி அவர்களைப் பார்த்து, அவர்களுக்கு வேண்டியதை எல்லாம் செய்வார், அந்தளவுக்கு அவர் பாசத்தோடு பிரபாகரனை வைத்திருந்ததை நேராக பார்த்திருக்கிறேன். அதுதான் அவர் மற்ற உதவிகள் செய்வதற்குக் கூட அடிப்படை காரணமாக அமைந்தது. அதனாலே அவர்களும் அவர் மீது பாசமாக இருந்தார்கள்.

"இன்னும் சொல்லப் போனால் எந்தளவுக்கு அந்த நட்பும் பாசமும் இருந்ததென்றால் டெல்லி சர்க்காரே வந்து பொறாமைப் படுமளவுக்கு இருந்தது. அது ஒரு பெரிய தொல்லை! டெல்லி சர்க்கார் வந்து, எல்.டி.டி. வளர்வதை அப்போதே விரும்பவில்லை. (அவங்க) மற்ற இயக்கங்கள் மீது அவர்களுக்கு ஒரு ஆதிக்கம் இருந்தது.

"ஆனா எல்.டிடியை பொறுத்தவரையில் அவங்க டெல்லி சர்க்காரை வந்து ஒத்துக்கவே இல்லை. நம்ம அரசுடைய உதவிகளைத்தான் எதிர்பார்த்தாங்க. டெல்லியை நம்பவே இல்லை. அதில வந்து ஓரளவுக்கு டெல்லி சர்க்காருடைய (ரா) ஏஜென்சி, அதாவது வெளிநாட்டுல உளவு பார்க்கிறாங்களே அவங்க எல்லாம் எம்.ஜி.ஆரும், பிரபாகரனும் கொண்டிருந்த நட்புறவைக் கண்டு பொறாமை கொண்டார்கள். இருந்தாலும்,

www.padippakam.com



*இந்திராகாந்தி அம்மையார் அரசோடு நல்ல உறவு இருந்ததாலே அவங்களாலே ஒன்றும் பண்ண முடியவில்லை. அந்தளவுக்கு பிரபாகரனை ஒரு செல்லப் பிள்ளையாகத்தான் வளர்த்தார்."*



**மக்கள் திலகம் எம்.ஜி.ஆரும் ஈழத்தமிழர்களுக்கு உரிமைக் குரல் கொடுக்கும் வே.பிரபாகரன் அவர்களும்.**

www.padippakam.com



# உலக அரங்கில் தமிழீழத்தின் குரல்

அடுத்து அடுத்து வந்த எல்லா சிங்கள அரசுகளுமே தமிழர்களின் உரிமைகளை தொடர்ந்து பறித்தே வந்தன. 1961ஆம் ஆண்டு சிங்கள அரசின் அடக்குமுறைகளை எதிர்த்து தமிழர்கள் போராடியபோது அதைக் காட்டுமிராண்டித்தனமாக ஒடுக்கியது சிங்கள அரசு. இதைக் கண்டு துடித்துப்போன அறிஞர் அண்ணா அவர்கள் ஐ.நா. மன்ற செயலாளருக்கு தந்தி அனுப்பினார்.

"...அருள் கூர்ந்து தலையிடுங்கள், இணக்கமான ஒப்புரவை மீட்டுத்தாருங்கள்; மனித உரிமைகளைக் காப்பாற்றுங்கள்; உண்மைநிலை ஆய்வுக் குழுவை அமர்த்துங்கள். இலங்கையில் தமிழினமும் தமிழ் மொழியும் பூண்டோடு அழிக்கப் படுவதிலிருந்து காப்பாற்றுங்கள். உரிய கால உடனடி நடவடிக்கை ஐ.நா. மன்றத்தின் மதிப்பையே உயர்த்தும். தமிழ் நாடு முழுவதும் வேண்டிக்கொள்கிறது. - நீதி, அமைதி ஒப்புரவுக்கான ஐக்கிய நாடுகள் மன்றத்தின் மீது நம்பிக்கைகொண்ட தமிழர்கள்" என்றது அண்ணா அனுப்பிய தந்தி.

அறிஞர் அண்ணா அவர்கள் ஐ.நா.மன்றத்திற்கு வேண்டுகோள் வைக்கும் போது, தமிழர்கள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்திருக்கவில்லை. காந்திய அறவழியில்தான் போராடினார்கள். அப்படி இருந்தும் அவர்களுக்கு துப்பாக்கி குண்டுகளையும் சித்திரவதைகளையும், சிறைக்கொலைகளையும்தான் சிங்கள அரசு பரிசாகக் கொடுத்தது. இந்தக் கொடுமைகளைக்கண்ட அறிஞர் அண்ணா அவர்கள் உள்ளம் குமுறினார். "ஈழத்தில் நடப்பது இனப்படுகொலையே (Genocide)" என்று அன்றே உலகுக்கு அறிவித்தார்.

www.padippakam.com



அண்ணா அவர்களின் வழிகாட்டுதலைப் பின்பற்றிய மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள், 1983ஆம் ஆண்டு இனப்படுகொலை உச்சகட்டத்தில் இருந்தபோது தமிழீழ மக்களின் நியாயமான பிரச்சனைகளை உலக சமுதாயம் அறிந்து கொள்ளும் பொருட்டு ஐ.நா. மன்றத்தில் குரல் எழுப்ப இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையாரிடம் வலியுறுத்தினார்.

எம்.ஜி.ஆர் அவர்கள் சிங்கள இனவாத அரசின் முகத்திரையை தோலுரித்துக் காட்ட வேண்டிய இடம் ஐ.நா. மன்றம்தான் என்பதை முடிவுசெய்து இந்தியாவின் சார்பில் ஐ.நா.மன்றத்தில் குரல் எழுப்ப வேண்டியதன் அவசியத்தை இந்திரா காந்தி அம்மையாரிடம் எடுத்துக் கூறினார்.

எம்.ஜி.ஆர் அவர்களின் கோரிக்கையில் நியாயம் இருப்பதை இந்திராகாந்தி அம்மையாரும் உணர்ந்தார். ஐ.நாவிற்கு தனது தலைமையிலேயே ஒரு குழு செல்வதற்கு முடிவு செய்தார்.

இதுவரை தமிழக அளவில் மட்டும் பேசப்பட்டுவந்த ஈழத்தமிழர் பிரச்சனையை உலக அளவில் கொண்டுசென்றவர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள்தான். இது தமிழீழ மக்களுக்கு நம்பிக்கை ஒளியாக அமைந்தது.

நியாயத்தை உணர்ந்தால் மட்டும் போதாது நியாயத்திற்கு ஆதரவு தேட வேண்டும் என்று எம்.ஜி.ஆர் அவர்கள் அநீதிக்கு ஆளாக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்கு உலக அரங்கில் ஆதரவை பெற்றுத்தருவற்கு வழிகோலினார்.

திருமதி இந்திரா காந்தி தலைமையிலான அரசுடன், எம்.ஜி.ஆர் அவர்கள் இணக்கமான உறவை ஏற்படுத்திக் கொண்டிருந்ததால், ஈழப்பிரச்சனையில் கருத்து வேறுபாடுகள் அற்ற நிலையை எடுக்க உதவிகரமாயிற்று.

ஐ.நா. மன்றத்தில் இந்தியாவின் சார்பாக ஒரு மாநில

www.padippakam.com



அமைச்சரோ அல்லது முதலமைச்சரோ பேசுவதற்கு வாய்ப்பில்லைதான்.

தமிழீழத்தில் சிங்கள இராணுவத்தால் நடக்கும் கொடுமைகளை எல்லாம் விளக்கிட, தனது அமைச்சரவையில் இருந்து ஒருவர் சென்று ஐ.நா. மன்றத்தில் பேசினால்தான் அது தமிழீழத்தின் குரலாக மட்டுமல்ல தமிழகத்தின் குரலாகவும் இருக்கும் என்று முடிவு செய்தார் எம்.ஜி.ஆர். இதற்கு மதிப்பளிக்கும் விதமாக இந்திராகாந்தி அம்மையாரும் தனது தலைமையில் ஐ.நா. செல்லும் குழுவில் தமிழகப் பிரதிநிதி ஒருவரை இடம்பெறச் செய்தார்.

ஐ.நா. மன்றத்துக்கு செல்லும் இந்திய தூதுக்குழுவில் இடம் பெற்ற முதல் எதிர்க்கட்சி (இந்திய அளவில்) அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான். இதை இடம் பெறச் செய்த பெருமை எம்.ஜி.ஆர் அவர்களைச் சாரும். இது தமிழகத்திற்கும் தமிழீழத்திற்கும் கிடைத்த வெற்றியாகும்.

**இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்** என்பது வள்ளுவர் வாக்கு. இதற்கேற்ப தனது வலதுகரமாய் விளங்கிய திரு பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களையே தமிழக அரசின் பிரதிநிதியாக, ஐந்துகோடி தமிழர்களின் சார்பாக ஐ.நா.மன்றத்திற்கு எம்.ஜி.ஆர் அவர்கள் அனுப்பி வைத்தார்.

எம்.ஜி.ஆர் அவர்கள் போலவே திரு.பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களும் அடிப்படையிலேயே தமிழர் நலனில் அளவற்ற அக்கறை உடையவர்.

அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பொறியியல் கல்வி மாணவராக இருந்தபோதே, தமிழர்களுக்கு எதிரான சிங்கள ஆட்சிமொழி சட்டத்தை எதிர்த்து போராட்டத்தில் குதித்தவர், திரு.பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள்.

www.padippakam.com



தமிழ்ப் பெண்களின் உடலில் சிங்கள இனவெறியர்கள் தாரை காய்ச்சி சிங்கள "சிறீ" எழுத்தை குத்திய செய்தி அறிந்து, தமிழ்நாட்டில் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய கண்டன ஊர்வலத்திலும், கருப்பு சின்னம் அணிந்து கலந்து கொண்டவர். இதை எல்லாம் அறிந்துதான் அறிஞர் அண்ணா அவர்கள் பண்ருட்டி இராமச்சந்திரனை அரசியலுக்கு தேர்ந்தெடுத்தார்.

அண்ணா அவர்களின் அன்பைப் பெற்ற திரு.பண்ருட்டி இராமச்சந்திரன், அண்ணாவின் வழியைப் பின்பற்றும் எம்.ஜி.ஆர் அவர்களின் அன்பையும் பெற்றிருந்தார் என்றால் அது ஆச்சரியம் அல்லவே!

ஐ.நா.மன்றம் தோன்றியதிலிருந்து இந்திய-இலங்கை உறவில் பிரச்சனை எழுப்பப்பட்டது இதுதான் முதல் முறை என்று ஐ.நா.மன்றத்தில் கலந்து கொண்டவர்கள் எல்லாம் தெரிவிக்கும் அளவுக்கு இந்த பிரச்சனையை சரியான முறையில் எம்.ஜி.ஆர் அவர்களின் தூதுவர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் எடுத்து வைத்தார். அவரது சொற்போர் உலகையே கண் திறக்க வைத்தது.

**ஐ.நா.மன்றத்தில் திரு.பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களின் செயல்பாடுகள் பற்றி அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போதைய சட்ட அமைச்சருமான திரு. ஆலடி அருணா அவர்கள் "ஐ.நா. மன்றத்தில் நாம்" என்ற தலைப்பில் 30-10-83 போர்வாள் இதழில் கட்டுரை எழுதியுள்ளார். அது வருமாறு;**

"இமயத்திற்கு இணையாய் - ஐ.நா. மன்றத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சனை பற்றிய புரட்சித்தலைவரின் அன்புத் தம்பி-புறம்பாடும்-போர்வீரன்-புகழ்மிகு அமைச்சர் மாண்புமிகு பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றிய உரை சரித்திரச் சம்பவம்-சங்க நாதமாகும்.

www.padippakam.com



"உலகின் கண்களில் மண்ணைத் தூவி உண்மைச் சம்பவங்களுக்கு திரையிடும் இலங்கை அரசிற்கு-அமைச்சர் இராமச்சந்திரனின் ஆணித்தரமான பேச்சு அபாயச் சங்காகும்!

"சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர் சாதுரியமாக எடுத்து வைத்த நியாயங்களுக்கும், தொடுத்திட்ட கேள்விக் கணைகளுக்கும், பதிலளிக்க இயலாமல் இலங்கைத் தூதுவர் ஐ.பி.போன்சேகா (I.B.Fonseha) பன்னிப் பன்னிப் (உண்மைக்கு புறம்பாக) பேசியிருப்பது பரிதாப்மாக இருந்தது.

"ஐ.நா மன்றத்தின் அரசியல் சிறப்புக் குழுவில் (Special Political Committee) இனிமேல் அகதிகள் இடம்பெயர்வதைத் தடுத்திட உலக நாடுகளின் ஒத்துழைப்பினைப் பெறுவது சம்பந்தமாக அக்டோபர் 21ஆம் தேதி விவாதம் நடைபெற்றது.

"நமது அமைச்சர், இலங்கைப் பிரச்சனையை எழுப்பினார்.

"செயவர்த்தனாவின் இனவெறிப் படுகொலை இலட்சக் கணக்கான தமிழர்களை இலங்கையில் அனாதைகளாக்கி அகதிகள் முகாமில் அல்லல்பட வைத்தது, ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அலைகடல் தாண்டி அகதிகளாத் தமிழகத்திற்கு வந்த வண்ணம் இருக்கிறார்கள்.

"1983 சூலைத் திங்களில் இலங்கை அரசு தமிழினத்திற்கு எதிராக இராணுவத்தினை ஏவி நடத்திய பயங்கரப் படுகொலைகளின் காரணமாகவும் சிறுபான்மையினராக வாழும் தமிழ் மக்கள் உடமை இழந்து, உயிர் இழந்து, சொல்லொணா துயரத்திற்குப் பலியானதைப் பற்றி பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள், செயவர்த்தனா அரசின் இனவெறியையும் இரத்த வெறியையும் அம்பலப்படுத்தினார்.

"திரு.பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் நடுநிலையாக நின்று ஆதாரத்தோடு விளக்கிப் பேசியதைக் கேட்டு

www.padippakam.com



உலகநாடுகளின் தலைவர்கள் ஆச்சரியப்பட்டனர் - அதிர்ச்சியுற்றனர்.

"இலங்கையில் தமிழர்களுக்கு இந்தளவுக்கு கொடுமைகள் இழைக்கப்பட்டிருக்கின்றனவா என்று அவையில் உள்ளவர்களின் இதயம் கேட்பதை அவர்களின் விழிகள் வெளிப்படுத்தின.

"பூர்விகத்தமிழர்கள், மலையகத்தமிழர்கள் இலங்கையில் வாழ்வதை நினைவுபடுத்தி, அவர்களில் இலட்சக் கணக்கானவர்கள் இன்னும் குடியுரிமை இன்றி, நாடற்றவர்களாக நாதியற்றவர்களாக இருந்திடும் இழிநிலையை எடுத்துக் கூறி, இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலையின் காரணமாக ஆயிரக்கணக்கானவர்கள் அகதிகளாய்-அனாதைகளாய்-ஆதரவு அற்றவர்களாய் தமிழகம் திரும்பியிருப்பதையும் குறிப்பிட்டார் நம் அமைச்சர் திரு. பண்ருட்டியார்.

"செயவர்த்தனாவின் கொடுங்கோன்மைக்கு - கொலைவெறி, காட்டுத் தர்பாருக்குப் பலியாகி, உயிர்வதைப்படும் தமிழ் சமுதாயத்தின் வருங்காலம், பாதுகாப்புக்கு வழிகண்டிட, அமைச்சர் ஆலோசனை கூறினார் அடியிற்கண்டவாறு,

"It is our sincere hope that in the spirit of democracy that has characterised the policy of Sirlanka, a viable political solution will soon be found assuring safety and legitimate rights to the Tamils as full and equal citizens so that the people of Srilanka can live together in peace and harmony

"மக்களாட்சி நெறியினைக் கொள்கையாக ஏற்றுள்ள இலங்கையில், தமிழர்களின் பாதுகாப்புக்கும் சட்டபூர்வமான உரிமைகளுக்கும் உறுதி அளிக்கப்பட்டு, மற்ற குடிமக்களுக்குச் சமமாக, முழுமையாக குடியுரிமை வழங்குவதன் மூலம் இலங்கை மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு, அமைதியாக, ஆனந்தமாக

www.padippakam.com



வாழ்ந்திட விரைவில் சுமுகமான தீர்வுகாண, இலங்கை அரசு முன்வரும் என்று நம்புகிறேன்.

"நமது அமைச்சரின் இந்த அரிய கருத்தைக் கேட்டதுமே இலங்கைத் தூதுவருக்கு கோபம் வந்து, மனிதாபிமானமற்ற தன்மையில் பேசினார்.

"பொறுப்பற்றுப் பேசுகிறார் இலங்கைத் தூதுவர் என்று பொறுமையாக இருந்து விடவில்லை நமது அமைச்சர். அரசியலில் "அமைதி" அங்கீகாரத்தின் அடையாளமாக விமர்சிக்கப்பட்டு விடும் என்பதை புரட்சித்தலைவரின் தூதுவர் நன்கு அறிவார். எனவே இலங்கைத் தூதுவரின் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளுக்கு ஆணித்தரமாகப் பதிலளித்தார்:

"....அண்ணாவின் கொள்கைகளுக்காக தங்களை அர்ப்பணித்துப் புரட்சித் தலைவரின் விழுமிய தலைமையில் பணிபுரியும் தம்பிகள் கிடைக்கிற வாய்ப்பு எதுவானாலும், அதனைத் தமிழுக்காக, தமிழினத்திற்காகப் பயன்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களது ஐ.நா. மன்றப் பேச்சு, அழியாத சான்றாகும்."

சிங்களப் பேரினவாத அரசின் கொடுமைகளையும், தமிழீழ மக்களின் நியாயமான கோரிக்கைகளையும் உலக நாடுகள் அறிந்து கொள்ளுமாறு செய்யக் காரணமாக இருந்தவர் எம்.ஜி.ஆர் அவர்கள். இது தமிழர் வரலாற்றில் பொறிக்கப்பட்டுவிட்ட சாதனையாகும்.

இந்திராகாந்தி அம்மையாரும், எம்.ஜி.ஆர் அவர்களும் இலங்கை அதிபர் செயவர்த்தனாவை எப்படியும் மடக்கிப்பிடித்து தண்டிக்கப் பெரும் முயற்சியினை மேற்கொண்டார்கள். தமிழீழப் பிரச்சனையில் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் எடுத்து வைத்த வாதங்கள் இந்திராகாந்தியையும், எம்.ஜி.ஆர் அவர்களையும் பெரிதும் கவர்ந்தது.

www.padippakam.com





ஐ.நா. மன்றத்தில் திரு.பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் ஈழத்தமிழர்களின் உரிமைப் பிரச்சனையை எழுப்புகிறார்.

www.padippakam.com



**திரு. பண்ருட்டி இராமச்சந்திரனின் ஐக்கிய நாடுகள் சபைப் பேச்சு தமிழீழப் பிரச்சனையை உலகப் பிரச்சனையாக்கியது.**

மனித உரிமை, சனநாயகம் என்ற கருத்தாக்கங்களைக் கையாண்ட இராமச்சந்திரன் அவர்கள், இலங்கை அரசை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தினார்.

தமது பேச்சில் இலங்கையிலுள்ள மலையகத் தமிழர்களுக்கு இலங்கை அரசு செய்த கொடுமைகளை கூறும்போது, நபீபியாவில், தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையர்கள் அந்த நாடுகளின் கருப்பின மக்கள் மீது செய்யும் கொடுமைகளோடு ஒப்பிட்டுப் பேசி, ஐக்கிய நாட்டு உறுப்பு நாடுகளின் அனுதாபத்தை ஈழத்தமிழர்பால் ஈத்தார். மேலும் அணிசேரா நாடுகளின் தீர்மானங்களையும் சுட்டிக்காட்டித் தமது பேச்சுக்கு வலிமையூட்டினார்.

இந்தியாவில் அசாமில் "நெல்லி" என்ற பகுதியில் சிறுபான்மை இசுலாமிய மக்கள் படுகொலைக்கு ஆளானதை இலங்கைத் தூதர் சுட்டிக் காட்டி, இதைப் போன்ற உள்நாட்டுப் பிரச்சனைகளில் இலங்கை தலையிடுகிறதா என்று கேட்டு, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா தலையிடுவதைக் கண்டித்தார்.

பண்ருட்டி இராமச்சந்திரன் அதற்குப் பதிலளிக்கையில், இந்தியாவில் ஏற்படும் பிரச்சினைகளால், இந்தியாவில் உள்ள மக்கள் அண்டை நாடுகளுக்கு அகதிகளாகச் சென்றதுண்டா என்றும், இலங்கையில் நடப்பது இனப்படுகொலை என்பதால் அங்குள்ள தமிழர்கள் இந்தியாவுக்கு, இலட்சக் கணக்கில் அகதிகளாக வருவதையும், இலங்கைத் தமிழர் பிரச்சினை இந்தியாவுக்கும் வழிந்தோடி வருகிறது என்றும் சுட்டிக் காட்டியபோது, இலங்கைத் தூதர் எதுவும் பேசமுடியாமல் திகைத்து விட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



ஈழத்தமிழ் அகதிகளின் அவலங்களை விவரித்தும் இந்திய அரசுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளையும் அனாவசிய செலவுகளின் தாக்கங்களையும் விவரித்தும் ஐக்கிய நாடுகளின் அனுதாபத்தைக் கோரினார்.

திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் ஐ.நா. மன்றத்தில் ஆற்றிய உரை பிரஞ்சு, ரசியன், சீனம், அராபியம், ஸ்பானிஷ் ஆகியவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டது.

ஐ.நாவிற்கான இலங்கை பிரதிநிதியும் இலங்கையின் மிக மூத்த அறிஞர் என்று கருதப்படுபவருமான திரு. பொன்சேகா அவர்கள், பண்ருட்டியாரின் ஐ.நா. மன்ற விவாதத்தைக் கேட்டு வியர்த்து விறுவிறுத்துப் போனது அவர் நியாத்திற்கு மாறாக செயல்பட்டதைத் வெளிப்படுத்தியது.

பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களும், வெளியுறவு செயலர் திரு.ஜி. பார்த்தசாரதி, திரு. அலெக்சாண்டர், திரு.பண்ருட்டி இராமச்சந்திரன் ஆகியோரும், ஐ.நாவிற்கு வந்திருந்த ஒவ்வொரு நாட்டு பிரதமர்கள், சனாதிபதிகள் அனைவரையும் சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்சனைகள் குறித்து விரிவாக விளக்கினார்கள்.

திருமதி இந்திராகாந்தி அவர்கள், ஐந்து நாட்கள் இருந்து, தமிழர் பிரச்சனையை கூறியதல்லாமல், அமெரிக்காவில் உள்ள தமிழர்களையும் சந்தித்துப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கி அவர்களின் கருத்தையும் கேட்டறிந்தார்கள். அந்தளவுக்கு ஈழத்தமிழர் நலனில் அக்கறை கொண்டிருந்தார் இந்திராகாந்தி அம்மையார்.

ஒழுங்குமுறைப்படியும், உயர்ந்த பண்பை வெளிப்படுத்தும் விதமாகவும் செயல்படக் கூடிய எம்.ஜி.ஆர் அவர்கள். பண்ருட்டி இராமச்சந்திரன் ஐ.நா. செல்லும்போது, தஞ்சாவூர் தட்டுகள், பட்டு

www.padippakam.com



சால்வைகள், பட்டு புடவைகள் என்று விலை உயர்ந்த நினைவு பரிசுகள் 1000 கொடுத்து அனுப்பினார். இவற்றை ஐ.நாவிற்கு வரும் ஒவ்வொரு நாட்டு பிரதமர்கள், சனாதிபதிகளையும், ஐ.நா. பிரதிநிதிகளையும் சந்திக்கும் போது, தமிழக அரசு சார்பாக கொடுக்கச் சொன்னார்.

ஈழப்பிரச்சனையை என்றென்றும் நினைவுபடுத்தும் அழியாத சாட்சியங்களாக அந்த நினைவுப் பரிசுகள் அமையும் என்று கருதினார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் 88 நாட்கள் நடந்த ஐக்கிய நாடுகள் அவைக் கூட்டத்தில் 70 நாட்கள் கலந்து கொண்டு, ஈழத்தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமைகளை ஒவ்வொரு நாட்டு அரசுத் தலைவர்களிடமும் விளக்கி கூறினார்.

25-11-83ல் ஐக்கிய நாடுகள் அவையின் அப்போதைய பொதுச் செயலாளர் திரு. பெரஜ் டி-க்யூலர் அவர்களை சந்தித்த திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள், 35 ஆண்டுகாலமாக எப்படி இலங்கைத் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள், படிப்படியாக அங்குள்ள ஈழத்தமிழர்களின் உரிமைகள் எப்படியெல்லாம் பறிக்கப்பட்டு வருகின்றது என்று ஆதாரபூர்வமாக எடுத்துரைத்தார்.

திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் கூறியவற்றை அனுதாபத்தோடு கேட்டறிந்த ஐ.நாவின் செயலர், ஈழத்தமிழர் பிரச்சனை என்பது மனித உரிமைகள் மீறலாக இருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டார். பிரச்சனையை அனுதாபத்தோடு பரிசீலிப்பதற்கு உறுதியளித்தார்.

ஐ.நா. செயலர் அவர்கள் பின்னர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தில் "நீங்கள் என்னைச் சந்தித்து உரையாடியது

www.padippakam.com



என்றும் என் நினைவில் இருக்கும் அந்த நினைவின் சின்னமாக அன்புடன் தாங்கள் அளித்த தஞ்சாவூர் தட்டை வைத்து நான் பாதுகாப்பேன்" என்று குறிப்பிட்டிருந்தார்.

பிரச்சனை ஐ.நாவின் செயலரை எந்தளவுக்கு பாதித்தது என்பதை உணர்த்துவதாக அமைந்தது இந்த கடிதம்.

அமெரிக்காவின் மாசசூட்ஸ் (Massachutes) மாநில ஆளுநர் திரு. மைக்கேல்டு காகிஸ், திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களுக்கு **"மனித உரிமைக்காக வாதாடியவர்"** என்னும் விருது வழங்கி இருக்கிறார். இது எம்.ஜி.ஆர் அவர்களின் தூதராகச் சென்ற திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் ஈழப் பிரச்சனையை கையாண்ட முறை எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதை உணர்த்துகிறது.

இலங்கை பிரச்சனை பற்றி இந்திய பிரதிநிதிகளுடன் விவாதிப்பதை தவிர்த்தும் காலம் தாழ்த்தியும் வந்த செயவர்த்தனா, திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் ஐ.நா. மன்றத்தில் ஈழப்பிரச்சனையை எடுத்துரைத்த பின்னர்தான் இந்திய வெளியுறவுச் செயலரான திரு.ஜி.பார்த்தசாரதியுடன் பேச்சு வார்த்தைக்கு உடன்பட்டார். அதோடு இந்திய பிரதமர் இந்திராகாந்தி அம்மையாருடனும் தொடர்பு கொண்டார்.

இப்படியெல்லாம் இறுகிய தன் நிலையில் இருந்து செயவர்த்தனா இறங்கி வந்தார் என்று சொன்னால் அந்த நிலை உருவாக காரணமாக இருந்தவரே மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள்தான்.

திரு.பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் ஐ.நாவில் ஆற்றிய அரிய பணிகளை இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் பாராட்டினார்கள். இதற்கு பதிலளித்த இராமச்சந்திரன் அவர்கள், தங்களுடைய பாராட்டு தமிழ்நாட்டுக்கும், தமிழக முதல்வர்

www.padippakam.com



டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுக்குமே உரியது என்று பணிவன்போடு கூறினார்.

இதுவரை உலக நாடுகளின் கவனத்திற்கு வராமல் இருந்த மனித உரிமை மீறலை தனது அரசியல் சாதுரியத்தால் உலகறியச் செய்தவர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள். இது தமிழீழ மக்களின் ஒருமித்த குரலாக ஓங்கி ஒலித்தது.

எம்.ஜி.ஆர் அவர்கள் இட்ட பணியை நிறைவேற்றுமுகமாக மூன்று மாதம் அமெரிக்காவில் இருந்து, தமிழீழ பிரச்சனையை ஐக்கிய நாடு மன்ற உறுப்பு நாடுகளின் தலைவர்களிடமும் மற்றும் அமெரிக்க தலைவர்களிடமும் எடுத்துரைத்தார் திரு.பண்ருட்டி ராமசந்திரன். இது குறித்த செய்திகள் யாவும் பி.டி.ஐ செய்தி நிறுவனத்தின் வாயிலாக உலக சமுதாயம் அறியுமாறு செய்தார்.

நியூயார்க் நகரில் இந்தியத் தூதரக அதிகாரி திரு.என்.கிருஷ்னன் அவர்களை சந்தித்து உரையாற்றினார். ஈழத்தமிழர் சங்க வரவேற்பிலும் நியூயார்க் நகர தமிழ்ச் சங்கத்திலும் கலந்து கொண்டு ஈழப்பிரச்சனையை பகிர்ந்து கொண்டார்.

3-11-83 அன்று வாசிங்டன் நகர தமிழ்சங்கத்தின் கூட்டத்தில் உரை ஆற்றும்போது "இலங்கைத் தீவு என்னும்போது அது தமிழர்களுக்கே உரியது. இக்கருத்தை நமது தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்" என்பதைக் கூறி, ஈழவரலாற்றையும் எடுத்துக் கூறியதோடு புரட்சித் தலைவர் அவர்கள் ஈழத்தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க போராட தயாராக உள்ளார்; அந்த அரிய பணிக்கு அமெரிக்காவிலுள்ள தமிழர்களும் ஒத்துழைப்பு தரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

www.padippakam.com



9-12-83 அன்று லாஸ் ஏஞ்சல்சு நகரில் வாழும் தமிழர்கள் ஒன்று திரண்டு பண்ருட்டியார் அவர்களுக்கு வரவேற்பு கூட்டம் நடத்தினார்கள். இந்த கூட்டத்திற்கு மருத்துவர் திரு. சண்முகசுந்தரம் தலைமை தாங்கினார்.

இந்த கூட்டத்தில் பண்ருட்டியார், "பயங்கரவாதிகள் சிங்களவரே. விடுதலைப்புலிகள் தோன்றியது சூழ்நிலையால்தான், சூழ்ச்சியால் அல்ல. விடுதலைப் புலிகள் மனித நேயத்திற்காகவும் மனித உரிமைகளுக்காகவுமே போராடுகிறார்கள். இந்த நல்ல உணர்வுகளுக்கு புரட்சித் தலைவர் துணை நிற்பார். இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு ஒரு நல்ல முடிவு ஏற்படும் வரையில் தமிழக அரசு தொடர்ந்து குரல் கொடுக்கும்" என்று கூறி அமெரிக்காவில் இருந்து தாயகம் திரும்பினார்.

தாயகம் திரும்பிய பண்ருட்டியாரை மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நேரில் விமான நிலையம் சென்று கட்டித்தழுவி வரவேற்றார். கட்சியினரை தமிழகம் முழுவதிலுமிருந்து வரவழைத்து பண்ருட்டியாருக்கு பாராட்டுக் கூட்டம் நடத்தினார்.

அரசு மரபுப்படி குடியரசுத் தலைவர் அல்லது பிரதமர் போன்றவர்கள் வந்தால்தான் விமான நிலையம் சென்று முதலமைச்சர் வரவேற்பது நடைமுறையாக இருந்து வருகிறது.

ஆனால் எம்.ஜி.ஆர் அவர்கள் ஈழத்தமிழர் விடுதலை பெறுவதற்காக உண்மையிலேயே அக்கறை கொண்டிருந்ததால் சனாதிபதி, பிரதமர் ஆகியோர் வருகையின்போது கடைபிடிக்கும் மரபை ஈழத்தமிழர்களுக்காக உரிமைக் குரல் கொடுத்த திரு.பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களின் வருகையின் போது கடைப்பிடித்தார்கள்.

***ஈழத்தமிழர் பிரச்சனை உலகளவில் அனைவரின் நெஞ்சை தொட்டது. இது தமிழீழத்தின் குரலாக இருந்தது.***

www.padippakam.com






தமிழீழ மக்களின் உரிமைப் பிரச்சனையை ஐ.நா வில் பேசிவிட்டு திரும்பும் திரு.பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களை மக்கள் திலகம் அவர்கள் விமான நிலையத்திலிருந்து அழைத்து வருகிறார். அருகில் பண்ருட்டியாரின் துணைவியார். மற்றும் தற்போதைய அ.தி.மு..கழகத்தின் பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா அவர்கள், அப்போதைய அமைச்சர்கள்.

www.padippakam.com



# உலகத் தமிழினக் காவலர்

இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று தமிழகத்தில் ஒரு சில கட்சிகள் வற்புறுத்தின. இதைப்பற்றி 27-10-83 அன்று சட்டசபையில் எம்.ஜி.ஆர் அவர்கள் தனது கருத்தை வெளியிட்டார். அது வருமாறு:-

"விடுதலைப் புலிகள் கூட இந்திய இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று கேட்கவில்லை. மாறாக, எங்களுக்கு உதவி செய்யுங்கள்; முடிந்தால் ஆயுதம் கொடுங்கள் என்றுதான் கேட்டு வருகிறார்கள். தாங்களே அந்த இயக்கத்தை நடத்ததான் அவர்கள் விரும்புகிறார்கள் என்பதைப் புரிந்துக் கொள்ளவேண்டும்.

"தனி ஈழம் வேண்டும் என்று முடிவு செய்வதோ கேட்பதோ அங்கு வாழும் தமிழ மக்களே தவிர நாம் அதை முடிவு செய்துவிட முடியாது. ஈழத்தமிழர்களோ விடுதலைப் புலிகளோ மற்ற இலங்கைத் தமிழர் தலைவர்களோ படை அனுப்புங்கல் என்று கேட்கவில்லை. இந்த உண்மையை மறைத்துப் பேசுகின்றார்கள். இது பல சிக்கலை உருவாக்கும்".

**(28-10-83 தினமணி)**

ஈழத்தமிழர்களுடைய உரிமைக்கு குறுக்கே நிற்காமல், தமிழக அரசு தன் சக்திக்குட்பட்டு செயல்படும் என்பதோடு, அவர்களுக்கு முழு பாதுகாப்பு அளிப்பேன் என்று எம்.ஜி.ஆர் அவர்கள் உறுதிமொழியளித்தார்.

தமிழினத்திற்காக உயிர் கொடுக்கவும் தயார் என்று சட்டமன்றத்திலேயே மக்கள் திலகம் தனது எண்ணத்தை வெளிப்படுத்தினார்.

9-4-84 அன்று காலை 10 மணிக்கு சட்டமன்ற நிகழ்ச்சி

www.padippakam.com



தொடங்கியதும் அவைத் தலைவர் திரு. இராசாராம் அவர்கள் திருக்குறள் படித்தார்:

**"சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்**
**ஊக்கம் அழிந்து விடும்"**

இதன் பொருள், சிறிய படை உடையவன் தனக்குத் தகுந்ததாக உள்ள இடத்தில் பொருந்தி நின்றால், பெரிய படை உடையவன் தன் ஊக்கம் அழிந்து போவான்.

எம்.ஜி.ஆர் அவர்கள் தனக்கே உரித்தான போர்க் குணத்தை சட்டமன்றத்தில் வெளிப்படுத்தும் போது;

...."இன்றைய தினம் நான் சொல்கிறேன் இலங்கை அரசு இனியும் வன்முறையில் ஈடுபடுமானால் இந்த தமிழக அரசு தன் சக்திக்கு உட்பட்ட அனைத்தையும் நிச்சயமாகச் செலவிட்டு, எப்படி முறியடிக்க முடியுமோ அப்படி முறியடிப்பதற்கு ஆவன செய்ய களத்தில் இறங்கும். ...மீண்டும் பழைய சம்பவம் நடக்கும் என்றால், இந்த தமிழகம் தனித்து நின்று ஏதாவது செய்ய வேண்டும் என்றால் அதை செய்ய முன் வருவேன் என்பதை ஒரு முடிவாக எடுக்க கடமைப்பட்டிருக்கின்றேன்."

(Vol.LXIV மார்ச்சு ஏப்ரல் 1984)

**தமிழினத்தின் பாதுகாப்பு அரணாகவே திகழ்ந்தார் மக்கள் திலகம் அவர்கள்.**

தமிழீழ அகதிகளுக்கு அனைத்து வகையிலும் ஆதரவாக இருந்தார். வேலைவாய்ப்புக்கு வழிசெய்து கொடுத்தார். தொழில் புரிவதற்கு பணஉதவி செய்தார். சான்றிதழ்கள் இல்லாமல் வந்த மாணவ மாணவிகளுக்கும் கூட கல்வி கற்க ஆவன செய்தார்.

சிங்கள சிறையில் படுகொலை செய்யப்பட்ட ஈழத்தமிழ் போராளிகள் திரு.தங்கத்துரை அவர்களின் குடும்பத்தை பாதுகாக்கும் வண்ணம் அவரது துணைவியார் திருமதி நவமணி

www.padippakam.com



அவர்களுக்கு எம்.ஜி.ஆர் அவர்கள் 2.1.84ல் வீடு வழங்கினார். இதுபோல் திரு குட்டிமணியின் துணைவியார் மற்றும் சகோதரிக்கும் வீடுகள் வழங்கினார். அதோடு மாதாமாதம் நிதி உதவிக்கும் ஏற்பாடு செய்தார். எம்.ஜி.ஆர் அவர்கள் ஈழத்தமிழர்களுக்கு புரிந்த உதவிகள் குறித்து திரு.தங்கத்துரையின் துணைவியார் திருமதி நவமணி குறிப்பிட்டதாவது:

"தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். இங்குள்ள தமிழர்களுக்கு மட்டுமல்ல உலகத்தில் உள்ள எல்லா தமிழர் நலனுக்காகவும் பாடுபட்டு வருகிறார்; எனவே **உலகத்தில் உள்ள எல்லா தமிழர்களுக்கும் அவர்தான் தலைவர்"**.

14-4-84ல் திருச்சியில் எம்.ஜி.ஆர் அவர்கள் நிருபர்களிடம் பேசுகையில், "ஈழத் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு எதுவும் இல்லாத நிலையில் கிளர்ச்சி நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்றார்". மேலும் சிக்கலிலிருந்து விடுபடுவதற்கு வழியே இல்லை என்றால் மெல்ல மெல்லச் சாவதைவிட நிச்சியமான சாவே மேலானதாகும்." என்றார்.

**"தமிழ்நாட்டில் யார் ஆட்சி செய்தாலும் தமிழக மக்களின் இனத்தைச் சேர்ந்தவர்கள் நலன்களைக் காக்கும் பொறுப்பு அவர்களுக்கு உண்டு" என்றார்.**

**(15-4-84 தினமணி)**

16, 17-4-84 ஆகிய நாள்களில் ஈழத்தமிழர் பாதுகாப்பு குறித்து அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டினார்.

19-4-84 அன்று இந்திய பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களை சந்தித்து ஒரு மணி நேரம் ஈழத்தமிழர் நலன் குறித்து தனது கருத்துகளை எடுத்துக் கூறினார்.

ஈழத்தமிழர்களுக்கு உதவ எம்.ஜி.ஆர் அவர்கள், அரசின்

www.padippakam.com



அனைத்து துறைகளைச் சார்ந்த ஊழியர்களிடமும் ஈழத்தமிழர்களின் நலனுக்காக நிதி திரட்டினார்.

சென்னை மாநகராட்சி ஊழியர்கள் சார்பில் ரூபாய் இரண்டு இலட்சம் திரண்டது. அதற்கான காசோலையை 7.10.85 அன்று அப்போதைய மாநகராட்சி ஆணையர் செல்வி சாந்தாசீலா அவர்கள் எம்.ஜி.ஆர் அவர்களிடம் வழங்கினார்.

காவல்துறை சார்பாக ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தெட்டு ஆயிரத்திற்கான காசோலையை எம்.ஜி.ஆர். அவர்களிடம் காவல்துறை தலைமை இயக்குநர் திரு வி.ஆர்.இலட்சுமி நாராயணன் 17.10.85 அன்று கொடுத்தார்.

இப்படியாக குவிந்த கோடிக்கணக்கான நிதியை ஈழத்தமிழர்களின் நல்வாழ்வுக்காக எம்.ஜி.ஆர் அவர்கள் பயன்படுத்தினார்.

ஈழப்பிரச்சினைக்காக திம்புவில் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருந்தபோது, தமிழ் பகுதிகளில் இலங்கை அரசு தாக்குதலில் ஈடுபட்டிருந்தது. இதைக் கண்டித்து எம்.ஜி.ஆர் அவர்கள் உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருந்த நிலையிலும் 24-9-85ல் உண்ணாநோன்பிருந்து தனது எதிர்ப்பை தெரிவித்தார்.



இலங்கை அரசை கண்டித்து தனது உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தபோதும் 24.9.85இல் 12 மணிநேரம் உண்ணாநோன்பு இருக்கிறார் மக்கள் திலகம் மற்றும் இசைக் குழுவினர் ஈழத்தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களை விளக்கி பாடுகிறார்கள்.

www.padippakam.com



தனது உடல்நிலையை பொருட்படுத்தாமல் 1985 ஆம் ஆண்டு மட்டும் ஆறுமுறை அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டினார்.

**ஈழத்தமிழர்களுக்கும் அவர்கள் போராட்டத்திற்கும் எல்லாவகையிலும் உறுதுணையாக இருந்த எம்.ஜி.ஆர் அவர்கள் போராட்ட வீரர்கள் மீது உயர்ந்த மதிப்பை வைத்திருந்தார்.**

அதற்கு அடையாளமாக அமைந்ததுதான் புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர் கிட்டு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி. போரில் கால் ஒன்றை இழந்துவிட்ட கிட்டு அவர்களுக்கு செயற்கை கால் பொருத்துவதற்காக சென்னை கோட்டைக்கு அழைக்கப் பெற்றிருந்தார். அப்போது அவர் ஊன்றுகோலோடு வந்ததைப் பார்த்த எம்.ஜி.ஆர் அவர்கள் கண்கலங்கியதை அரசவைக்கவிஞர் திரு.புலமைப்பித்தன் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்தமிழர் போராட்டம் குறித்த எம்.ஜி.ஆர் அவர்களின் செயல்பாடுகளுக்கு ஒட்டுமொத்த தமிழகமும் ஆதரவு அளித்த அதேநேரம் ஆங்காங்கே ஒருசில எதிர்ப்பு குரல்களும் எழாமல் இல்லை. ஆனால் எம்.ஜி.ஆர் அவர்களோ, "மக்கள் ஆட்சிக் கோட்பாட்டையும், உழைக்கும் வர்க்கத்தையும் கைவிடாது காப்பாற்ற நினைக்கும் மார்க்சிஸ்டுகள் தேசீய இனங்கள் தங்களுடைய பிற்காலத்தைத் தாங்களே முடிவு செய்வதைக் கடமை உணர்ச்சியுடன் ஆதரிக்கவேண்டும்" என்ற லெனின் அவர்களின் கொள்கையோடு உடன்பட்டு நின்றார்.

ருசியப் புரட்சித்தலைவரின் பாதையை தமிழின புரட்சித்தலைவரும் பின்பற்றியதின் மூலம் பொதுவுடைமை வாதிகள் மத்தியிலும் உயர்ந்து நினறார்.

தமிழ் ஈழத்தில் சிங்கள அரசு நடத்தும் இனப்படுகொலைக்கு கண்டனம் தெரிவித்து உலக நாடுகளின் சார்பில் மனித

www.padippakam.com



உரிமைகள் மாநாடு நடத்துவதற்கு அரசுக்கு சொந்தமான அரங்கை எம்.ஜி.ஆர் அவர்கள் ஏற்பாடு செய்து கொடுத்தார்.

23-4-84 தொடங்கிய இந்த இரண்டுநாள் மாநாட்டில் ஆசுதிரேலியா நாடாளுமன்ற உறுப்பினர் ஹலிஸ், கனடா நாட்டைச் சேர்ந்த திருமதி. ஜெம். ஜி. எடிட், இங்கிலாந்து பத்திரிகையாளரும் நூலாசிரியருமான டேவின்செல்பார்ன், மற்றும் பல வெளிநாட்டு அறிஞர்களும் கலந்து கொண்டார்கள்.

மாநாட்டில் கலந்துகொண்ட எம்.ஜி.ஆர் அவர்கள், இலங்கை அரசின் இனவெறிப் படுகொலைகள் குறித்து விசாரணை நடத்துவதற்காக சர்வதேச சட்டத்துறை வல்லுனர்கள், நீதிபதிகள் கொண்ட குழுவை அமைக்க வேண்டும் என அறிஞர்கள் பேசியதை ஆமோதித்து, தனது ஆதரவை தெரிவித்தார்.



**சிங்கள அரசு நடத்தும் இனப்படுகொலைக்கு கண்டனம் தெரிவித்து உலக நாடுகளின் சார்பில் மனித உரிமை மாநாட்டில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள், திரு. ஜனார்த்தனம் மற்றும் உலகநாடுகளின் அறிஞர்கள்.**

www.padippakam.com



ஈழத்தமிழர்களுக்கு எதிராக சிங்கள அரசு யாழ்ப்பாணத்தில் பொருளாதார தடைவிதித்ததுடன், தமிழர்கள் உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் கிடைக்காமல் தாங்க முடியாத துன்பத்தை அனுபவித்தார்கள். இதை அறிந்து துடித்து போன மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள், இந்திய பிரதமரோடு தொடர்பு கொண்டு பொருளாதாரத் தடையை நீக்க எல்லாவிதமான முயற்சிகளும் எடுத்தார்.

விமானம் மூலம் உணவு, மருந்து முதலிய அத்தியாவசியப் பொருட்கள் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்கு கிடைக்கச் செய்தது எம்.ஜி.ஆர் முயற்சியால்தான் என்பதை அன்றைய தினம் 'பிளிட்ஸ்' என்னும் ஆங்கில வார ஏடு தெளிவாக குறிப்பிட்டிருந்தது.

**எம்.ஜி.ஆர் அவர்களை அப்போதைய சட்டமன்ற உறுப்பினர் திரு.பழ.நெடுமாறன் அவர்கள் நன்கு அறிவார்கள்.**

திரு.பழ.நெடுமாறன் அவர்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை வெளிப்படையாக ஆதரித்து, தடம்புரளாமல் இன்றுவரை தன் கொள்கையில் உறுதியாக இருப்பவர். ஈழப்பிரச்சனையில் எம்.ஜி.ஆர் அவர்களின் நிலைபற்றி நெடுமாறன் அவர்களிடம் கேட்டபோது, தனது தமிழ் தேசிய இயக்கப் பணிகளுக்கிடையிலும் அவர் தனது கருத்தை வெளிப்படுத்தினார். அது வறுமாறு:

"ஈழப்பிரச்சனை சம்பந்தமாக சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் கொடுத்தேன். இந்திய அரசு உடனடியாக இதில் தலையிடணும் என்று வரிசையாக பத்து அம்சங்கள் அடங்கிய தீர்மானங்கள் கொடுத்திருந்தேன்.

"அதுக்கு அப்புறம் அரசாங்கத்தில் இருந்தே ஒரு தீர்மானம்

www.padippakam.com



கொண்டு வந்திட்டாங்க, எந்த தீர்மானத்தை எடுத்துக்கறது என்று முதல் கமிட்டிக்கு விட்டாங்க.

“என் தீர்மானத்தை வலியுறுத்தல, டிஸ்போஸ் பண்ண் சொன்னேன். அரசாங்கமே தீர்மானம் கொண்டு வந்த பிறகு எல்லோருமே அதை ஏகமனதாக நிறைவேற்றலாம் என்று சொன்னேன். அப்ப எம்.ஜி.ஆர் சொன்னாரு “இல்ல, இல்ல. உங்க தீர்மானத்தை வலியுறுத்தியே பேசுங்க, நீங்க சொல்லியிருக் கிறபடி எல்லாம் அரசாங்க தரப்பு தீர்மானத்தில் நாங்க சொல்ல முடியாது. நீங்க வலியுறுத்திப் பேசுங்க, பின்னால நீங்க பேசின பிற்பாடு அந்த தீர்மானத்தை ஓட்டுக்கு விட வேண்டாம்” என்று சொனனார்.

“என் தீர்மானத்தில் இலங்கை மீது பொருளாதார நடவடிக்கை எடுக்கவும். இந்தியாவில் இருந்து எந்த பொருளும் இலங்கைக்கு அனுப்பக் கூடாது, அது மாதிரி எல்லாம் என் தீர்மானத்தில் இருந்தது.

“இதையெல்லாம் வலியுறுத்திப் பேசினேன். எனக்கு 20 நிமிசம்தான் ஒதுக்கி இருந்தாங்க. 20 நிமிசத்தில முடிக்க முடியல. சபாநாயகரும் மணி அடித்து ஞாபகப்படுத்தினார்.

“அதுக்குள்ள எம்.ஜி.ஆர், எஸ்.டி.எஸ். வழியாக எனக்கு குறிப்பு அனுப்பினார். ‘நீங்க எவ்வளவு நேரம் வேணுமானாலும் எடுத்துக் கொண்டு பேசுங்க’ என்றார். அதுக்கு மேல 25 நிமிசம் பேசினேன். மொத்தத்தில் 45 நிமிசம் பேசினேன்.

“ எல்லோரும் பேசியபிறகு, எம்.ஜி.ஆர் இதுக்கு பதிலளித்தார், அதுல என்ன சொன்னாருன்னா, ‘நெடுமாறன் தீர்மானங்கிறது, அவரது பேச்சும் அவரது தீர்மானமும் ஐந்து கோடி தமிழ் மக்களின் உணர்வை பிரதிபலிக்கிறது. இந்த உணர்வை மத்திய அரசாங்கம் புரிந்து கொள்ளணும். அவருடைய உணர்வுதான்

www.padippakam.com



இந்த அவையில் இருக்கிற எல்லோருடைய உணர்வும்' அப்படின்னு சுட்டிக்காட்டி பேசினார்.

"இனப்பிரச்சனை குறித்து அவ்வப்போது சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தும் நிறைவேற்றுவார். இது ஒருபுறம் இருக்க எம்.ஜி.ஆர் ஆரம்பகாலம் தொட்டே விடுதலைப் போராளிகளுக்கு ஆதரவாகவே இருந்தார்.

"1982ஆம் ஆண்டு சூன் மாதம் வாக்கில் பிரபாகரன் மற்றும் கைது செய்யப்பட்ட போராளிகளைத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனக் கேட்டு, சிங்களக் காவல்துறை அதிகாரிகள் பறந்து வந்திருக்கும் செய்தி கேட்டு மதுரையில் இருந்து சென்னைக்கு விரைந்து வந்தேன்.

"உடனடியாக அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டமொன்றைக் கூட்டினேன். 20 கட்சிகளின் தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அ.தி.மு.க.வின் சார்பில் ப.உ. சண்முகம் இக்கூட்டத்தில் கலந்துக் கொண்டார். முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர் அனுமதியோடுதான் கலந்துகொண்டார்.

"பிரபாகரன் உட்பட கைதான போராளிகளை எக்காரணம் கொண்டும் சிங்களக் காவல்துறையிடம் ஒப்படைக்கக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றினோம்.

"இதைக் காரணம் காட்டி எம்.ஜி.ஆர் இந்திய அரசுக்கு எழுதிய கடிதம், அன்று பிரபாகரன் உட்பட பலபோராளிகளைக் காப்பாற்றியது.

"இது தொடர்பாக எம்.ஜி.ஆர் அவர்களை நான் சந்தித்தபொழுது 'எக்காரணம் கொண்டும் போராளிகள் எவரையும் சிங்கள அரசிடம் ஒப்படைக்க, நான் சம்மதிக்க மாட்டேன்' என அவர் உறுதியாக கூறினார். அதன்படி இறுதிவரை நடந்தார்.

www.padippakam.com



"அன்று எம்.ஜி.ஆர் அவர்கள் உறுதியுடன் எடுத்த நடவடிக்கை பிரபாகரன் உயிரைக் காத்ததோடு மட்டுமல்லாமல், தமிழீழ விடுதலைப் போராட்டதிற்கு ஒரு தளநாயகனையும் கொடுத்தது என்பதுதான் உண்மை.

"பிரபாகரன் மீது வழக்கு இருக்கிறப்ப தப்பித்து போயிட்டார். அப்போது மதுரையில் எங்க வீட்டில்தான் இருந்தார். அங்க இருந்து தப்பித்து போனா நியாயப்படி என் மேல்தான் வழக்கு போடணும். என்ன பிடிச்சு கொண்டுபோய்தான் வைப்பாங்க, அவர் தப்பிச்சு போனதற்கு உடந்தையாக இருந்ததற்கு வழக்கு போட்டிருக்கணும்.

"அப்போது என்னை வந்து காவல்துறை அதிகாரி, ராஜசேகரன்நாயர் டிஜி.பி கிரைம் பொறுப்பில் இருந்தவர்தான் வந்து பேசினாரு. பிரபாகரன் இந்த மாதிரி செஞ்சது ரொம்ப தப்பு, அவர் உயிருக்கு ஆபத்து வந்துடும். அதனால் அவர் இருக்கிற இடத்தை சொல்லிருங்க என்றார்.

"நான் அவரிடம் உண்மையை சொன்னேன். அவர் யாழ்ப்பாணம் போய் சேர்ந்து எவ்வளவு நாளாகுது. இப்ப வந்து தேடுறீங்களேன்னு சொன்னத அவர் நம்பவில்லை. புதுச்சேரியில்தான் இருக்கிறாரு எங்களுக்கு தெரியும் என்றார் ராஜசேகரன்நாயர். போய் பிடிங்க என்று சொன்னேன். இல்ல, இல்லன்னாரு. அது எல்லாம் என்கிட்ட பேச பிடாது என்று நானும் கடுமையாக பேசிய பிறகு போய் விட்டார்.

"இரண்டு நாள் கழித்து எம்.ஜி.ஆர் சட்டசபை லாபியில் என்னை பார்த்தார். கூப்பிட்டார் போனேன். அப்படியே தோள்ள கையைப் போட்டு ரூமுக்கு கூட்டிக் கொண்டு போனார். பி.ஏ.க்களை எல்லாம் வெளியே போக சொல்லியிட்டாரு. உட்கார வைத்து விட்டு 'என்ன, உங்க நண்பரை பத்திரமாக

www.padippakam.com



அனுப்பிச்சிட்டிங்க போல இருக்கு' ஆமா பத்திரமாக போயிட்டாரு என்றேன். 'உண்மையாகவே பத்திரமாக போய் சேர்ந்திட்டாரா? என்று கேட்டாரு. உண்மையாகவே போய் சேர்ந்திட்டாரு, உங்க அதிகாரிகள்தான் நம்ப மாட்டேங்கிறாங்கன்னவுடன் 'அதிகாரிகள் கிட்ட எதுக்கு சொல்கிறீங்க இத நீங்க என்கிட்ட மட்டும் சொன்னா போதும். அவங்க கிட்ட சொல்ல வேண்டியது இல்ல' என்றார்.

"மீண்டும், பத்திரமாக இருக்காருல்ல.... என்று இரண்டு தடவை கேட்டாரு. நல்லா இருக்கிறாரு பத்திரமாக இருக்கிறாரு போய் சேர்ந்த செய்தியும் வந்து விட்டது என்றவுடன் ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது என்றார். அப்புறம் வேற விசயங்கள் எல்லாம் பேசிவிட்டு அனுப்பினார்.

"நியாயப்படி பிரபாகரன் தப்பித்து போனதற்கு உடந்தையாக இருந்ததற்கு வழக்கு போட்டுருக்கணும். அல்லது தொந்தரவு கொடுத்திருக்கணும். ஒண்ணுமே செய்யலயே அவர், அப்ப பிரபாகரன் பத்திரமாக தப்பித்துப் போகணும்கிறத விரும்பினாரு என்பதுதான் அர்த்தம்.

"ஆனா அவர் உள்ளுக்குள்ள அரசாங்க ரீதியாகவும் தன்னுடைய தனிப்பட்ட முறையிலும் ஈழப்பிரச்சனைக்கு ஆதரவாக என்ன என்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்திருக்கிறார்.

"விடுதலைப் புலிகளுக்கு வெளிப்படையாக அவர் கொடுத்த பணம் போக, பலமடங்கு அதிகமான தொகை அவர்களுக்கு ரகசியமாக கொடுத்து இருக்கிறார். அதுல ஒண்ணும் சந்தேகம் இல்லை.

"அந்த போராட்டம் வெற்றிபெறணுங்கிற ஒரு ஆதங்கம் இருந்த காரணத்தால்தான் அவர்களுக்கு உதவி செய்தார்.

www.padippakam.com



அதுலயும் தமிழ்நாட்டில் அவர் காலத்தில் அகதிகளாக வந்தவர்களுக்கு நிறைய உதவி செய்து இருக்கிறார். அன்றைக்கு எல்லாம் இந்த மாதிரி சிறப்பு முகாம்கள் எல்லாம் கிடையாது.

"தமிழீழத்தில் இருந்து சிகிச்சைக்காக கொண்டுவரப்பட்ட விடுதலைப் புலிகளானாலும் சரி, மக்களானாலும் சரி, அரசாங்க மருத்துவமனைகளில் சேர்த்து சிகிச்சையெல்லாம் கொடுக்கப்பட்டது. எல்லாவகையிலும் விடுதலைப் புலிகளுக்கு உறுதுணையாக இருந்தார்."

***எல்லா வகையிலும் எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழீழப் போராட்டத்திற்கும் ஈழத்தமிழர்களுக்கும் பக்கபலமாக இருந்து உலகத் தமிழினக் காவலராக செயல்பட்டார்.***

www.padippakam.com



# சூழ்ச்சி வலையை உடைத்தெறிந்தார்

1986ஆம் ஆண்டில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள் என்றுமே கண்டிராத அளவுக்கு சோதனைகளையும் சவால்களையும் எதிர்நோக்கினார். ஒருபுறம் இலங்கை அதிபர் ஜே.ஆர். செயவர்த்தனா எம்.ஜி.ஆர் அவர்களுக்கு எதிராக பத்திரிகைகளை பயன்படுத்த முயற்சித்தார். மறுபுறம் தமிழ்நாட்டு மக்களுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையே , மிகப்பெரிய பிளவை உருவாக்குவதன் மூலம் தமிழீழ பிரச்சனையில் எம்.ஜி.ஆர் அவர்களின் முயற்சிக்குப் பின்னடைவு ஏற்படுத்தும் வகையில் சூழ்ச்சிகள் நிறைந்து இருந்தன.

**'இந்து' பத்திரிகையின் அப்போதைய துணை ஆசிரியர் என்.இராம் அவர்கள் 17-1-86ல் கொழும்பில் செயவர்த்தனாவை பேட்டி எடுத்தார்.**

பேட்டி என்பதை விட அது ஒரு கலந்துரையாட்லாகவே இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

என். இராம் அவர்களின் கேள்விகள் அனைத்தும் நடுநிலையாகவும் நியாயமாகவும் அமைந்தன. ஆனால் செயவர்த்தனா உரிய விடையை சொல்லாமல், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் வே. பிரபாகரனைச் சந்திப்பதைக் குறிப்பிட்டு அதற்கு தனது எதிர்ப்பையும் வெறுப்பையும் கடுமையான முறையில் வெளிப்படுத்தினார். உடனே திரு. இராம் 'ஏன் உங்கள் தம்பி ஹெக்டர் செயவர்த்தனா கூட திம்புவில் பிரபாகரனைச் சந்தித்து பேசினாரே" என்று ஞாபகப்படுத்தினார். அதற்கு செயவர்த்தனா, "ஆமாம், அது வேறு ஒரு காரணத்துக்காக. ஆனால் நண்பனைப் போலச் சந்திக்கவில்லை. பிரச்சனைகளைத்

www.padippakam.com



தீர்க்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் அந்த சந்திப்பு நிகழ்ந்தது" என்றார்.

தனது தம்பி ஹெக்டர் செயவர்த்தனா பிரபாகரனை திம்புவில் சந்தித்ததை நட்பு அடிப்படையில் என்று ஒப்புக்காகக் கூட செயவர்த்தனாவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அப்படி இருக்கும் போது, பிரபாகரன் மீது நட்பும் சகோதர பாசமும் பாராட்டி தேவையான உதவிகளை செய்து வந்த எம்.ஜி.ஆர் அவர்களைக் கண்டு பயந்து செயவர்த்தனா மிரண்டு போனார் என்பதுதான் உண்மை.

மீண்டும் இராம் அவர்களிடம் செயவர்த்தனா கேட்கிறார்: "அது சரி, நீங்கள் ஏன் சந்திக்கிறீர்கள்? எதற்கு? நீங்கள் பயங்கரவாதத்திற்கு துணை போவதாகத்தான் நாங்கள் கருதுகின்றோம்." இதற்கு திரு.இராம் அவர்கள் "பிரபாகரன் ஒரு இயக்கத்தின் தலைவர். ஒரு இயக்கத்தை நடத்திச் செல்கிறார். அதனால்தான் நாங்கள் அவரைச் சந்திக்கிறோம்" என்று கூறியதுடன் நில்லாமல், "அதற்கு காரணம் உண்டு. அவர்களின் பல்லாண்டு கால 'மிதவாத' நடவடிக்கைகளால் ஏதும் பயன் கிட்டவில்லை. அதனால் அவர்கள் விரக்தியடைந்து விட்டார்கள். அவர்கள் ஆயுதமேந்திய போராளிகளாக (Militants) மாறியதற்கு சமூக, பொருளாதார, அரசியல் காரணங்கள் உண்டு. நாங்கள் அவர்களை 'பயங்கரவாதிகளாக' கருதவில்லை. போராளிகளாக கருதுகிறோம்" என்று உறுதிப்பட கூறினார்.

ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை பயங்கரவாதம் என்று சித்தரிப்பதன் மூலம் எம்.ஜி.ஆர்-பிரபாகரன் நட்புக்கு குந்தகம் ஏற்படுத்தி விடலாம் என்று முயன்று பார்த்தார் செயவர்த்தனா.

"இந்து" பத்திரிகை உலக அளவில் புகழ்பெற்றது. இதில்

www.padippakam.com



பிரபாகரனுக்கு எதிராகவும் பிரபாகரனை ஆதரிக்கும் எம்.ஜி.ஆரின் செயல்களை விமர்சித்தும் செய்திகள் வந்தால், பிரபாகரன் அவர்களுக்கு உதவிகள் செய்வதை எம்.ஜி.ஆர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார் என்ற எண்ணத்தாலேயே செயவர்த்தனா வரலாற்றை திரித்து, உண்மைக்கு மாறான செய்திகளை சொன்னார். "அதற்கு திரு. இராம் விடையளிக்கும்போது ஆயுதப் போராட்டத்திற்கு தள்ளப்பட்ட ஈழத்தமிழர்களின் பிரச்சனைகளுக்கு முதலில் தீர்வு கண்டால்தான் சுமூக நிலை ஏற்பட வழிகிடைக்கும்" என்று சரியான முறையில் பதிலளித்து பத்திரிகை நேர்மையை காப்பாற்றினார்.

**"இந்து" பத்திரிகை துணை ஆசிரியர் திரு.இராம் அவர்கள் மூலம் தனது எண்ணத்தை நிறைவேற்ற முடியாத செயவர்த்தனா அடுத்த கட்ட முயற்சிக்குத் தாவினார்.**

இந்திய பத்திரிகை உலகில் தனது எடுபிடியாக செயல்பட்ட குல்தீப் நாயார் உதவியோடு, தமிழகத்தில் உள்ள "துக்ளக்" ஆசிரியர் சோ.அவர்களைப் பிடித்தார். அவரை கொழும்பில் ஆடம்பர வசதிகள் கொண்ட ஐந்து நட்சத்திர விடுதியில் தங்க வைத்து, வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு வாகனத்தை அனுப்பி வரவழைத்து 28-1-86 அன்று சந்தித்து பேசினார் செயவர்த்தனா.

செயவர்த்தனாவின் விருப்பப்படி நடைபெற்ற இந்த சந்திப்பு முழுக்க முழுக்க செயவர்த்தனாவுக்கு ஆதரவாகவும் ஈழப் போராளிகளுக்கு எதிராகவும் அமைந்ததில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

முன்பே திட்டமிட்டு தாயாரிக்கப்பட்ட ஒருதலைப்பட்சமான சோவின் கேள்விகளுக்கு விபரீதமான விடைகளை செயவர்த்தனாவிடம் பெற்று, தமிழகம் திரும்பி தனது 'துக்ளக்'

www.padippakam.com



பத்திரிகையில் நீண்ட நெடும் செய்தியாக வெளியிட்டு தனது நாடகத்தை அரங்கேற்றினார் சோ.ராமசாமி.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள் ஈழத்தமிழரின் வாழ்வா, சாவா போராட்டத்தையும் அதை வழிநடத்திச் செல்கின்ற பிரபாகரன் அவர்களையும் ஆதரித்து, ஈழத்தமிழ் மக்களை பாதுகாக்கும் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருந்ததைப் பொறுக்காத சோ போன்றவர்கள் தங்கள் சுயநலத்திற்காக, ஈழத்தமிழர் பிரச்சனையைத் திசைதிருப்ப முயற்சித்தார்கள்.

எம்.ஜி.ஆர் அவர்களை தனது "துக்ளக்" பத்திரிகையில் கிண்டலும் கேலியும் செய்து வந்த சோ அவர்கள், எம்.ஜி.ஆர் அவர்களின் கண்டனத்திற்குள்ளான செயவர்த்தனாவிடம் தனது தமிழின விரோதப்போக்கைப் பயன்படுத்தி பல உதவிகளை பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டதாக செய்திகள் வெளியாகின.

சோ நிறுவியுள்ள பிளாஸ்டிக் தொழில்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதாக செயவர்த்தனா உறுதி அளித்துள்ளார் என்றும், செயவர்த்தனா சார்பாக "சோ" விற்கு விலை உயர்ந்த பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும், சென்னையில் உள்ள இலங்கை தூதரகம் மூலமாக சோவிற்கும், செயவர்த்தனாவின் எடுபிடிகளுக்கும் உல்லாசப் பயண ஏற்பாடுகள் செய்வதாகவும் செயவர்த்தனா கூறியிருக்கிறார் என்று 21.2.86 தராசு மற்றும் விடுதலை ஏடுகளில் செய்திகள் வெளியானதே இதற்குச் சான்று.

சோ, கொழும்பில் இருந்த போது ஈழப்பிரதிநிதிகள் அவரை சந்திக்க வந்தபோது அவர்களை சந்திக்க மறுத்துவிட்டார்.

www.padippakam.com



## திரைமறைவு வேலைகள்

இப்பொழுது இலங்கை அதிபர் சந்திரிகாவுக்கு ஆதரவாக இருக்கும் ஈ.பி.டி.பி. டக்ளசு தேவானந்தா, 1986 ஆம் ஆண்டு சென்னையில் இருந்தபோது ஈ.பி.ஆர்.எல்.எஃப் குழுவில் முக்கிய பொறுப்பு வகித்தார்.

இவர் 1-11-86 அன்று (தீபாவளி நாளன்று) சென்னை, சூளைமேடு பகுதியிலுள்ள திருவள்ளுவர்புரத்தில் (மேத்தா நகர் அருகில்) ஆட்டோ ஓட்டுனர் ஒருவருடன் தெருச் சண்டையில் இறங்கினார். மக்கள் கூட்டம் திரண்டு வந்து இருவரையும் சமாதானப்படுத்த முயன்றது. உடனே வெறிகொண்ட டக்ளசு தேவானந்தா, அருகில் தான் வாடகைக்கு குடியிருந்த வீட்டுக்கு சென்று, அங்கிருந்து 9 பேருடன் திரும்பி வந்து, சந்துக்குள் மறைந்து நின்றவாறு எந்திரத் துப்பாக்கியால் கூடியிருந்த மக்கள் மீது கண்மூடித்தனமாக சுட்டார். அதில் திருநாவுக்கரசு என்ற வாலிபர் (முதுநிலைபட்டதாரி) இறந்து போனார். பலர் படுகாயம் அடைந்தார்கள்.

இது எம்.ஜி.ஆர் அரசுக்கு எதிராக உருவாக்கப்பட்ட சதியாகும். உண்மையாக போராடுபவர்கள் என்றால், தஞ்சம் புகுந்த தமிழகத்தில் உள்ள மக்கள் மீது சுட்டிருக்க மாட்டார்கள். இச்சம்பவத்தைக் கண்ட சென்னை மக்கள் கொதித்து போனார்கள். எல்லா செய்தி ஏடுகளும் இச்செயலை கண்டித்து எழுதின. இப்படிப்பட்டவர்களை கட்டுப்படுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தன.

ஈழத்தில் இருந்து வந்திருந்த இளைஞர்கள் அனைவரையும் வேறுப்படுத்திப் பார்த்தறியாத தமிழக மக்கள், அவர்கள் அனைவரையும் விடுதலைப்புலிகள் என்ற பொதுப்பெயரிலேயே அழைத்தார்கள். இதை தமிழின விரோதிகள் சரியாகப்

படிப்பகம்

www.padippakam.com



பயன்படுத்திக் கொண்டார்கள்; குறிப்பாக, சில பத்திரிகைகள். அப்பத்திரிகைகள் உண்மை நிலை எதுவென்று தெரிந்தும், ஈழத் தமிழர்களுக்காக, உண்மையாகப் பாடுபடும் போராளிகள் யார் என்பதை அறிந்தும் அவற்றை எழுத மறுத்தன.

தமிழகத்தில் நடைபெற்ற குற்றச் செயல்கள் மற்றும் வன்முறை சம்பவங்களுக்கு தொடர்பு இல்லாதவர்களாய் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இருந்ததால்தான் இந்த இயக்கத்தின் செயல்பாடுகள் மீது நம்பிக்கை கொண்டார் எம்.ஜி.ஆர்.

இதை பொறுக்காதவர்கள்தான் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் மற்ற இயக்கங்களுக்கும் உள்ள வேறுபாடு தெரிந்துவிடக்கூடாது என்று திட்டமிட்டு வேண்டுமென்றே எல்லோரையும் விடுதலைப்புலிகள் என்று சித்தரித்து எழுதினார்கள்.

இப்படிச் செய்வதன் மூலம் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது உள்ள நட்பை தளரச் செய்து விடலாம் என்பதுதான் இவர்களின் நோக்கம்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு எதிராக திரைமறைவு வேலைகளும் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. இதற்கு ஒரு சில பத்திரிகைகளும், ஈழப் போராளிகள் என்று ஊரை ஏமாற்றிக் கொண்டிருந்தவர்கள் சிலரும் உடைந்தையாக இருந்தார்கள்.

6-5-86 அன்று யாழ்ப்பாணம் அருகே டெலோ குழுவின் பொறுப்பாளர் சிறீ சபாரத்தினம் கொலை செய்யப்பட்டார் என்ற செய்தி தமிழகத்தில் வெளியானபோது சிறீசபாரத்தினத்தை ஆதரிப்பவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிராக அறிக்கை வெளியிட்டார்கள். இதைக் காரணமாகக் காட்டி எம்.ஜி.ஆர் அவர்களிடம் இருந்து பிரபாகரனை பிரித்து

www.padippakam.com



விடலாம் என்ற நோக்கத்தோடு எழுதியும், பேசியும் வந்தார்கள். இது எம்.ஜி.ஆர் அவர்களுக்கு எதிரான சூழ்ச்சிக்கு வலு சேர்த்தது.

தொலைநோக்கு சிந்தனையோடு, கட்டுப்பாடான இராணுவமாக விளங்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுதியும் அதற்குத் தலைமை தாங்கும் பிரபாகரனின் தன்னிகரிலா ஆற்றலும் குறைத்து மதிப்பிடப்பட முடியாதவை. தனியொரு இயக்கமாக நின்று போராடி ஈழத்தமிழர்களைக் காப்பற்ற தங்களை அர்ப்பணித்துக் கொண்டு இருக்கும் மாவீரர்களை எவ்வளவு பெரிய சக்திகள் எதிர்த்தாலும் தாக்கி எழுதினாலும் யாருடைய சலசலப்பையும் கண்டு அஞ்சாது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரிப்பதில் இருந்து பின்வாங்காமல், பிரபாகரன் அவர்களை பாதுகாப்பதில் எம்.ஜி.ஆர் அவர்கள் உறுதியோடு இருந்தார்கள்.

பிரபாகரன் அவர்களையும் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்களையும் பிரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வி கண்டவுடன் ‘பயங்கரமான’ சூழ்நிலையை தமிழகத்தில் உருவாக்கி அதன்மூலம் எம்.ஜி.ஆர் அரசை செயல் இழக்க செய்வதற்கு கொழும்பு, டில்லி, சென்னை ஆகிய இடங்களில் உள்ள தமிழின விரோதிகள் சதித்திட்டம் தீட்டினார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், ஈரோஸ் இயக்கமும் தங்களுடைய அரசியல் பணி நிமித்தமாகவே தமிழகத்தில் தங்கவேண்டியிருந்தது. அமைதியான முறையில் தங்களது அரசியல்பணிகளை சென்னையில் இருந்து செய்து வந்தார்கள். இந்த இயக்கங்களில் பெரும்பகுதியினர் தமிழீழத்தில் தமிழ் மக்களை பாதுகாக்கும் பணியில் இருந்தார்கள்.

டக்ளசு தேவானந்தா வன்முறையில் இறங்கிய அதே நாளில் (1-11-86) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பச்சூர் கிராமத்தில்

www.padippakam.com



ஈழத்தமிழ் மக்களுக்காக போராடுகின்றோம் என்று சொல்லிக் கொண்ட "புளொட்" குழுவைச் சேர்ந்த இருவர் குடித்து விட்டு ரகளை செய்திருக்கிறார்கள்.

இலங்கையில் தமிழ் மக்கள் கொடுமைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் பெயரை பயன்படுத்திக் கொண்டு, நீங்கள் இங்கு வந்து குடித்து விட்டு ரகளை செய்யலாமா என்று அவ்வூர் மக்கள் 'புளொட்' குழுவைச் சேர்ந்தவர்களைக் கண்டித்தார்கள். ஆத்திரமடைந்த அவ்விரு குடிகாரர்களும் தங்கள் முகாமிற்குப் போய், தமது நண்பர்களை அழைத்துக் கொண்டு திரும்பி வந்து, கிராம மக்களிடம் கலவரம் செய்திருக்கிறார்கள்.

இக்கலவரம் குறித்து தகவல் அறிந்தவுடன் காவல்துறையினர் விரைந்து சென்று கட்டுப்பாடற்ற 'புளோட்' குழுவினர்களை கைது செய்து விட்டார்கள். கொஞ்சம் தாமதப்படுத்தி இருந்தால் சென்னை சம்பவம் போல் இங்கும் துப்பாக்கி குண்டுகள் வெடித்திருக்கும். இவர்களின் நோக்கம் எப்படியாவது எம்.ஜி.ஆர் அரசுக்கு தொல்லை கொடுப்பதும், ஈழத்தமிழர் என்றாலே தமிழக மக்களிடம் வெறுப்பு வரும்படி செய்வதுமாகும்.

பிரபாகரன் அவர்களை ஆதரிக்கும் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டியவர்களின் நோக்கம் டக்ளசு தேவானந்தா மூலம் சென்னையிலும், பரந்தன் ராசன் என்பவர் மூலம் தஞ்சை மாவட்டத்திலும் அரங்கேறியது.

'புளோட்' குழுவில் இருந்த ராசன் அந்த குழுவை உடைத்து, ஈ.என்.டி.எல்.எஃப் என்ற புது குழுவை ஏற்படுத்தினார். இக்குழுக்களிடையே ஏற்பட்ட மோதலால் ஒரத்தநாடு பகுதி போர்க்களமாக மாறியது. இதுபோன்ற செயல்களில் விருப்பம் இல்லாத இரண்டு இளைஞர்கள் ஒரத்தநாடு அருகில் உள்ள

www.padippakam.com



பண்ணைவேல் தியாகராசன் வீட்டில் தஞ்சம் புகுந்தார்கள். இளைஞர்களை ஒப்படைக்க முடியாது என்றதும் பண்ணைவேல் தியாகராசனை துப்பாக்கியால் சுட்டு இருக்கிறார் பரந்தன் ராசன். இதைக் கண்ட அப்பகுதி மக்கள் கொதித்து கிளர்ந்து எழுந்தார்கள். எம்.ஜி.ஆர் அவர்களின் அரசு மிகவும் சிரமப்பட்டு இந்த பிரச்சனையை எதிர்கொண்டது.

**சூழ்ச்சிக்கு எதிராக நடவடிக்கை**

இப்படியாக எம்.ஜி.ஆர் அவர்களின் அரசுக்கு பலவழிகளில் சிக்கல்கள் உருவாக்கப்பட்டன. இவ்விதம் தமிழக மக்களுக்கும் ஈழமக்களுக்கும் இடையே பிரிவை உருவாக்கும் முயற்சிகள் நடைபெறுவதை அறிந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரன் அவர்களும், அன்டன் பாலசிங்கமும் 3-11-86 அன்று கோட்டையில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களைச் சந்தித்து, ஈழப் போராட்டத்தை களங்கப்படுத்தும் 'போலி இயக்கங்களின்' இழி செயல்களை தடுத்து நிறுத்துமாறு கேட்டுக்கொண்டார்கள். அதோடு அடுத்து நடைபெற இருந்த இலங்கை பேச்சுவார்த்தை பற்றிய தங்கள் கருத்துகளையும் எழுத்து மூலமாக எம்.ஜி.ஆர் அவர்களிடம் கொடுத்தார்கள்.

7-11-86 அன்று "இந்து" நாளிதழ் மிகத் தெளிவாக எழுதியது; 'தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தவிர, ஏனைய இயக்கங்கள் மிக அதிகமாக தங்களை விளம்பரப்படுத்திக் கொண்டு வருகின்றன என்றும், உண்மையில் அந்த இயக்கங்கள் செயலற்றவைகளாகவே இருக்கின்றன என்றும் செய்தி வெளியிட்டது.

இந்த செய்தி பிரபாகரனின் கருத்துகளை பிரதிபலிப்பதாக அமைந்தது.

www.padippakam.com



போலி இயக்கங்களைப் பயன்படுத்தி தனக்கும் தனது அரசுக்கும் எதிராக சூழ்ச்சிகள் பின்னப்படுவதை மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் நன்கு உணர்ந்திருந்தார். வன்முறையில் இறங்கியவர்களுக்குப் பின்னால் சில சக்திகள் செயல்படுகின்றன என்பதையும் தெரிந்திருந்த எம்.ஜி.ஆர் அவர்கள், தக்க சமயத்தில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் காத்திருந்தார்.

இந்த சமயத்தில்தான் மத்திய அரசு எம்.ஜி.ஆர் அவர்களை அழைத்திருந்தது. 7-11-86 அன்று எம்.ஜி.ஆர் அவர்கள் டெல்லியில் இருந்தபோது அவரிடம் போராளிகள் மீது நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தப்பட்டது. இந்தச் செய்தி `Frontline' பத்திரிகையில் வெளியாகியுள்ளது.

15-11-86ல் பெங்களூரில் தொடங்கவிருக்கும் தெற்காசிய நாடுகளின் (சார்க்) மாநாட்டில் இலங்கை அதிபர் செயவர்த்தனா கலந்து கொள்ளும்போது, தமிழகத்தில் தங்கியுள்ள போராளிகளால் அவருக்கு எந்தவித பிரச்சனையும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

## அதிகார அத்துமீறல்

தமிழகத்தில் ஈழப்போராளிகள் என்று சொல்லி முகாமிட்டிருந்தவர்கள் சிலரால் ஆங்காங்கே அவ்வப்போது பதற்றநிலை ஏற்பட்டது தொடர்கதையானது. இது சட்ட ஒழுங்கு பிரச்சனையாக மாறும் அபாயமிருப்பதை உணர்ந்திருந்த எம்.ஜி.ஆர் அவர்கள் அந்த இயக்கங்கள் மீது நடவடிக்கை எடுக்க இதுதான் சமயம் என்று டி.ஜி.பி. மோகன்தாசுக்கு அதனைச் செய்ய அனுமதியளித்தார். ஆனால் மோகன்தாசு, குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட இயக்கத்தினர் மீது நடவடிக்கை எடுத்த அதே சமயம், எந்த வித பிரச்சனைக்கும் இடமளிக்காத எம்.ஜி.ஆர் அவர்களின் அரவணைப்பைப் பெற்றிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதும் தன் பார்வையை

www.padippakam.com



திருப்பினார். 8-11-86 அன்று விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைப் பறிமுதல் செய்தார், இயக்கத்தின் தலைவர் பிரபாகரனையும் வீட்டுக் காவலில் வைத்தார்.

தான் நடத்திய இந்த ஆயுதப் பறிப்பு நடவடிக்கையையும் அதோடு இணைந்ததான விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் பிரபாகரனை வீட்டுக் காவலில் வைத்த சம்பவத்தையும் ஒளிப்பேழையில் (வீடியோ) பதிவு செய்து வைத்திருந்தார் டி.ஜி.பி. மோகனதாசு. அந்த ஒளிப்பேழை அமெரிக்க செயற்கைக்கோள் மூலம் இலங்கைக்கு அனுப்பப்பட்டதாக தெரியவந்தது. அங்கு இலங்கை அரசின் ‘ரூபவாகினி’ தொலைக்காட்சியில் தொடர்ந்து மூன்று நாட்கள் ஒளிபரப்பப் பட்டது. இந்தப் படம் செயற்கைக்கோள் மூலம் கிடைத்ததாக ஒளிபரப்பின்போது ரூபவாகினி அறிவித்துக் கொண்டது. இது தமிழகத்தில் பத்திரிகைச் செய்தியாக வலம் வந்தது.

இலங்கைத் தொலைக்காட்சியில் ஆயுதப் பறிப்பு சம்பவம் பற்றிய படம் காட்டப்பட்ட செய்தி வெளியாகியதுமே தனது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள டிஜி.பி மோகன்தாசு மீது எம்.ஜி.ஆர் அவர்களுக்கு சந்தேகம் எழ ஆரம்பித்தது. அதிலிருந்து மோகனதாசை கண்காணித்து வந்தார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

**சார்க் மாநாடு**

எம்.ஜி.ஆர் அவர்களுக்கு ஏற்பட்ட சோதனையான நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் முயற்சிகள் நடை பெற்றன. ஆனால் எம்.ஜி.ஆர் அவர்கள் மிகவும் சாதுரியமாக காய் நகர்த்தி தனக்கு எதிரான கணக்குகளையெல்லாம் தவிடுபொடியாக்கும் வகையில், பெங்களூரில் நடக்கவிருந்த ஈழத்தமிழர் பிரச்சனை குறித்த பேச்சுவார்த்தைக்கு தனக்கு உதவியாக பிரபாகரன் அவர்களையே அழைக்கும் விதமாக

www.padippakam.com



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மட்டுமே தேர்வு செய்தார். இதனால் தமிழகத்தில் குற்ற நடவடிக்கையில் இறங்கிய இயக்கங்கள் நிராகரிக்கப்பட்டன.

தெற்காசிய நாடுகளின் (சார்க்) மாநாடு பெங்களூரில் 15-11-86 அன்று தொடங்கியது. அப்போது இந்திய பிரதமர் இராசீவ் காந்தியும் செயவர்த்தனாவும் இலங்கைத் தமிழர் பிரச்சனை குறித்து பேசினார்கள்.

பெங்களூரில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்களின் கருத்தை இராசீவ் காந்தி கேட்டார். எம்.ஜி.ஆர் அவர்கள் மிகத் தெளிவாக சொன்னார்கள். ஈழ மக்களின் ஒருமித்த அங்கீகாரத்தைப்பெற்ற, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் இயக்கம்தான் வலிமையாகப் போராடுகிறது; எனவே அந்த இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் கருத்து மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படக்கூடியது; அவரின் கருத்தை எடுத்துக் கொண்டுதான் பேச்சுவார்த்தை தொடங்க வேண்டுமென்றார்.

எம்.ஜி.ஆர் அவர்களின் யோசனைப்படியே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன், அன்டன் பாலசிங்கம், எல். திலகர் ஆகியோர் பெங்களூருக்கு வரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்களும் தனிப்பட்ட முறையில் பிரபாகரன் அவர்களை வரும்படி கேட்டுக் கொண்டார்கள். அதன்படி தனி விமானத்தில் பெங்களூர் சென்றார்கள்.

எம்.ஜி.ஆர் அவர்களின் விடாப்பிடியான முயற்சியால்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை மட்டும் பேச்சுவார்த்தைக்கு மத்திய அரசு அழைத்தது. இது எம்.ஜி.ஆர் அவர்களுக்கு கிடைத்த வெற்றியாகும். இதன் மூலம் மற்ற இயக்கங்களுக்கும் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி

www.padippakam.com



விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுதங்களை பறிமுதல் செய்த மோகன்தாசுக்கும் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

**திரை விலகியது**

ஈழப் பிரச்சனையில் எப்போதும் தமிழர்களுக்கு எதிராகவே செய்தி வெளியிடும் ஒரு சில பத்திரிகைகள், எம்.ஜி.ஆர் அவர்களின் நிலையை கண்டு மிரண்டுபோய், செய்திகளைத் திரித்து எழுதி மக்களை குழப்பமடையவைக்க முயற்சித்தன. எம்.ஜி.ஆர் அவர்களும் பிரபாகரன் அவர்களும் ஈழத் தமிழர்களை கொன்று குவிக்கும் செயவர்த்தனாவை பெங்களூரில் சந்தித்தார்கள் என்று செய்தி வெளியிட்டார்கள்.

இதன் எதிரொலி 18-11-86 அன்று சட்டமன்றத்திலும் கேட்டது. பெங்களூரில் எம்.ஜி.ஆர் அவர்களுக்குத் துணையாக இருந்த பண்ருட்டி இராமச்சந்திரன் (அப்போது உணவு அமைச்சர்) பத்திரிகை செய்திகளை அறிந்தவுடன் சென்னைக்கு வந்து சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகளுக்கு இது குறித்து விளக்கம் கொடுத்தார். அது வருமாறு:

"மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், இந்திய பிரதமர் அவர்கள், சிறீலங்கா அரசோடு பேச்சுவார்த்தை நடக்கிறபோது, இந்திய பிரதமர் அவர்களுக்குத் தேவையான, அவர்கள் விரும்புகிற காரியங்களில் கலந்து கொள்வதற் காகத்தான் நேற்றும் அதற்கு முன்தினமும் அங்கே இருந்தார்கள்.

"இந்திய பிரதமர் அவர்களை இரண்டு முறை சந்தித்தார்கள். அப்போது போராடுகிற இலங்கைத் தமிழர்களுடைய உணர்வுகளையும் இங்கே உள்ள தமிழ் மக்களின் உணர்வுகளையும் எடுத்துச் சொல்கின்ற அளவுக்கு, அந்தத் தீர்வுக்கு பிரதமருக்கு உறுதுணையாக இருந்தார்கள்.

www.padippakam.com



"இந்திய பிரதமரோடு நாம் பேசும்போது நமக்குத் துணையாகத்தான் போராளிகள் இருந்தார்கள். ஆனால் நேரடிப் பேச்சுவார்த்தை நடந்தது என்னவோ இந்திய அரசுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையேதான்.

"நாங்கள் சிறீலங்கா அரசை சந்தித்ததாகவோ மற்றும் போராளிகள் சிறீலங்கா அரசை சந்தித்ததாகவோ வந்த செய்திகள் சரியான செய்திகள் அல்ல. இந்திய பிரதமர் அவர்களுக்கு உறுதுணையாக நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருந்தார்கள். நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு உறுதுணையாகப் போராளிகள் இருந்தார்கள். அந்த வகையில்தான் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன."

**(நவம்பர் 86)**

ஈழப் பிரச்சனையைப் பொறுத்தவரையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் விதமாகத்தான் எம்.ஜி.ஆர் அவர்கள் செயல்பட்டார்கள். அது தமிழ்நாட்டு மக்களின் உணர்வாகவும் இருந்தது. சோதனைகள் சூழ்ந்த நிலையிலும் சவால்கள் எதிர்நோக்கிய போதும் எம்.ஜி.ஆர் அவர்கள் ஈழத்தமிழர் பிரச்சனையில் தனது கொள்கையிலிருந்து விலகியதும் இல்லை. விட்டுக் கொடுத்து யாருக்கும் அடிபணிந்ததும் இல்லை.

## நேரம் பார்த்து நெருக்கடிகள்

எம்.ஜி.ஆர் அவர்களின் உறுதிமிக்க கொள்கைகளைக் கண்டு திகைத்துப் போன தமிழின விரோதிகள், அதிகார வர்க்கத்தின் மூலமாக பிரச்சனைகளை உருவாக்கினார்கள்.

எம்.ஜி.ஆர் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கடமையாற்றும் டி.ஜி.பி மோகன்தாசு வடிவில்தான் பிரச்சனை என்றால், மத்திய அரசும் சமயம் பார்த்து தன் குரலை மாற்றிக்கொண்டது.

www.padippakam.com



"தமிழ்நாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரை வீட்டுக்காவலில் வைக்கவும், ஆயுதப் பறிப்புக்கும் மத்திய அரசு எந்த உத்தரவும் இடவில்லை" என்று அப்போதைய பாதுகாப்பு இணை அமைச்சர் ப.சிதம்பரம் மதுரையில் பேட்டிகொடுத்தார். இது எம்.ஜி.ஆர் அவர்களுக்கும் பிரபாகரன் அவர்களுக்கும் இடையே பகைமை உணர்வை ஏற்படுத்த முயற்சிக்கும் விதமாக அமைந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தொல்லை கொடுத்ததன் மூலம் எம்.ஜி.ஆர் அவர்கள் மீது ஈழத்தமிழர்களுக்கு வெறுப்பு வரும்படியான சூழ்நிலையை உருவாக்கியிருந்தார் மோகன்ராசு. இந்த நிலையைப் பார்த்த தமிழின விரோதிகள் மகிழ்ச்சி கடலில் மூழ்கினார்கள்.

இந்த நிலைக்குப் பின் எம்.ஜி.ஆர் அவர்களோ தனது முதல்வர் பொறுப்பின் காரணமாக, யார் மீதும் பழிபோடாமல் எவ்வளவோ சிக்கல்களுக்கும் மத்தியில் ஆயுதப் பறிப்புக்கான முழுப்பொறுப்பையும் தானே ஏற்றுக்கொண்டார். இந்த நேரம் பார்த்து எம்.ஜி.ஆர் மீது வசைமாரி பொழியப்பட்டது. பிரபாகரன் அவர்களுக்கும் எம்.ஜி.ஆர் அவர்களுக்கும் மத்தியில் இடைவெளியை ஏற்ப்படுத்தி விடலாம் என்று கணக்கு போட்டார்கள்.

ஈழத்தமிழர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் எம்.ஜி.ஆர் அவர்கள் எவ்வளவோ உதவிகள் செய்துள்ளார்கள். ஆனால் இதையெல்லாம் எம்.ஜி.ஆர் அவர்கள் வெளியிட்டு இருந்தால், **தமிழின வரலாற்றிலேயே யாருக்கும் கிடைக்காத மிக உயர்ந்த இடம் அப்போதே அவருக்குக் கிடைத்திருக்கும்.**

எந்த நிலையிலும் தன்னை விளம்பரத்தின் மூலம்

www.padippakam.com



வெளிக்காட்டிக் கொள்ளும் பழக்கம் எம்.ஜி.ஆர் அவர்களிடம் இல்லை. அதனால்தான் ஆயுதப் பறிப்பு நேரத்தில் தனக்கு ஏற்பட்ட சவால்களை சமாளிக்க நிதானத்தையே கடைப்பிடித்தார்.

இந்த நிலையில் சிலர் எம்.ஜி.ஆர் அவர்கள் மீது அனல்தெறிக்கும் அம்புகளை எறிந்தார்கள், ஆவேசப்பட்டு குதித்தார்கள். ஆனால் எம்.ஜி.ஆர் அவர்கள் அரசியல் ரீதியான முடிவுகள் எடுக்க இன்னும் காலம் கனியவில்லை என்பதை உணர்ந்து, எதிர்ப்பைக் கண்டு மிரண்டு போகாமல் தனது முடிவுகளை அறிவிக்க இராசதந்திரத்தையே கையாண்டார்.

**எல்லாவற்றையும் எதிர்கொண்டார்**

பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்களையும் தகவல் தொடர்பு கருவிகளையும் திரும்ப ஒப்படைக்கும்படி கோரிக்கை விடுத்து 22-11-86 அன்று அதிகாலையிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் சாகும்வரை பட்டினிப்போர் தொடங்கினார்.

அன்றைய தினம் மத்திய அரசின் வானொலி, தொலைக்காட்சி இரவு செய்தியில் “விடுதலைப் புலிகளிடமிருந்து தகவல் தொடர்பு கருவிகள் பறிக்கப்பட்டது குறித்து இந்திய அரசின் உள்துறை தனக்கு தெரியாது என்றும் அதிர்ச்சியாக இது உள்ளது” என்றும் அறிவித்தது.

பிரபாகரன் அவர்கள் பட்டினிப்போர் தொடங்கிய செய்தி பரவியவுடன் தமிழகம் கொந்தளித்ததைப் பார்த்த டெல்லி அதிகாரிகள் மேற்கண்டபடி செய்திகளை அறிவித்தார்கள். இதுவும் மறைமுகமாக எம்.ஜி.ஆர் அவர்கள் மீது பழிசுமத்துவதாக ஆயிற்று.

ஒருபுறம் மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் இயக்கங்களால் சட்ட ஒழுங்கு பிரச்சனை. மறுபுறம் பிள்ளையை

www.padippakam.com



கிள்ளி விட்டு தொட்டிலை ஆட்டும் ஒருசில மத்திய அதிகாரிகளின் இரட்டை நிலை, உண்மைக்கு மாறான தகவல்களை வெளியிடும் பத்திரிகைகள், கூட இருந்தே குழிபறிக்கும் டி.ஜி.பி மோகன்ராசு, தருணம் பார்த்து எம்.ஜி.ஆர் அரசை நெருக்கடிக்குள்ளாக்கத் துடிக்கும் எதிர்கட்சிகள். இவை எல்லாவற்றையும் எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருந்தார் புரட்சித் தலைவர்.

**சூழ்ச்சிகள் முறியடிப்பு**

பட்டினிப்போர் தொடர்ந்த பிரபாகரன் அவர்கள் இண்டாவது நாளாக ஒரு சொட்டு தண்ணீர் கூட குடிக்காமல் இருந்ததைக் கண்ட எம்.ஜி.ஆர் அவர்கள் பதறிப் போனார்கள். காலம் தாழ்த்தாமல் உடனடியாக பிரபாகரன் அவர்களின் உயிரை காப்பாற்றும் செயலில் இறங்கினார்.

23-11-86 அன்று அதிரடி நடவடிக்கையாக, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் அவர்களிடம் ஆயுதங்களை ஒப்படைக்க உத்தரவிட்டார்.

பிரபாகரன் அவர்களுக்கும் தனக்கும் இடையே பின்னப்பட்ட சூழ்ச்சி வலையை **தனக்கே உரித்தான அறிவார்த்த அரசியல் அணுகுமுறை மூலம் உடைத்தெறிந்தார்.**

அதோடு தனக்கு கூட இருந்தே துரோகம் இழைத்த டி.ஜி.பி. மோகன்தாசை அவர் வகித்த காவல்துறை தலைமை இயக்குனர் என்ற உயர் பதவியில் இருந்து மாற்றம் செய்து, காவலர் வீட்டு வசதி வாரியத்திற்கு பணியாற்ற அனுப்பினார்.

**சோதனைகளுக்கு மத்தியிலும் தொடர்ந்த பணி**

நெருக்கடிகளையும் சோதனைகளையும் எதிர்நோக்கிய போதும் அரசு நிர்வாகத்தையும் தொய்வின்றித் தொடர்ந்த எம்.ஜி.ஆர் அவர்கள். தமிழீழ அகதிகள் மறுவாழ்வு திட்டங்களை

www.padippakam.com



நடைமுறைப்படுத்துவதற்கும் ஈழப்பிரதிநிதிகளை சந்திப்பதற்கும் முக்கியத்துவம் கொடுத்தார். இதற்கிடையில் கட்சிப்பணிகளையும் கவனித்தார்.

இந்தப் பணிகளுக்கு மத்தியிலும் 3-5-86 அன்று தலைமைச் செயலகத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி ஈழத்தமிழர் பிரச்சனை குறித்து ஆலோசனை மேற்கொண்டார்கள். 29-5-86 அன்று மீண்டும் அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி ஈழத்தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கும் கொடுமைகளை கண்டித்ததோடு, மத்திய அரசின் கவனத்தைத் திருப்புவதற்காக பொது வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்தார்.

31-5-86 அன்று பொது வேலை நிறுத்தம் அமைதியான முறையில் நடந்தது. தமிழக மக்களின் உள்ளக் குமுறலை உணர்த்தியது. எம்.ஜி.ஆர் எடுக்கும் ஒவ்வொரு முடிவுக்கும், தமிழக மக்கள் ஒத்தழைப்பு நல்கினார்கள்.

ஐந்து கோடி தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு செவிமடுக்காத செயவர்த்தனா இராணுவத்தின் செயலை தடுத்து நிறுத்துவதற்கு எவ்வித முயற்சிகளையும் எடுக்கவில்லை. தொடர்ந்து இலங்கையின் முப்படைகளுக்கு பச்சை கொடி காட்டியதன் விளைவாக இராணுவ அடக்குமுறை உச்சக்கட்டத்தை எட்டியது.

தமிழீழத்தின் அபயக்குரல் தினம் தினம் தமிழகத்தில் எதிரொலித்தது. தாயுள்ளம் கொண்ட மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள் தனது உடல் நலத்தையும் பொருட்படுத்தாமல் ஈழத்தமிழர் பிரச்சனைக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தார்.

28-8-86 அன்று மத்திய உள்துறை அமைச்சர் பூட்டாசிங், வெளியுறவுத்துறை அமைச்சர் சிவசங்கர், பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் ப.சிதம்பரம், கருப்பையா (மூப்பனார்) ஆகியோர், எம்.ஜி.ஆர் அவர்கள் வீட்டில் போராளிகளைச் சந்தித்தார்கள்.

www.padippakam.com



# தமிழீழப் போராட்டத்திற்கு அங்கீகாரம்

**இலங்கை** அரசு பலமுனைத் தாக்குதலில் இறங்கி அப்பாவித் தமிழர்களை பலிவாங்கியது. இந்திய பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் எடுத்த முயற்சிகளுக்கு செயவர்த்தனா உடன்படுவதாக இல்லை. எனவே இந்திராகாந்தி அம்மையார் செயவர்த்தனாவை நம்பவே இல்லை.

**இந்த சூழலில் இந்திராகாந்தி அவர்கள் ஈழப்பிரச்சினையை எப்படி அணுகினார் என்று திருபண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் கூறியதாவது.**

“ஒரு யோசனை இந்திராகாந்தி அம்மையாருக்கு ஏற்பட்டது. அதாவது இந்திய இராணுவத்தை அனுப்பி பாதுகாப்பு தரலாமானு. வங்கதேசம்னா ஒரு மொழி பேசுகிற, ஒரே மக்கள் அதனாலே சுலபமா இந்திய இராணுவம் போய் அவங்கள காப்பாற்ற முடிந்தது.

“ஆனா இலங்கையில் மலையகத் தமிழர்கள் சிங்களர் இடத்தில் சிக்கி விடுவார்கள். ஈழத்தமிழர்களை காப்பாற்றுகிறபோது மலையகத்தில் பலபேர் படுகொலைக்கு ஆளாகி விட்டால் பெரிய பழி வந்துவிடும் என்று இந்திராகாந்தி அம்மையார் பயந்தாங்க அதனால அந்த முடிவு வேண்டாம் என்று நிறுத்திவிட்டு, பிறகு என்ன செய்யலாம் என்று முடிவு எடுத்தாங்க.

“சிங்கள இராணுவம் அங்குள்ள தமிழ் மக்களை கொடுமைப்படுத்தி கற்பழிக்கிறது, இளைஞர்களை கொலை செய்கிறது, கைது செய்து கொண்டுபோய் காணாமல் செய்கிறது. சிங்கள இராணுவத்திடமிருந்து தமிழ் மக்களை தற்காத்துக் கொள்கின்ற வகையில அங்குள்ள இளைஞர்களுக்கு போர் பயிற்சி தந்து, அதற்குள்ள ஆயுதங்களையும் தந்து ஈழத்தமிழ் பெண்களின் மானத்தை காப்பாத்தறது, மக்களை காப்பாத்தறது அதற்கு ஏற்பாடு செய்வதற்காகத்தான் முகாம்கள் எல்லாம் ஆரம்பித்தார்கள்.

www.padippakam.com



"அந்த நேரத்தில என்ன சொன்னாங்கன்னா அதிபர் செயவர்த்தனாவை சுத்தமாக இந்திராகாந்தி அம்மையார் நம்பவில்லை. இலங்கைத் தமிழர் பிரச்சனையில் பின்னால் ஏதாவது பூதாகாரமாக ஏற்பட்டால் அந்த நேரத்தில் இந்தியா தலையிட வேண்டி வரலாம் என்று தயார் நிலையில் இருந்தாங்க"

இந்திராகாந்தி அம்மையார் அவர்கள், தனது இறுதிநாள் வரைக்கும் செயவர்த்தனாவை நம்பவேயில்லை. ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரையில் அன்னை இந்திராகாந்தி அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாத மாபெரும் இழப்பு ஆகும்.



**ஈழத்தமிழர்களின் இன்னல் துடைத்த அன்னை இந்திரா காந்தி அவர்களும் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்களும்.**

www.padippakam.com



தமிழர்கள் மீது இலங்கை இராணுவத்தின் தாக்குதல் இன்னும் அதிகரித்தது. உடனே எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழகத்தில் பொது வேலை நிறுத்தம் நடத்தி தனது எதிர்ப்பை காட்டினார்.

அதன்பிறகுதான் திம்பு பேச்சுவார்த்தை தொடங்கியது. பேச்சுவார்த்தையும் சரியான திசையில் செல்லவில்லை என்று கூறி, விடுதலைப் புலிகள் இயக்கம் அதில் இருந்து வெளியேறியது.

இந்த நிலையில், தமிழீழ் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் மற்றும் சந்திரகாசன், சந்தியேந்திரா ஆகியோர் நாடு கடத்தப்பட்டார்கள். அப்போது எம்.ஜி.ஆர் அவர்கள் அமெரிக்காவில் இருந்தார்கள்.

இந்த செய்தி எம்.ஜி.ஆர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டதும், தனது சிரமத்தைப் பொருட்படுத்தாமல் உடனடியாக தமிழகம் திரும்பினார்.

**நாடுகடத்தல் சம்பவம் குறித்து திரு.பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் கூறியதாவது:** “நானும் எம்.ஜி.ஆர். அவர்களும் புளோரிடாவில் இருந்தோம். எங்களுக்கு தகவல் கொடுத்தாங்க. எங்க புரோக்கிராமை கேன்சல் பண்ணிக்கிட்டு வந்தோம்.

“வந்தபிறகு உடனே மத்திய அரசை தொடர்பு கொண்டு, எங்ககிட்ட விடுங்க அந்த பிரச்சனையை, மத்திய அரசாங்கம் நீங்க டீல் பண்ணாதீங்கனு சொல்லிட்டு நாடுகடத்தப் பட்டவங்களை திரும்ப அழைக்க வழிவகை செய்தார் எம்.ஜி.ஆர். அதாவது அப்ப வெளியுறவு செயலாளராக ரொமேஷ் பண்டாரிதான் இருந்தார். அவர் ஒண்ணு கிடக்க ஒண்ணு செய்யக் கூடியவர். அப்பவே நம்ம ஆட்கள் சொன்னாங்க... செயவர்த்தனா கிட்ட வைர அட்டி வாங்கிக்கிட்டான்னு சொல்லிக்கிட்டிருப்பாங்க.”

www.padippakam.com



அடுத்த கட்டமாக பெங்களூர் பேச்சுவார்த்தையும் தோல்வியிலேயே முடிந்தது. செயவர்த்தனாவின் ஒரே நோக்கம் இராணுவ தீர்வுதான்; இதில் மாற்றமே இல்லை என்பது உறுதியாயிற்று.

**இந்த நிலையில் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டார்:** "இலங்கையில் தமிழர்கள் மீது இராணுவத்தின் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. இந்திய பிரதமர் இராசீவ் காந்தி மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தையும் வீணாக்கும் வகையில்-இலங்கை அரசும், இராணுவமும் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்து வருகின்றனர். அரசியல் ரீதியிலும், இராசதந்திர நடவடிக்கை மூலமாகவும் இலங்கை அரசை ஒரு கவுரவமான வழிக்கு திருப்ப நாம் எடுக்கும் முயற்சிகள் பலன் அளிக்கவில்லை என்பது வருந்தத் தக்கதாகும்."

இனி பேச்சுவார்த்தைகள் பயன் அளிக்காது என்ற முடிவுக்கு வந்தார் எம்.ஜி.ஆர் அவர்கள். தமிழ் மக்களுக்காக போராடுகின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு 3 கோடி ரூபாயும் "ஈரோஸ்" இயக்கத்துக்கு ஒரு கோடி ரூபாயும் (ஈரோஸ் பின்னா புலிகள் இயக்கத்தில் இணைந்து விட்டது) வழங்கி முறைப்படி தமிழக அரிசின் கொள்கையை சட்டமன்றத்தில் அறிவித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் தமிழீழ போராட்டத்தையும் அங்கீகரித்தார்.

தமிழீழத்தில் போராடுகின்ற **விடுதலைப் புலிகளை மட்டுமல்லாமல் பெண்புலி வீராங்கனைகளையும் சட்டமன்றத்தில் பாராட்டியது அழியாத வரலாறு ஆனது.**

இதையெல்லாம் தெளிவுபடுத்தும் விதமாக 26-4-87ஆம் நாள் ஒரு மணிநேரம் திரு.பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களோடு கலந்து எந்தெந்த கருத்துக்களை நாம் தெரிவிக்க

www.padippakam.com



கட்டாயம் கடமைப்பட்டிருக்கிறோம் என்கிற வகையில் சட்டமன்றத்தில் அறிவிக்கச் சொல்லியிருந்தார் எம்.ஜி.ஆர் அவர்கள்.

அதன்படி 27-4-87 அன்று சட்டமன்றத்தில் ஈழத்தமிழர் பிரச்சனையில் எம்.ஜி.ஆர் அரசின் கொள்கை முடிவை அறிவித்தார் பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள். அந்த அறிவிப்பு இலங்கையில் நடைபெறும் உண்மை நிலவரத்தை எடுத்துக்காட்டி சிங்கள அரசின் பாசிச போக்கை எதிர்த்து களம் காணும் தமிழ்ப்போராளிகளுக்கும் மக்களுக்கும் நேசக்கரம் நீட்டி, ஆதரவையும் உதவியையும் நல்கியது.

**வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்ற உரை வருமாறு:**

"இலங்கைத் தமிழர்கள் பிரச்சனை குறித்து இலங்கை அரசும் அவர்களோடு நெருங்கிய நண்பர்களும் அதை அறிந்தோ அறியாமலோ, அதேபோல இந்திய திருநாட்டிலேயுள்ள சில பத்திரிகைகளும், சில நேரங்களில் தொலைக்காட்சிகளும், வானொலிகளும் கூட சில சம்பவங்களை சரியான முறையில் நாட்டு மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதில்லை. ஆகவே, அந்த பனிப்படலத்தை நீக்கி உண்மை நிலையை விளக்க வேண்டுவது இந்த அரசின் தலையாய கடமையாகும்.

இலங்கை அரசை எடுத்துக்கொண்டால் கடந்த கால அனுபவம் என்னவென்றால், இன வெறியையும், மத வெறியையும், மொழி வெறியையும் மையமாக வைத்து செயல்படுகின்ற ஒரு அரசைத்தான் நாம் இலங்கையில் பார்க்கிறோம். இதற்கு ஆதாரங்களைத் தேடி அலைய வேண்டிய அவசியம் நிச்சயமாக இல்லை. சில தினங்களுக்கு முன் இலங்கை பாராளுமன்றத்தில் பேசிய அந்த நாட்டின் பிரதம அமைச்சர் பிரேமதாசா அவர்கள் அண்மையில்

www.padippakam.com



திருகோணமலையிலும், கொழும்புவிலும் நடந்து விட்ட வெடிகுண்டு சம்பவங்கள் பற்றி பேசினார். அவர் பேசியதில் தவறு இல்லை. ஆனால் அவர் பேசியபோது இலங்கை அரசினுடைய உண்மையான சொரூபம், ட்ரு கலர்ஸ், என்ன என்பதை நாமெல்லாம் தெளிவாக புரிந்துகொள்ளும் அளவுக்கு பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசுகின்ற பொழுது சொன்னது,

"When the lives of our people are in danger, we are not prepared to go in for a political solution. எமது மக்கள் உயிருக்கு ஆபத்து என்றால் அரசியல் தீர்வுக்கு நாங்கள் தயாராக இல்லை." இந்த 'எமது மக்கள்' என்றால் யார்? இது வரையில் இராணுவத்தினாலும், காவல்துறையினராலும் வடபுலத்திலேயும், கிழக்கு மாகாணத்திலேயும் கொல்லப்பட்ட தமிழர்கள் அல்ல. திருகோணமலையிலே, கொழும்புவிலே நடந்த வெடிகுண்டு சம்பவங்களின் விளைவாக சிங்களவர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்றவுடன் ஒரு நாட்டின் அரசு, அந்த அரசின் சார்பிலே பேசுகின்ற பிரதமர் என்ன சொல்லுகின்றார் என்றால், Our people என்றால் யார் என்கிறார், Who are the others? மேலும் அவர் இந்தியாவைப் பற்றிச் சொல்லும்பொழுது because we want friendship with India we cannot betray our people இந்தியாவோடு நட்புறவு வேண்டுமென்பதற்காக எமது மக்களை நாங்கள் கைவிடமாட்டோம். ஆகவே அவர்கள் சிங்களவர்களின் பிரதமராக இருக்கிறாரே தவிர, சிங்களவர்களின் ஜனாதிபதியாக இருக்கிறாரே தவிர, இலங்கையிலே உள்ள அத்தனை மக்களினுடைய ஜனாதிபதியாகவும், பிரதமராகவும் இருக்கிறார்களா என்பதை நாம் தயவு செய்து எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

எப்பொழுது ஒற்றுமை வரும்? எல்லோரும் ஒன்று என்கின்ற எண்ணம் ஏற்படுகின்றபொழுது ஒற்றுமை வரும். அவர்களே

www.padippakam.com



ஒன்றாக நினைக்காமல் தமிழ் மக்களை வேறாக நினைக்கின்ற பொழுது நீங்களும் நானும் சேர்ந்தா இலங்கையில் ஒற்றுமையை உருவாக்கப் போகிறோம் இதை இலங்கையிலே இருக்கின்ற சிங்கள மக்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அந்த மக்களின் சார்பிலே நடைபெறுகிற ஒரு அரசின் சார்பில் செயவர்த்தனே அவர்கள் இன்றைக்குப் பேசுகிற பொழுது We are for peace. We are for talks ஆனால் இதே செயவர்த்தனா அவர்கள் 1983 ஆம் ஆண்டு இனப்படுகொலை நடைபெற்றபொழுது, மக்களுக்கு விடுத்த அறிக்கையிலே அவர் பேசுகிறபொழுதும் சொன்னார், சிங்கள மக்களை எண்ணித்தான் 'எமது மக்கள் ஆபத்துக்கு உள்ளானால் நான் சும்மா இருக்க முடியுமா? எமது மக்கள் சும்மா இருப்பார்களா என்று கேட்டார். இவர்கள் "Our people" என்கிறார்களே, Then who are the other people? இந்த உள்ளுணர்வு அவர்களுக்கு இருக்கின்றவரை அவர்கள் பேச்சுவார்த்தையிலே ஈடுபடுகிறோம் என்று சொல்வதை எந்த அளவிற்கு நாம் ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம். Who are the other people? என்றால் அதற்கும் பிரேமதாசா சொல்கிறார். சொல்லாமல் விடுவாரா? சொல்கிறார். என்ன சொல்கிறார். If they continue to support our enemies we will have to look for support from another quarter. இந்தியாவைப்பற்றி குறிப்பிடுகிறபொழுது, 'எங்களுடைய எதிரிகளை அவர்கள் தொடர்ந்து ஆதரிப்பார்களானால் நாங்கள் வேறுபுறத்திற்குத் திரும்புவோம்.' ஆகவே, அங்குள்ள தமிழ் மக்களை அங்குள்ள குடிமக்களாக அவர்கள் கருதவில்லை. அந்த நாட்டு மக்களாக எண்ணவில்லை. அவர்கள் உள்ளக்கிடக்கையை அவர்களாகவே ஆத்திரம் வந்தவுடன் வெளிப்படுத்தியிருக்கிறார்ககள். அந்த உள்ளத்தில் தமிழ் மக்களை அன்னிய மக்களாக பகைவர்களாகக்

www.padippakam.com



கருதுகிறார்களே தவிர வேறு அல்ல. அப்படிக் கருதுகின்ற வரையிலும் எப்படி அந்த நாட்டிலே ஒற்றுமை வளரும்? எப்படி இறையாண்மை இருக்கும்? அதை நாம் போய் எப்படி உருவாக்க முடியும் என்பது நிச்சயமாக இந்த அரசுக்குத் தெரியவில்லை.

...அந்தநாட்டுப் பிரதமர் பிரேமதாசா அவர்கள் மேலும் கூறுகிறார், We are not prepared to go in for a political solution. அரசியல் தீர்வுக்கு நாங்கள் தயார் இல்லை. யாராவது அரிசியல் தீர்வு வெண்டுமென்று, எந்த நண்பராவது சொன்னால் அந்த நண்பர் மிகப் பெரிய எதிரி என்கிறார். எதிரிகளை என்பதை மூன்று விதமாகச் சொல்லலாம். எனிமி நம்பர் 1-முதல் என்று சொல்லலாம். ஒர்ஸ்ட் எனிமி என்று சொல்வார்கள்; மிக மோசமான எதிரி என்று சொல்லலாம். ஆனால் இவர் சொல்வது பிக்கஸ்ட் எனிமி-அதாவது இந்தியாவைக் குறிப்பிடுகிறார் ஏனென்றால் இந்தியா என்பது பெரிய பாகமாகத் தெரிகிறது. அவர்களையும் அறியாமலேயே அவர்களிடத்திலேயிருந்து என்ன வருகிறது என்றால், அரசியல் தீர்வு என்று சொல்கின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் Worst enemy அல்ல; First enemy அல்ல; biggest enemy என்கிற உணர்வு வருகிறது என்றால் இந்திய அரசையும், நம்மையும் பற்றி அவர்கள் எத்தகைய மனப் போக்கைக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இது ஒன்றே போதும். ஆகவேதான் அந்த இலங்கை மக்களின் சார்பிலே நடைபெறுகின்ற அரசினுடைய Content and Character அதைப் பொறுத்துத்தான் பேச்சுவார்த்தை யுடைய தன்மைகள் அமையும். பேச்சுவார்த்தையே கூடாது என்பது நமது நோக்கம் அல்ல.

...ஆனால் இலங்கை அரசைப் பொறுத்தவரையில் பேச்சுவார்த்தையில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. பேச்சுவார்த்தையை அவர்கள் விரும்பவில்லை.

www.padippakam.com



**பேச்சு வார்த்தையை அவர்கள் முகமூடியாக பயன் படுத்துகிறார்களே தவிர, உண்மையிலேயே அவர்கள் இராணுவத் தீர்விலேதான் மிகுந்த நம்பிக்கை வைத்து அதற்குத் திட்டமிட்டு செயல்படுகிறார்கள் என்பதுதான் நம்முடைய கணிப்பு கருத்து.** அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமரிடமும் இந்திய அரசிடமும் வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். கடந்த பிப்ரவரி மாதம் பாரதப் பிரதமரைச் சந்தித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடிதம் கொடுத்தபோதும் தெளிவாகச் சொன்னார்கள். பிரதமர் எடுத்த பல்வேறு முயற்சிகளைக் குறிப்பிட்டுக் காட்டிவிட்டு, நமது முதல்வர் கடிதத்தில் கூறுவதாவது. In spite of your sincere efforts, we feel that all of a sudden, the SriLankan Government has switched over to military option instead of arriving at a political solution.

"உங்களுடைய உண்மையான முயற்சிகளுக்கு மாறாக, இலங்கை அரசு அரசியல் தீர்வை விரும்பவில்லை. அதற்கு மாறாக இராணுவத் தீர்வுக்கு அவர்கள் சென்றுவிட்டார்கள் என்று நாங்கள் கருதுகிறோம்" என்றார். அதோடு மட்டுமல்ல, சேலம் மாவட்டத்தில் சுற்றுப்பயணத்திலே இருந்தபோது நம்முடைய முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமருக்கு அனுப்பிய தந்தியில் குறிப்பிட்டார்கள்.

"These reports only confirm our fear that the Sri Lankan Government has decided to find a military solution to the ethinic problem by annihiliating the Tamils."

9-3-1987 அன்று கொடுத்த அந்தத் தந்தியில் எங்களுக்கு வருகின்ற தகவல்கள் இதை உறுதிப்படுத்துகின்றன. இலங்கை அரசானது இராணுவத் தீர்வை நடத்துவதற்கு முடிவு எடுத்து

www.padippakam.com



விட்டது என்றுதான் நாங்கள் கருதுகிறோம். அதனைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுதிய கடிதத்தில்

"Innocent civilians are being massacred. The operations of the Sri Lankan Government against the Tamil people of the Jaffna peninsula have a full military character "

என்று குறிப்பிட்டிருக்கிறார். யாழ்ப்பாணம் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் மீது இலங்கை அரசு முழு இராணுவத் தாக்குதலைத் தொடங்கியிருக்கிறது என்பதை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

மக்கள்மீது முப்படைகளையும் ஏவியிருக்கிறார்கள். இராணுவத்தின் மூலம் தாக்குதல் நடத்துகிறார்கள். விமானம் மீது குண்டுவீசுகிறார்கள். தமிழர்கள் தப்பித்து வெளியே செல்ல முடியாமல் கடல் வழியையும் தடை செய்கிறார்கள். இப்படிப்பட்ட அவல நிலையை அங்கே உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவேதான் அவர்களுடைய உள்ளக் கிடக்கையை, நாணயத்தை சந்தேகிக்க வேண்டிய கட்டத்தில் இன்றைய தினம் நாம் இருக்கிறோம்.

"SriLanka is not fighting for a political solution, but to protect and preserve its unity and integrity"

என்று இலங்கைப் பிரதமர் பேசுகிறார். அமைதியை ஏற்படுத்தியபின்தான் நாங்கள் பேச்சுவார்த்தைக்கு வருவோம் என்றால் அமைதி எப்போது ஏற்படும்? நான் கேட்க விரும்புவதெல்லாம், இந்த அரசு கேட்பதெல்லாம் அமைதி என்றால் சுடுகாட்டு அமைதியா? Do they want peace of the graveyard?

www.padippakam.com



In Sri Lanka, there is no rule of law but only the law of jungle. ஆகவே, இலங்கை அரசினுடைய போக்கு, அது கையாளுகின்ற தன்மை, அதனுடைய பண்பு, அதனுடைய இயல்பு இவற்றை எல்லாம் பார்க்கிறபோது அவர்களுடைய பேச்சுவார்த்தையைப் பற்றியோ அல்லது அவர்கள் கையாளுகின்ற முறையைப் பற்றியோ கட்டாயம் **தீர்க்கமாக சிந்தித்து தமிழ் மக்களுக்குச் சொல்ல நாம் கடமைப் பட்டிருக்கிறோம்.**

இன்னும் ஒரு வேடிக்கை என்னவென்றால், அந்த நாட்டின் பிரதமர் கூறுகின்றார். "We want to tell our friends in the world that they should help us to destroy those sections which are trying to destroy democracy in this country." அவர்களுடைய நாட்டிலே உள்ள ஜனநாயகத்தை அழிப்பதற்கு முயலுகின்ற சில பிரிவினரை அழித்து ஒழிப்பதற்கு உலகிலுள்ள அவர்களின் நண்பர் உதவி செய்யவேண்டும் என்கிறார். நான் கேட்கவிரும்புவது, Is there any such thing as democracy in Sri Lanka?

இலங்கையில் ஜனநாயகம் என்று ஒன்று உண்டா? பாராளுமன்றத்திலே இருப்பவர்கள் மக்களைச் சந்தித்து தேர்ந்தெடுக்கப்படாமலேயே தங்களுடைய பாராளுமன்ற காலத்தை நீட்டிக்கொண்டார்களே, இதுதான் ஜனநாயகமா? அவ்வளவு சொல்வானேன் ஜனநாயகம் என்பதே தமிழர்கள் வாழுகிற இலங்கையின் கிழக்குப் பகுதியிலும், வடக்குப் பகுதியிலும் எங்கே இருக்கிறது. **இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து ஒன்று காவல் துறை ராஜ்யம், இல்லை என்றால் இராணுவ இராஜ்யம்.** They are under military rule. They never enjoyed democracy.

**ஒருவேளை சிங்களவர்களுக்கு வேண்டுமானால்**

www.padippakam.com



**ஜனநாயம் இருக்கலாம், தமிழர்களைக் கொல்லுகிற ஜனநாயகமாக அது இருக்கலாம்.**

...போராட்டத்தில் முன்னிலையில் இருக்கக்கூடிய அந்த மக்களுக்கு வேண்டிய உதவிகளை, அந்த மக்களுக்கு வேண்டிய உற்சாகத்தையும் தருவதிலேதான், அந்த மக்கள் இத்தகைய போக்கை முறியடிப்பதற்கும், **இலங்கை அரசின் முகமூடிகளை கிழித்து எறிவதற்கும் வாய்ப்பு இருக்குமே** தவிர, நாம் இங்கே இருந்து கொண்டு அரசியல் தீர்வா, இராணுவத் தீர்வா என்று பேசுவது மட்டும் சரியாக ஆகாது. அரசியல் தீர்வுதான் காணவேண்டுமே தவிர இராணுவத் தீர்வு நிரந்தரமான தீர்வு ஆகாது.

விடுதலை இயக்கங்களின் வரலாற்றை படித்தவர்களுக்குத் தெரியும். விடுதலை உணர்வு கொண்டவர்கள் சிறுபான்மை மக்களானாலும் சரி, அந்த மக்களுடைய பெரும்பான்மை மக்களானாலும் சரி, எந்த பெரிய ஏகாதிபத்திய வல்லரசு களானாலும் சரி அவர்களை வீழ்த்த முடியாது என்பது உலக நாடுகளின் வரலாறு.

வேண்டுமானால் சில வெற்றிகள் அங்கும் இங்கும் கிடைக்கலாம். சில 'பேட்டல்களில்' வெற்றி பெறலாம். War will be won by liberation forces. ஆகவே ஒரு இயக்கத்தின் மீது இரண்டு மூன்று குண்டுகள் போடுவதானாலும் 100, 200 பேர்களின் மீது தாக்குதல் நடத்தி கொன்றுவிட்டதனால் வெற்றி பெறலாம் என்று நினைத்தால் அது பகல் கனவாக முடியுமே தவிர வேறு அல்ல.

உறுதிகொண்ட ஒரு 'டிட்டர்மைண்ட்'. பியூப்பிள் ஒரு நேஷனாலிட்டி உள்ள பியூப்பிள் அவர்களுடைய பிரச்சினையை அறிந்து நியாயம் வழங்குவதன் மூலமாகத்தான் எந்த

www.padippakam.com



பிரச்சினைக்கும் தீர்வு காண முடியுமே தவிர ராணுவ தீர்வை நிச்சயமாக காண முடியாது.

இராணுவத் தீர்வை மேற்கொண்ட நாடுகள் உலகத்தில் எப்படியெல்லாம் பிரிந்தன, என்ன வகையிலே சீர்குலைந்தன என்பதைத்தான் பார்க்க முடியுமே தவிர, நிச்சயமாக அவர்களுக்கு அதனால் பலன் விளைந்ததாக வரலாறு கிடையாது.

அப்படி பார்க்கிறபோது இன்றைக்கு இலங்கையிலே இருக்கிற தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பாக விடுதலைப் புலிகள் இயக்கம் எல்.டி.டி.இ. அமைப்பினர் இருக்கின்றார்கள். அவர்களுக்கு துணையாக ஈரோஸ் இருக்கிறார்கள். மற்ற இயக்கங்கள் இல்லை என்று சொல்லவில்லை. இருக்கிறார்கள். அங்கே இருந்து அவர்களால் பணியாற்ற முடியவில்லை.

சிங்கள இராணுவத்திற்கு எதிராக அங்கே **விடுதலை புலிகள்தான் தன்னந்தனியாக நின்று போராடி உயிர்த் தியாகம் செய்து வருகிறார்கள். சொல்வார்களே கண்ணீரும் செந்நீரும் கொட்டி சுதந்திர பயிர்வளர்த்தார்கள்** என்று அப்படி அவர்கள் வளர்க்கிறார்கள்.

பொதுவாக ஆண்கள் செந்நீரை சிந்துவார்கள், பெண்கள் கண்ணீரை சிந்துவார்கள். ஆனால் இலங்கை தமிழ் பகுதியைப் பொறுத்தவரைக்கும் பெண்களும் ஆண்களோடு சேர்ந்து செந்நீரைச் சிந்துகிறார்கள். ஆண்கள் ஆனாலும் சரி பெண்கள் ஆனாலும் சரி அத்தனை பேரும் சேர்ந்து **இலங்கை அரசின் சர்வாதிகாரப் போக்கை, அந்த பாசிச போக்கை எதிர்த்து உயிர்த் தியாகம் செய்கிறார்கள். அவர்களை எல்லாம் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களுக்கு உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.**

ஜனவரி மாதத்திலிருந்து ஏற்பட்ட பொருளாதார தடையின்

www.padippakam.com



காரணமாக நலிந்து மெலிந்து வாடி வதங்கி வாழ வழியற்று, வீட்டிலும் கூட இருக்க முடியாமல் வீதியிலே கூட நடமாட முடியாமல் காடுகளிலேயும் புதர்களிலேயும் மறைந்து வாழ்கிற லட்சோபலட்சம் ஏழைகளுக்கு அவர்களுக்கு உண்ண உணவு உடுக்க உடை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுக்க வேண்டிய மருந்துகள் கொடுக்கக்கூட வழி இல்லாத நிலைமை இருக்கிறது.

**நம்முடைய தாய் உள்ளம்கொண்ட முதல்வர் அவர்கள்** அந்த மக்களுக்கு மனிதாபிமானத்தோடு மனித நேயத்தோடு நம்மால் ஆன உதவிகளை, அவர்களுக்கு வேண்டிய உணவு வகைகளை அல்லது மருந்துகள் மற்றவைகள்' கொடுக்கும் வகையில் அங்கேயிருந்து ஓடி இங்கே வந்திருக்கக்கூடிய தமிழர்களுக்கும் அங்கேயே இருக்கிற தமிழர்களுக்கும் ஏதாவது வகையில் பயன் தர முடியுமா என்று யோசித்துப்பார்த்தது. அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதிலே புரட்சித் தலைவர் அவர்கள் தனது தலையாய விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இலங்கைத் **தமிழர்களுக்காகப்** பாடுபடுகின்ற **இயக்கங்களுக்கு நாம் நம்முடைய ஆதரவையும் உதவியையும் செய்கிற அதே நேரத்தில்** பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுகிற வகையிலும், இலங்கைத் தமிழர்களுக்கு தமிழ் நாட்டு மக்கள் ஏற்கனவே சுமார் ஐந்து கோடி ரூபாய் நிதியுதவியாக தந்திருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் அந்த ஐந்து கோடி ரூபாயிலிருந்து உடனடியாக **நான்கு கோடி ரூபாயை பாதிக்கப்படுகிற அந்த மக்களுக்கு உணவு வகையிலும், உடுக்கிற உடை வகையிலும், மருந்து வகையிலும், மற்ற மற்ற தேவைகளிலும் உதவிட அந்த மக்களை காப்பாற்றுவதற்கு அரசு இன்றே உத்தரவு வழங்கவிருக்கிறது** என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

www.padippakam.com



...இந்த அரசைப் பொறுத்தவரையில் புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையிலும் இன்றைக்கு அந்தத் *தமிழ் மக்களுக்காக, இங்கே மட்டுமல்ல, அங்கேயும் போராடுகிற மக்களுக்காகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும் என்னென்ன உதவிகளைச் செய்யவேண்டுமோ அதை இந்த அரசு செய்ய முன்வரும்." (சட்டமன்றத்தில் 27-4-87)*

**அன்றைய நிகழ்வுகளை திரு.பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் நினைவு கூர்கிறார்.**

"எம்.ஜி.ஆர் பிரபாகரன் நட்புத்தான் பணம் கொடுக்க வைத்தது. நான்தான் கொடுத்தேன் நாலுகோடி மூன்று கோடி எல்.டி.டி. க்கும் ஒரு கோடி ஈரோசுக்கும்.

"இந்த பணம் ஒரு நாள் அரசு ஊழியர்களிடம் இருந்து வசூல் செய்ததை எடுத்து கொடுத்தார். அப்ப வந்து தமிழர் பகுதியில், இலங்கை அரசு குண்டுமாரி பொழிந்தது. அங்கவுள்ள மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்கணும்னா இராசீவ்காந்தி முன்வரல. நீங்க கொடுக்கலனா பரவாயில்ல நாங்க பணம் கொடுக்கிறோம் என்றார் எம்.ஜி.ஆர். அந்த மக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ளட்டும் என்று சொல்லி கொடுத்தார். உடனே இராசீவ்காந்தி அலறியடித்துக்கிட்டு இன்னொரு நாட்டுல போர்க்களம் நடத்திறத்துக்கு நம்ம நாட்டுல இருந்து பணம் கொடுத்தா என்ன ஆகிறது அந்த மாதிரி கொடுக்க கூடாது அப்படினு சொல்லி அலறியடிச்சுகிட்டு ஆளை அனுப்பிச்சாரு. அப்ப நாங்க சொன்னோம் மனிதாபிமான பணிகளுக்காக எல்.டி.டி.ரியும் ஈரோசும் ஒரு அமைப்பு வைச்சிருக்காங்க அதுக்கு பணம் கொடுத்தோம்.

"அதாவது அன்று காலை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை பார்க்கிறேன். 'என்ன எல்லோரும் நம்மள கைவிட்டுடாங்க நாம ஏதாவது பண்ணணும்னாரு. அதோடு நம் ஆட்கள் சண்டை போடுவதற்கு ரெடியா இருக்காங்க, பணம்

www.padippakam.com



இல்ல ஆயுதம் வாங்குவதற்கு, பணம் கொடுத்திடுவோம் பாதுகாத்துக் கொள்ளட்டும்' என்றார். சரினு ஒத்துக்கிட்டு வீட்டல இருந்து நேரபோய் நாலுகோடி அறிவிச்சு பேசுகிறோம்.

"அப்ப என்ன சொல்கிறாரு **இதனால ஆட்சி போனாலும் பரவாயில்லை பணம் கொடுத்திடுவோம்.** அதாவது இந்திய அரசாங்கத்தை மீறி, அரசியல் சட்டத்தை மீறி, அன்னிய நாட்டு உறவுகளுக்கு பாதகமாக இலங்கையில் போராடுகின்ற விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு நிதி உதவி ஒரு அரசாங்கமே செய்யுதுனா, அது சட்டவிரோத நடவடிக்கை நம்ம ஆட்சியை கலைப்பாங்க, கலைச்சாக்கூட பரவாயில்லை நம்ம வெளிய போயிரலாம்னு உறுதியாக இருந்தாங்க."

கடுமையான நெருக்கடியில் தவித்துக்கொண்டிருந்த ஈழமக்கள் தமிழ்நாடு அரசின் இந்த முடிவால் பெரிதும் ஆறுதல் அடைந்தனர். அவர்கள் நெஞ்சில் மகிழ்ச்சியும், நம்பிக்கையும் ஏற்பட்டது.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அரசின் முடிவை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வரவேற்றதோடு, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இது ஒரு 'திருப்பு முனை' என்று கூறியது 'ஈரோஸ்' இயக்கமும் தனது வரவேற்பை தெரிவித்துக் கொண்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் மே நாள் செய்தியில் "தமிழ் நாடு அரசும் தமிழ் நாட்டு மக்களும் எமது விடுதலை இயக்கத்திற்கு அங்கீகாரம் அளித்தது, எமது லட்சியத்திற்கும் ஆதரவளிக்க முன்வந்திருப்பது எமது போராட்டத்தின் வரலாற்றில் ஒரு முக்கியத் திருப்பம் ஆகும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

## எதிர்ப்புகளை எதிர்கொண்டார்

தமிழ் நாடு அரசின் நடவடிக்கைகளை அடுத்து, இலங்கை அரசு தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்கள் மீது பாய்ந்தது. விடுதலைப் புலிகளுக்கு எம்.ஜி.ஆர் நேரடியாக இராணுவ உதவி

www.padippakam.com



செய்ய முன்வந்துவிட்டார் என்று தனது ஆத்திரத்தைக் கொட்டியது. இதைப்பற்றி நிருபர்களிடம் செயவர்த்தனா கூறுகிறார்:

.... "இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் உள்ள தமிழர்களுக்கு உணவு, உடை, மருந்து பொருள்களை வழங்கப்போவதாக தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி.இராமச் சந்திரன் கூறியிருக்கிறார். நாங்களே உணவு அளிக்க முடியும். அதற்கு இந்திய பணம் தேவை இல்லை. உணவுப் பொருள்கள் என்றால் எம்.ஜி.ஆரின் பாசையில் ஆயுதங்கள் என்று பொருள் இருக்கலாம். விடுதலை புலிகள் இயக்கம் தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் தனிபடை." **(தினமணி 30-4-87)**

ஈழத்தமிழர்களின் பாதுகாவலராக எம்.ஜி.ஆர் அவர்கள் இருந்தத்தை செயவர்த்தனா நன்கு அறிந்திருந்தார் என்பதை அவரது பேட்டி உறுதிப்படுத்துகிறது.

கொழும்பு நகரத்தில் புத்த கோவிலுக்கு எதிரே 10,000 சிங்கள மாணவர்கள் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

இலங்கை வெளிநாட்டு அமைச்சகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை "தமிழக அரசின் இந்த நடவடிக்கை இலங்கை ஒற்றுமைக்கு எதிரானதாகும். எம்.ஜி.ஆர் கொடுத்த 4 கோடி உதவியை இந்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும்" என்றது.

***எந்தத் திசையிலிருந்து எதிர்ப்பு வந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்து ஆதரித்தார் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.***

www.padippakam.com



# தமிழீழத்திற்கான தடைகள்

இதனை அடுத்து அரசியல் அரங்கில் அநேக மாற்றங்கள், குளறுபடிகள். இதற்கு மத்தியிலும் எம்.ஜி.ஆர் அவர்கள், தன் கொள்கையிலும் நிலைப்பாட்டிலும் உறுதியாகவும் துணிச்சலாகவும் இருந்தார்.

**இதுபற்றி எம்.ஜி.ஆர் அவர்களின் அன்பைப் பெற்றிருந்த முன்னாள் மேலவை துணைத் தலைவரும் அப்போதைய அரசவைக் கவிஞரும் தற்போதைய அ.தி.மு.கழகத்தின் இலக்கிய அணி செயலாளருமான திரு.புலமைப்பித்தன் அவர்கள் விவரிக்கிறார்:**

"தனிப்பட்ட இன உணர்வு காரணத்தினால்தான் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரிக்க முன்வந்தார். முதலிலே உமாவுக்கு (உமாமகேஸ்வரன் என்ற முகுந்தன்) பணம் கொடுத்திருக்கிறார். தம்பிக்கு (பிரபாகரன்) பணம் கொடுத்திருக்கிறார்.

"ஆனால் அதற்கு பின்னாலே உமாவின் மீது துளிக் கூட நம்பிக்கை ஏற்படவில்லை. தம்பியின் மீது இருந்த முழுமையான நம்பிக்கை காரணமாக அவர் ஒருவர் மட்டும்தான் களத்தில் இருப்பார் என்று முடிவு செய்த காரணத்தினால் எவ்வளவு என்று யாருக்கும் தெரியாத அளவுக்கு உதவி செய்தார்.

"ரிசர்வ் பேங்கில் இருந்து தமிழ்நாட்டு அரசின் சார்பாக 4 கோடி ரூபாய் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு கொடுத்தார் என்றால், அவர் எந்த அளவுக்கு மிகத் துணிச்சலோடு இருந்தார் என்பதை அறியலாம்.

"தமிழீழம் விடுதலை பெற்றுவிடும் என்கிற ஒரு முழுமையான நம்பிக்கை உருவாகிற சூழ்நிலையில் தமிழீழம் விடுதலை பெறுவது, தங்களுக்கு மிகவும் கெடுதலான காரியமாக அமைந்துவிடும் என்று நம்பினார்கள் இந்தியத் தரப்பினர்.

www.padippakam.com



"அப்போது செயவர்த்தனாவும் நானும் இவங்களோடு போராடி சாவதைக் காட்டிலிலும், வேற ஒருவர் வந்து போர் நடத்தட்டும், நாம் வேடிக்கை பார்ப்போம் என்கிற அடிப்படையில் மிக இராசதந்திரமாக ஒப்பந்தத்தை வரவேற்றார்.

"இலங்கை அமைச்சரவையில் செயவர்த்தனாவிடத்திலே அத்துலத் முதலி போன்றவர்கள் எல்லோரும் கடுமையாக கேள்வி கேட்டனர். அப்போது செயவர்த்தனா சொன்ன பதில் என்ன தெரியுமா? 'என்னை பிரபாகரனோட காலில் விழச் சொல்லுகிறீங்களா' என்றார். அப்படி என்றால் என்ன பொருள் என்றால், இந்திய அமைதிப் படை வராமல் இருந்தால் பிரபாகரன் காலில் விழவேண்டிய நிலை செயவர்த்தனாவுக்கு ஏற்பட்டிருக்கும்.

"செயவர்த்தனா அமைச்சரவையில் நிதி அமைச்சராக இருந்தவர் ரோனி டி மெல். இவரும் அமைச்சரவைக் கூட்டத்திலேயே சொன்னார்: "அப்படி இலங்கை - இந்திய ஒப்பந்தம் மட்டும் கையெழுத்து ஆகாமல் இருந்திருக்குமானால் 6 மாதத்தில் தமிழீழம் விடுதலை பெற்று போயிருக்கும். அது ஒரு மிகப்பெரிய இந்த நாட்டை பாதுகாப்பதற்கான இராசதந்திர முயற்சியே தவிர அதை குறை சொல்லக் கூடாது"

"எம்.ஜி.ஆர் அவர்களின் முயற்சிக்கு பின்னாலே தமிழீழம் மிகப்பெரிய அளவில் முன்னேறி வந்துவிடும் என்கிற காரணத்திலேயேதான் இந்திய துணை கண்டத்திலிருந்து அந்த ஒப்பந்தத்தை போட்டார்கள்.

"அப்போது அந்த ஒப்பந்தத்தை எம்.ஜி.ஆர் அவர்கள் ஆதரிக்கவில்லை. மைய அமைச்சராக இருந்த நட்வர்சிங் ஒரு முறை இராமாவரம் தோட்டதிற்கு இந்த ஒப்பந்தச் செய்தியை பேச வந்தபோது இதை என்னிடத்தில் பேசவே கூடாது என்று கடுமையாகவும் கோபமாகவும் சொல்லி அனுப்பி வைத்து விட்டார். அதற்கு பின்னால் சூலை 29ந் தேதி ஒப்பந்தம் கையெழுத்தானது.

www.padippakam.com



'இந்த தவறான ஒப்பந்தத்திற்கு நானும் உடந்தையாக இருந்துவிடக்கூடாது' என்கிற எச்சரிக்கை உணர்வில், ஆகஸ்ட் 2ம் தேதி சென்னை கடற்கரையிலேயே இராசீவ்காந்திக்கு பாராட்டு நடந்த நேரத்தில் 'நான் இங்கே இருக்கக் கூடாது' என்றும் 'விடுதலைப் புலிகள் கையெழுத்திடா ஒப்பந்தத்திற்கு நடக்கும் பாராட்டுவிழா இங்கு நடக்கிறது. இதில் நான் கலந்து கொள்ளக்கூடாது' என்றும் எம்.ஜி.ஆர் நினைத்தார்.

"31 ஆம் தேதி மாலை 5 மணிக்கு தயாராகி மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு வந்துவிட்டார். பிறகு அவசரமாக ஹாட்லைன்லே டெல்லியில் இருந்து தொடர்பு கொண்டார் இராசீவ்காந்தி. நீங்க போகக் கூடாது என்றார். 31ம் தேதி போய்விட முயன்றபோது போக அனுமதிக்கவில்லை.

"அதற்கு பின்னால் அவர்களை இரண்டு மூன்று நாள் தங்கவைத்து 2ந் தேதி அவரையும் கலந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தி மேடையில் ஏற்றினார்கள். காரணம் "இதற்கு பின்னாலே ஏற்படுகின்ற பழிகளுக்கு எம்.ஜி.ஆரும் உடந்தையாக இருந்தார் என்று இருக்கட்டுமே" என்றும் 'எம்.ஜி.ஆரையும் ஒரு பகடைக்காயாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்' என்றும்தான் அவர்கள் விரும்பினார்கள்.

"அந்த விழா இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்காக இராசீவ் காந்திக்கு ஏற்படுத்தப்பட்ட பாராட்டுவிழா. அண்ணன் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு கட்டோடு பிடிக்காத விழா என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

"அதோடு அந்த விழாவில் இராசீவ்காந்தி, அண்ணன் எம்.ஜி.ஆர் அவர்களின் கையை வலுக்கட்டாயமாக தூக்குகிறார். அந்த படம் தினமணி, இன்டியன் எக்ஸ்பிரஸ் போன்ற ஏடுகளில் வந்திருக்கிறது. அப்போது எம்.ஜி.ஆர் அவர்களின் முகத்தைப்

www.padippakam.com



பார்த்தாலே தெரிந்துவிடும். ஒப்பந்த உடன்பாட்டை அவர் ஏற்கவில்லை என்பதை அந்தப் படம் தெளிவுபடுத்தியது.

"விழா முடிந்து அமெரிக்கா செல்வதற்கு முன்பு சில முக்கியமானவர்கள் எம்.ஜி.ஆர். அவர்களை சந்தித்தது பற்றி புகைப்படங்களோடு பத்திரிகைகளில் வந்துள்ளது. அந்தப் படத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மை விளங்கும்.''

**இந்திய இலங்கை ஒப்பந்தம் கொழும்பில் கையெழுத்தான சமயம், திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் கொழும்பில் இருந்தபோது அங்கு நடந்ததை கூறுகிறார்:**

"ஒப்பந்தம் போடுவதற்கு இராசீவ் காந்தி அங்கு போனார். அப்போது என்னையும் அழைத்துக்கொண்டு போனார்கள். அப்போதுதான் சிங்கள சிப்பாய் ஒருவன் இராசீவ் காந்தியை அடித்தான். அதன்பிறகு செயவர்த்தனா வீட்டில் டீ பார்ட்டி நடந்தது. அப்போது செயவர்த்தனாவிடம் என்னை அறிமுகம் செய்யும்போது இவர்தான் எம்.ஜி.ஆர் அமைச்சரவையில் உள்ள இராமச்சந்திரன் என்றவுடன் செயவர்த்தனா என்னிடம் சொன்னது:

"YOU TELL MGR, NOT TO TROUBLE ME ANY FURTHER

இனிமேல் எனக்கு தொந்தரவு கொடுக்கவேண்டாம் என்று எம்.ஜி.ஆரிடம் நீங்கள் சொல்லுங்கள்."

எம்.ஜி.ஆர் அவர்கள் ஈழத்தமிழரின் போராட்டத்திற்கு வெளிப்படையாக பணம் கொடுத்ததை கண்டு பயந்த பிறகுதான் செயவர்த்தனா இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார் என்பது செயவர்த்தனாவின் வேண்டுகோளில் இருந்து புலனாகிறது.

**திரு. பழ.நெடுமாறன் அவர்கள் கூறியது வருமாறு:**

அந்த ஒப்பந்தம் போட்டபோது எம்.ஜி.ஆரும் இலங்கைக்கு வரவேண்டும் என்று இராசீவ்காந்தி நினைத்தார். இவர் அழைப்பார் என்று தெரிந்தவுடனே உடல்நலம் இல்லை என்று சொல்லி

www.padippakam.com



மறுத்துவிட்டார். அப்புறம் பண்ருட்டி இராமச்சந்திரனையாவது கட்டாயம் அனுப்புங்க என்று இராசீவ்காந்தி சொன்ன பிறகு, அவரை மட்டும் அனுப்பினார்.

அதுக்கு அப்புறம் என்ன நடந்தது என்றால் இராசீவ் காந்தியுடைய சாதனையை பெரிய வெற்றிவிழாவாக கொண்டாடுவதற்கு, சென்னை கடற்கரையில் காங்கிரஸ் தலைவர் மூப்பனார் ஏற்பாடு செய்து எம்.ஜி.ஆரையும் கூப்பிட்டார். அவர் மறுத்துவிட்டார்.

அந்த விழாவுக்கு முன்பே எம்.ஜி.ஆர். அமெரிக்காவிற்கு புறப்படுவதற்கு ஏற்பாடு செய்து, விமான நிலையத்திற்கும் சென்றுவிட்டார். அமைச்சர்கள், அதிகாரிகள், கட்சித் தொண்டர்கள், பொதுமக்கள் என்று எல்லோரும் வழியனுப்ப கூடிவிட்டார்கள்.

கடைசி நேரத்தில் எம்.ஜி.ஆர்.இந்த கூட்டத்திற்கு இல்லாமல் போனால் கூட்டம் சிறப்பாக இருக்காது. அதனால் அவரை எப்படியாவது இருக்க வைக்கணும் என்று இராசீவ காந்தி முடிவுசெய்து எம்.ஜி.ஆரிடம் தொடர்புகொண்டு 'கட்டாயம் இருந்தே ஆகவேண்டும். நீங்கள் போகக்கூடாது' என்று கடைசி நேரத்தில் அவரது பயணத்தை ரத்து செய்தார்கள்.

அமெரிக்காவிற்கு சிகிச்சைக்காக புறப்பட்டபோது நானும் திராவிடர் கழக பொதுச் செயலாளர் வீரமணியும் போய் சந்தித்தோம். அப்போது ரொம்ப மோசமான நிலைமையில் அவர் இருந்ததால், எங்களுக்கு ரொம்ப கஷ்டமாக இருந்தது.

நாங்கள் போய்ப் பார்த்தவுடன் என்ன விசயம் என்று கேட்டார். "இல்லை, ஒரு விசயத்தை மட்டும் வலியுறுத்தி சொல்லுவதற்கு வந்திருக்கிறோம்'' என்றோம்.

"உங்களுக்கு முன்னால் முதலமைச்சராக இருந்தவர்களுக்கும்

www.padippakam.com



உங்களுக்கு பின்னால் முதலமைச்சராக வரப்போகிறவர்களுக்கும் கிடைக்காத பெரும் வாய்ப்பு உங்களுக்கு கிடைத்து இருக்கிறது. ஈழத்தமிழர்கள் விடுதலைக்கு போராடினார்கள். அப்போது தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் எல்லா உதவிகளும் செய்து, ஈழத்தமிழர்கள் விடுதலை பெறுவதற்கு துணையாக இருந்தார் அப்படிங்கிறதுதான் வரலாற்றில் இடம் கொடுக்கும். அதனால் நீங்கள் செய்கின்ற உதவிகள் தொடர வேண்டும் என்று சொன்னவுடன் ஏதோ சொல்வதற்கு முயற்சி செய்தார். அவரால் பேச முடியவில்லை. என் கையை இழுத்து அவர் நெஞ்சில் வைத்துக்கொண்டார். அவர் கண்ணுல இருந்து கண்ணீர் ஓடிற்று. அதைப் பார்த்து வீரமணியும் நானும் ஒரு மாதிரி ஆகிவிட்டோம் அதற்குப்பிறகு அமெரிக்காவுக்குப் போனார். உடல்நலம் சரியாகவில்லை. நல்லா இருந்திருந்தால் இன்னும் சில விசயங்கள் வெளிப்படையாக செய்திருப்பார்.

"இந்திய ராணுவம் பிரபாகரனை சுற்றி வளைத்திருக்கிறது என்ற செய்தி வந்தபோது நாங்கள் பதறிப்போனோம். உடனடியாக வாசிங்டனில் இருந்த எம்.ஜி.ஆரை தொடர்பு கொள்ள முயற்சித்தோம். அவருடைய உதவியாளர்தான் பேசினார்.

"உதவியாளரிடம் விசயத்தை சொல்லி எம்.ஜி.ஆர் அவர்களிடம் எப்படியாவது தெரியப்படுத்துங்கள் என்றோம். அவர் தெரியப்படுத்திவிட்டு மீண்டும் எங்களோடு பேசினார். இன்னும் இரண்டு நாளில் வாசிங்டனுக்கு இராசீவ்காந்தி வருகிறார். அவரை சந்தித்து பேசுவதற்கு குறிப்பு அனுப்புங்கள் என்று எம்.ஜி.ஆர் கூறியதை சொன்னார்.

"நானும் வீரமணியும் குறிப்பு தயார் செய்தோம். அதை உடனே தொலைநகல் (பேக்ஸ்) மூலம் அனுப்பினோம். அந்த உடல்நிலையிலும் இராசீவ்காந்தியை போய் எம்.ஜி.ஆர் சந்தித்தார். இராசீவ் காந்தியிடம் நாங்கள் அனுப்பிய குறிப்பையும்

www.padippakam.com



கொடுத்து, "பிரபாகரனுக்கு ஆபத்து வரக்கூடாது" என்றிருக்கிறார். அதை இராசீவ்காந்தி அலட்சியப்படுத்திவிட்டு "உங்க உடம்பை பாருங்க" என்றிருக்கிறார். அதன்பிறகு எம்.ஜி.ஆர் ரொம்ப வருத்தப்பட்டார் என்று சொன்னார்கள்."

## நோயுண்டபோதும் ஓயாதபணிகள்

எம்.ஜி.ஆர் அவர்கள் தனது உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த போதும் ஈழத்தில் நடைபெறும் ஒவ்வொரு அசைவுகளையும் கவனித்துக்கொண்டு இருந்திருக்கிறார்.

திலீபன் அவர்கள் இந்திய அரசுக்கு ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து பட்டினிப்போர் தொடங்கி 12 நாட்கள் ஒரு சொட்டு தண்ணீர்கூட குடிக்காமல் இருந்து 26-9-87ல் மடிந்துபோனார். இச்செய்தி அறிந்த எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழக மக்கள் சார்பிலும் தமிழக அரசு சார்பிலும் ஆழ்ந்த வருத்தம் தெரிவித்தார்.

1986ஆம் ஆண்டு பிரபாகரன் அவர்கள் பட்டினிப்போர் தொடங்கியபோது எப்படி உறுதியோடு இருந்தாரோ அதே வழிமுறையில்தான் திலீபன் அவர்களும் இருந்தார். பிரபாகரன் அவர்கள் பட்டினிப்போருக்கு மதிப்பளித்தார் எம்.ஜி.ஆர். எம்.ஜி.ஆர் அவர்கள் கடைப்பிடித்த வழிமுறைகளை அமைதிப்படையை அனுப்பிய இராசீவ்காந்தியும் பின்பற்றி இருந்தால், திலீபன் உயிர் காப்பாற்றப்பட்டிருக்கும். அதோடு காந்திய வழிமுறை தமிழீழத்தில் மதிக்கப்பட்டிருக்கும். இந்த நல்ல வாய்ப்பை நழுவவிட்டதன் காரணமாக காந்திய அறப்போரை கேலிக்கூத்தாக்கிவிட்டார்கள்.

விடுதலைப்புலிகள் பதிமூன்றுபேர் சிங்கள அரசால் கைது செய்யப்பட்டபோது, சயனைட் சாப்பிட்டு உயிரிழந்ததை அறிந்து, அமெரிக்க மருத்துவமனையில் இருந்தபடியே எம்.ஜி.ஆர் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருந்ததாவது:

www.padippakam.com



"விடுதலைப்புலிகள் 13 பேர் இறந்துவிட்டதை அறிந்து பெரும் அதிர்ச்சியும் மிக்க மனவேதனையும் அடைகிறேன். இறந்தவர்களில் விடுதலைப்புலிகளின் தலைவர் குமரப்பாவும், புலேந்திரனும் உள்ளடங்குவர் என்ற செய்தி வேதனையைப் பலமடங்கு அதிகரிக்கிறது. இறந்துவிட்ட விடுதலைப்புலிகளின் குடும்பத்தார்க்கும் அவர்களின் தலைவர் பிரபாகரனுக்கும் தமிழக மக்களின் சார்பிலும், தமிழக அரசு சார்பிலும் எனது சொந்த முறையிலும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

**(8.10.87 விடுதலை)**

சிங்கள அரசிடம் இருந்து 13 பேர்களையும் மீட்க வாய்ப்பு இருந்தும் இந்திய அமைதிப்படை முயற்சி எடுக்கவில்லை. மாறாக ஈழத்தமிழர்களுக்கு பலவழிகளில் தொல்லை கொடுக்க ஆரம்பித்துவிட்டது. வன்முறையும் பெருமளவில் வெடித்தது.

இந்திய இராணுவம் நடத்திவரும் தாக்குதலை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று வற்புறுத்தி தமிழகம் முழுவதும் 17.10.87 அன்று முழு அடைப்புக்கு ஆதரவு அளித்து தமிழக மக்கள் கடைகளை அடைத்து தமிழக மக்களின் ஒருமித்த உணர்வை உலகுக்கு தெரிவிக்கவேண்டும் என்று எம்.ஜி.ஆர் அவர்கள் அமெரிக்காவிலிருந்து வேண்டுகோள் விடுத்தார்.

**(16.10.87 விடுதலை)**

சிங்கள இராணுவம் விடுதலைப்புலிகளை கைது செய்து சித்திரவதைக்கு ஆளாக்க முற்பட்ட நிலையிலும் அதைத் தடுத்து நிறுத்தாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த இந்திய இராணுவத்திற்கு பிரபாகரனை ஆயுதத்தை கீழே போடச்சொல்ல என்ன யோக்கியதை இருக்கிறது என்று திரு.காளிமுத்து பத்திரிக்கையாளர்களிடம் பேட்டி கொடுத்தார். மேலும் "பிரபாகரனுக்கு ஏதாவது என்றால் தமிழகம் தாங்காது. தமிழ்மாநிலம் ரத்தக்களறியாக மாறும். தமிழ்நாட்டு

www.padippakam.com



இளைஞர்களை ஆயுதம் ஏந்திப்போராட வேண்டிய அரசியல் நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கி விடக்கூடாது. இதை முதல்வரின் கருத்தாக தெரிவிக்கிறேன்" என்றார் திரு. காளிமுத்து

**(18.10.97 விடுதலை)**

திரு. இராசீவ் காந்திக்கு எம்.ஜி.ஆர் அவர்கள் எழுதிய கடிதத்திற்கு மதிப்பளித்து விடுதலைப்புலிகளை தாக்குவதை நிறுத்தக்கோரியும் உடனடியாக போர்நிறுத்த அறிவிப்பை மத்திய அரசு வெளியிட வேண்டும் என்றும் தமிழகம் முழுவதும் அ.தி.மு.க.வின் 16ஆம் ஆண்டு விழாக் கூட்டங்களின் மூலம் வேண்டுகோள் விடுத்தார்கள். இனப்பிரச்சனைக்கு சுமூக தீர்வு ஏற்பட தனது முயற்சி எப்போதும்போல் தொடரும் என்பதை தெரிவித்ததோடு, தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களை இலங்கை அதிபர் செயவர்த்தனா அழைத்துப் பேச வேண்டுமென்று எம்.ஜி.ஆர் அவர்கள் எழுப்பிய கோரிக்கை அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

எம்.ஜி.ஆர். அவர்கள் அமெரிக்க மருத்துவமனையில் இருந்து 31-10-87 அன்று சென்னைக்கு வந்தடைந்தார்கள். ஒரு சில நாட்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியத் தலைவர்கள் கிட்டு, பேபி சுப்பிரமணியம், ரகீம் ஆகியோர் 4-11-87 அன்று, எம்.ஜி.ஆர் அவர்களை சந்தித்து நீண்ட நேரம் பேசினார்கள்.

**(5-11-87 விடுதலை)**

இந்திய அமைதிபடைக்கும் விடுதலைப்புலிகளுக்கும் போர் மூண்ட பிறகு கூட போராளிகளை எம்.ஜி.ஆர் அவர்கள் கைவிடவில்லை என்பதையே இந்த சந்திப்பு உறுதிப்படுத்தியது.

www.padippakam.com



## உலகத் தமிழினக் காவலர் மறைந்தார்

தனது அரசு, கட்சி, சொந்த செல்வாக்கு அனைத்தையும் பயன்படுத்தி தமிழீழம் விடுதலை பெறுவதற்கு இறுதி மூச்சுவரை வாழ்ந்த புரட்சித்தலைவர் அவர்கள் 24.12.87 ஆம் நாள் இயற்கை எய்தினார்.



தனது இறுதி மூச்சுவரை ஈழத்தமிழர்களின் பாதுகாவலராக இருந்த புரட்சித் தலைவர் அவர்களின் மறைவுக்குப் பின் எடுத்த படம்.

www.padippakam.com



உலகத் தமிழினத்தின் காவலர் மறைந்துவிட்டாரே என்று தமிழினமே கண்ணீர்க்கடலில் ஆழ்ந்தது. இனி என்ன செய்வது என்று ஈழத்தமிழர்கள் துக்கம் தாளாமல் புலம்பினார்கள். தமிழீழ மண்ணில் புலிக்கொடி இறக்கப்பட்டு துக்கம் கடைப்பிடித்தார்கள்.

**புரட்சித்தலைவர் மறைவு குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் வெளியிட்ட அனுதாபச் செய்தி:**

"ஈழத்தில் தமிழினம் அநாதையாக ஆதரவின்றித் தவித்துக்கொண்டிருக்கையில் உதவிக்கரம் நீட்டி உறுதியாகத் துணைநின்ற புரட்சித்தலைவரே, தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவும் ஊக்கமும் கொடுத்த செயல்வீரரே, தங்கள் இழப்பு வேதனைச்சகதியில் சிக்கிக் கிடக்கும் தமிழீழ மக்களின் மார்பில் தீ மூட்டுவது போலுள்ளது.

என் மீது கொண்டிருந்த அன்பையும், எமது இயக்கத்தின் மீது கொண்டிருந்த ஈடுபாட்டையும் எம்மால் மறக்க முடியாது. தமிழீழப் போராட்டத்தின் வெற்றிக்காக எம்.ஜி.ஆர் அவர்கள் மறைமுகமாக எமக்குச் செய்த உதவிகள் தமிழீழ மக்கள் மனதில் என்றும் நிலைத்திருக்கும்.

தமிழீழ மக்கள் சுதந்திரமாக வாழவேண்டுமென விரும்பிய மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களுக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றனர்."

**(25, 26-12-87 விடுதலை)**

www.padippakam.com



## தடைகள் உடைப்பு

புரட்சித்தலைவர் மறைந்ததும் தமிழீழத்திற்கான தடைகள் அதிகரித்தன. இருந்தும் அவரின் அன்பையும் ஆதரவையும் பெற்ற வே.பிரபாகரன் அவர்கள் அந்தத் தடைகளையெல்லாம் தகர்த்தெறிந்து தனது இலட்சியப்பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கிறார்.

புரட்சித் தலைவர் மறைந்த தினத்தையும் அவரது பிறந்த நாளையும் தமிழகம், தமிழீழம் மட்டுமல்லாமல் உலக நாடுகள் அனைத்திலும் உள்ள தமிழர்கள் நினைவுகூர்கிறார்கள்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எந்தெந்த வகையில் எல்லாம் உதவிகள் புரிந்தார் என்று ஆதாரத்தோடு விளக்கிய சிங்கள எழுத்தாளர் ரோகன் குணரத்ன INDIAN INTERVENTION IN SRILANKA என்ற ஆய்வு நூல் எழுதியுள்ளார். அதில் பக்கம் 182-ல் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்:

“தமிழ்நாட்டு ரா (RAW) அதிகாரி சந்திரசேகரை அனுப்பி எம்.ஜி.ஆரை சந்தித்து அவரின் கருத்துக்களை அறியும்படி கேட்டிருந்தார் ராஜீவ்காந்தி. சந்திரசேகர் எம்.ஜி.ஆர். இல்லத்திற்கு சென்றார். எம்.ஜி.ஆர் உடல்நிலை பாதிக்கப்பட்டு படுக்கையில் இருந்ததைக் கண்டு ராஜீவ்காந்தியின் கேள்விகளை அறிவித்தார். பெரும் உணர்ச்சி வசப்பட்ட எம்.ஜி.ஆர் “தமிழீழப் புலிகளை யாழ்ப்பாணத்தில் விழ விட்டுவிடாதீர்கள். தமிழீழப்புலிகள் கண்டிப்பாக காப்பாற்றப்படவேண்டும்” என்று கதறினாராம்.

இந்த நிகழ்ச்சி எம்.ஜி.ஆர் அவர்கள், தமிழீழப் புலிகள் மேல் வைத்திருந்த அன்பை காட்டுகிறது. இதுதான் புரட்சித்தலைவரின் இறுதி மூச்சுவரை அவரது நெஞ்சம் நிறைந்த ஆசையாக இருந்திருக்கிறது.

www.padippakam.com



ஈழத்தில் நடைபெறுகின்ற இனப்படுகொலை காரணமாகத் தமிழகத்தில் உள்ள ஐந்து கோடி தமிழர்களும் சீறிப் பாயக் கூடிய நிலைமையை செயவர்த்தனா நிச்சயமாக ஏற்படுத்தக் கூடாது என்று தமிழக முதல்வர் என்ற முறையிலும் அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகத்தை நிறுவியவன் என்ற முறையிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*— புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.*

படிப்பகம்